கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–14, இதழ் – 12 Volume - 14, Issue - 12	கார்த்திகைத் திங்கள் November 2023	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

அமரர் முனைவர் **K. தர்மலிங்கம்**

மேனாள் தலைவர் - சென்னை கார்காத்தார் சங்கம்

"Delivered by India Post"

www.indiapost.gov.in

குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஓரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஓரகடம் - 602 105

Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248

சென்னை கார்காத்தார் சங்கம்

101வது ஆண்டு பொதுக்குழு மற்றும் சான்றோர் படத்திறப்பு விழா

29.10.2023

வாழ்க மணமக்கள்

ஸ்ரீமுஷ்ணம், காவனூர், வண்ணமுட தெய்வத்திரு. K. திருநாவுக்கரசு பிள்ளை – நலமுடன் மீனாட்சி ஆச்சி இவர்களின் மகன் வழி பேத்தியும், பெண்ணாடம், V. இராதாகிருஷ்ணன் பிள்ளை – ஆண்டாள் ஆச்சி, இவர்களின் மகள் வழி பேத்தியும், சென்னை, முகலிவாக்கம், அன்னை வேளாங்கன்னி நகர், T. ரெங்கசாமி – சுமதி அவர்களின் குமாரத்தியுமான திருவளர்ச்செல்வி **R. சுவாதி,** B.E., (CSE), (Software Engineer, EDL Technologies Pvt. Ltd., Chennai)க்கும், ஆண்டிமடம், திருக்களப்பூர், கரம்பகுட, தெய்வத்திரு. வேணுகோபால் பிள்ளை – ராதா ஆச்சி இவர்களின் மகன் வழிப் பேரனும், சாத்துக்கூடல், தெய்வத்திரு. சிதம்பரம் பிள்ளை – அவயம்பாள் ஆச்சி இவர்களின் மகள்வழி பேரனும், கடலூர், சுப்பிரமணியபுரம் V. சரவணன் – ஞானபாக்கியம் இவர்களின் குமாரனுமான திருவளர்ச்செல்வன் **S. செந்தில்ராஜா,** D.M.E., (Senior Specialist Team Lead, Hexaware Technologies, Chennai)க்கும் விருத்தாசலம் A.R.S. திருமண மஹாலில் **25.10.2023** புதன்கிழமையன்று திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. **29.10.2023** ஞாயிற்றுக்கிழமை அன்று போரூர் ராஜ் மஹாலில் திருமண வரவேற்பு நடைபெற்றது, வரவேற்பு விழாவிற்கு வருகை புரிந்த மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தலைவர் திரு. **K.K.R.K. சுரேஷ்,** சென்னை இராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பி லிமிடெட் நிர்வாக இயக்குனர் திரு. **V.R. செந்தில்குமார்** மற்றும் நமது போரூர் சங்க அனைத்து நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மேலும் இவ்இரு வைபவங்களிலும் கலந்து கொண்டு சிறப்பித்த உற்றார் உறவினர்கள் மற்றும் கார்குல நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிறோம்.

V. சரவணன் பிள்ளை
ஞானபாக்கியம் சரவணன்
சுப்பிரமணியபுரம்
செல் : 81242 82506

T. ரெங்கசாமி பிள்ளை
சுமதி ரெங்கசாமி
காவனூர்
செல் : 98402 00981

hotel saradharam
chidambaram

ஓட்டல் சாரதாராமின்

35 வது
ஆண்டு விழா
15.11.2023

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு – குறள் (86)

பொருள் : வந்த விருந்தினர்களை மகிழ்ச்சியுடன் உபசரித்து வழியனுப்பி, வரும் விருந்தினரை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பவன், தேவர்களுக்கும் நல் விருந்தினன் ஆவான்.

THANK YOU
for being with us
நன்றி!

hotel saradharam chidambaram | Saradharam's LAKSHMI VILAS | SENTOSA | saradharam residency kattumannarkoil | Incredible India

சதாபிஷேக விழா

அரியலூர் மாவட்டம், விளாங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. **R. ராதாகிருஷ்ணன் பிள்ளை** – திருமதி **R. கற்பகம்** இவர்களின் சதாபிஷேக விழா 03.08.2023 அன்று அவர்களின் இல்லத்தில் சிறப்பாக இனிதே நடைபெற்றது.

A.S. வேணுகோபால்

V. சுதா

திருமதி. **S. பவானி** – திரு. **R. செல்வராஜ்**

திரு. **R. செந்தில்குமார்** – திருமதி. **S. ஆனந்தி**

திரு. **R. சச்சிதானந்தம்** – திருமதி. **V. பூரணி**

வாழ்த்துகின்றோம்!

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கடந்த 23 ஆண்டு காலமாக வணிகவியல் துறையில் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் பேராசிரியராகவும், இணை இயக்குனராகவும், கல்லூரி வளர்ச்சிக்குழு ஒருங்கிணைப்பாளராகவும் (Co-Ordinator College Development Council) சிறப்பாக பணியாற்றி வந்த குத்தாலம் திரு. **Dr.T. சீனிவாசன்** M.Com.,M.Ed.,M.Phil.,M.B.A.,Ph.D., அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக தொலைதூரக் கல்வி இயக்ககத்தின், இயக்குனராகப் (Director-Directorate of Distance Education) பதவி ஏற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகள்.

என்றும் அன்புடன்....

Dr.S.உமா
Dr.S.கார்த்தி சரோஜ்
மயிலாடுதுறை,
செல் : 94420 06295.

M.முத்து வீரமணிகண்டன்
Dr.S.பிரீத்தி சரோஜ்
செல்வன். **M.கவின் கிருத்திக்**
பெங்களூரு.

வாழ்த்தி மகிழும்
உறவினர்களும்,
நண்பர்களும்...

R.சரவணன்
S.ஜெயந்தி
கோயம்புத்தூர்

S.கல்யாணம்
S.சாந்தி
இளையபெருமாள்நல்லூர்.

CHIDAMBARAM SPIRITUAL STAY

146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM

தில்லை நடராஜர் திருவருளால், தில்லை நடராஜர் பெருமானை தரிசிக்க வருகை தரும் யாத்திரிகர்களுக்கும், ஆன்மீக சுற்றுலா பயணிகள் மற்றும் சஷ்டியப்த பூர்த்தி, பீமரதசாந்தி, சதாபிஷேகம் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கும் வரும் உறவினர்கள், சிதம்பரம் கனகசபை நகரில் 40 நபர் வரை தங்க ஏதுவாக A/c. வசதியுடன் கூடிய ரூம்கள் உள்ளன. மேலும் குழுவாக தங்குவதற்கு A/c. வசதி இல்லாத கூடமும் உள்ளது. எங்கள் விடுதி பொதுமக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களையும் பெற்று வருகிறது. தாங்கள் வந்து தங்கி எங்களது உபசரிப்பினை ஏற்று மகிழுங்கள்.

இதன் மற்றுமொரு ஸ்தாபனம் உதகை (OOTY)யில் சுற்றுலாப்பயணியர் தங்குவதற்கு விரைவில் செயல்பட உள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.அங்கும் தங்களது ஆதரவை தொடர்ந்து நல்கிட வேண்டுகிறோம்.

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.

9790292444, 9790215833

முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்

இதழின் உள்ளே....

நட்பும் உறவும்..... 14

சொந்த கார்.... வாடகை கார்..... 17

குடியரசும் ஜன நாயகமும்..... 20

சிறுவர் பகுதி..... 24–27

மணமகன் / மணமகள் தேவை 45–48

கார்த்திகை தீபத்தின் சிறப்பு..... 51

சங்க நிகழ்வுகள் 56

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

ஆயுட் காலமும் ஆரோக்கியமும்

கடந்த காலங்களை விட தற்காலத்தில் லாஞ்சிடி ஆஃப் லைஃப் என்னும் மனிதனின் ஆயுட் காலம் அதிகரித்திருப்பதை நாம் அறிவோம் புதிது புதிதாக தோன்றும் வியாதிகளுக்கு ஏற்ற மருந்துகளையும் கண்டு பிடித்திருப்பதால் ஆயுட் காலம் நீடித்துள்ளது முன்பெல்லாம் சஷ்டியப்த பூர்த்தி என்னும் 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தவர்களே குறைவாக இருந்தனர் ஆனால் தற்போது சதாபிஷேகம் என்னும் 80 வயது ஆனவர்களை அதிகமாகப் பார்க்கிறோம்.

ஆனால் நீடித்துள்ள ஆயுட் காலத்தில் கடந்த காலங்களைப் போல் மக்கள் ஆரோக்கியமாக வாழ்கிறார்களா என்று கேட்டால் முழு மனதுடன் ஆம் என்று சொல்ல நம்மால் இயலாது அந்தக் காலங்களில் நம் முன்னோர்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தல் வயல் வேலைக்கு நடந்தே செல்லுதல் மற்றும் பெண்கள் ஆட்டுக் கல் அம்மி இவற்றில் அரைத்தல் போன்ற உடல் உழைப்பைக் கொண்டே அன்றாட வாழ்வை நடத்தினர் ஆனால் இப்போதெல்லாம் அவற்றுக்கெல்லாம் மோட்டார் பம்பு செட், ஷவர், கிரைண்டர், மிக்ஸி, என எல்லாமே எந்திர மயமாகி விட்டது ப்ளம்பர், தச்சர், கொல்லர் போன்றவர்கள் கூட அப்போது தாங்களே கைகளால் செய்த வேலைகளுக்கு எல்லாம் இப்போது மின்சார கருவிகளை பயன் படுத்துகின்றனர் இப்போது படித்த இளைஞர்களால் கூறப்படும் ஆர்கானிக் உரமிட்டு வளர்த்த பயிர்களிலிருந்து வந்த காய்கறி அரிசி போன்ற உணவுப் பொருட்களை அந்தக் காலத்திலேயே நம் முன்னோர்கள் பயன் படுத்தி வந்தார்கள்.

இவை ஏதும் இல்லாமலே நாம் தற்காலத்தில் நீண்ட ஆயுட் காலத்தைப் பெற்றுள்ளோம் பணமோ சொத்தோ சேர்ப்பது முக்கியமல்ல அவற்றை பாதுகாப்பாக் சேமித்து வைப்பது முக்கியம் அதே போல் நீண்ட ஆயுட்காலத்தப் பெற்றால் மட்டும் போதாது அந்த நீண்ட ஆயுட் காலத்தில் நோய் நொடி இல்லாமல் ஆரோக்கியமாக வாழ வேண்டியதும் முக்கியம் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பார்ப்போம்.

உணவு முறை :-

✣ தினமும் சரியான நேரத்தில் உண்ண வேண்டும்.

✣ காலைச் சிற்றுண்டியை கண்டிப்பாகத் தவிர்க்கக் கூடாது.

✣ உணவை நன்றாக மென்று சுவைத்து உண்ண வேண்டும்.

✣ பச்சைக் காய்கறிகள் கீரைகள் பழங்கள் முளை விட்ட தானியங்கள் ஆகியவற்றை தினமும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

✣ தேவைக்கு சிறிது குறைவாகவே உண்ண வேண்டும்.

✣ கூடிய வரையில் உணவில் உப்பு சர்க்கரை ஆகியவற்றைக் குறைக்க வேண்டும்.

தண்ணீர் :-

✣ சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரம் முன்னும் பின்னும் தண்ணீர் குடிக்காமல் இருத்தல் நல்லது.

✣ காலையில் எழுந்தவுடன் 2 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

✣ தினமும் 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

✣ தூங்கப் போகும் முன்பாக 1 கப் சூடாகப் பால் அருந்துவது நல்லது.

உடற்பயிற்சி :-

அந்தக் காலங்கள் போல் உடல் உழைப்பு சார்ந்த வேலை இன்று பலருக்கும் இல்லை ஆதலால் உடல் உழைப்பை நாமே உருவாக்கலாம்.

✣ 30 நிமிட நடை அல்லது வேறு உடற் பயிற்சி தினமும் அவசியம்.

✣ தினமும் வியர்க்கும் வரை உடற்பயிற்சி செய்யலாம்.

✣ யோகாசனப்பயிற்சி தினமும் செய்வது நல்லது.

✣ சுத்தமான காற்று வசதி உள்ள இடத்தில் உடற்பயிற்சி செய்வது அவசியம்.

தூக்கம்

✣ தினமும் 7– 8 மணி நேரம் தூக்கம் அவசியம்.

✣ சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து உறங்க வேண்டும்.

✣ உறங்குவதற்கு சற்று முன் காபி டீ குடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

✣ அதிகாலை எழுந்திருப்பது நல்லது.

மருந்து எடுத்துக் கொள்ளுதல் :-

அவ்வப்போது சர்க்கரை அளவு மற்றும் ரத்த அழுத்தத்தை சரி பார்த்து மருந்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

மருத்துவர் அறிவுரை இல்லாமல் எந்த மருந்தையும் உட் கொள்ளக் கூடாது.

மேற்கண்ட ஆலோசனைகளை கூடிய வரையில் கடைப் பிடித்து நமக்குக் கிடைத்துள்ள நீண்ட ஆயுட் காலத்தை ஆரோக்கியமாக்கிக் கொள்வோம்.

சென்னை கார்காத்தார் சங்கம்,

சூளைமேடு, சென்னை – 600 094.

100 நூற்றாண்டு விழா 1922-2022

அன்புடையீர் வணக்கம்.

சென்னை கார்காத்தார் சங்கமும், சிதம்பரம் நகர கார்காத்தார் சங்கமும் இணைந்து வருகின்ற டிசம்பர் மாதம் 17ந் தேதி, 17.12.2023 ஞாயிறு மாலை 2.00 மணியளவில் சிதம்பரம் வாண்டையார் திருமண மண்டபத்தில் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவை மிகவும் சிறப்பாக நடத்த திட்டமிட்டு திரு. N. முருகன் பிள்ளை தலைமையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விழாவில் சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் A.S. இளவரசன், அமீரகம், மற்றும் திரு. V.R. செந்தில்குமார், நிர்வாக இயக்குநர் சென்னை ராதா இன்ஜினியரிங் கம்பெனி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். விழாவிற்கு கார்குல சொந்தங்கள் திரளாக வருகை புரிந்து விழாவினை சிறப்பிக்க வேண்டுகிறோம். மேலும் விழா சம்பந்தமான விபரங்களுக்கு சிதம்பரம் நகர கார்காத்தார் சங்கத்தின் தலைவர் திரு. N. முருகன் பிள்ளையவர்களை 9842197489 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

அன்புடன்

கைலை. சண்முகம், செயலாளர்

தீ கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்)

(சென்னை கார்காத்தார் சங்கம்)

சூளைமேடு, சென்னை – 600 094.

101வது பொதுக்குழு கூட்டம் மற்றும் ஆண்டு விழா

அன்புடையீர் வணக்கம்

நமது சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் மற்றும் கார்குல சான்றோர் படத்திறப்பு விழா 29.10.2023 ஞாயிறு காலை 10.00 மணிக்கு ஊர்வசி அரங்கம், பாம்குரோவ் ஓட்டல், எண். 13, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034–ல் வெகு சிறப்பாக நடைபெற்றது. பொதுக்குழு கூட்டம் இறைவணக்கத்திற்கு பின் தலைவர் திரு. சபா. சிவகுமார் தலைமையுரையுடன் துவங்கியது. வருகை புரிந்த அனைவரையும் கார்காத்தார் ஒப்புரவு ஆசிரியர் திரு. S. அன்பழகன் வரவேற்று பேசினார்கள். கார்குல சொந்தங்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலாளர் கைலை. சண்முகம் 2022–2023ம் ஆண்டிற்கான சங்கத்தின் செயல்பாடுகளை குறிப்பாக 08.01.2023ல் நடைபெற்ற சிறப்புமிகு நூற்றாண்டு விழாவை விளக்கி ஆண்டறிக்கை வாசித்தார்கள். அடுத்து பொருளாளர் திரு. S. ஞானசேகரன் வரவு–செலவு கணக்கினை சமர்ப்பித்தார்கள். அவையின் பலத்த கை தட்டுதல்களுடன் ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கை ஒப்புதல் பெறப்பட்டது. அடுத்து 2023–2024ம் ஆண்டிற்கு திரு. S. விசுவநாதன் தணிக்கையாளராக நியமனம் செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து 2023–2026ம் ஆண்டிற்கான நிர்வாகிகளை மேனாள் தலைவர் திரு. R. இளங்கோவன் அறிவித்தார்கள்.

தலைவர் : S. சோமசுந்தரம்

செயலாளர் : கைலை. சண்முகம்

பொருளாளர் : G. செந்தில்நாதன்

துணைத்தலைவர் : G. தியாகராஜன்

துணைத்தலைவர் : E. வனஜா

இணைச்செயலாளர் : S. மதிவாணன்

நிர்வாககுழு உறுப்பினர்கள் :

1. சபா. சிவகுமார், 2. S. ஞானசேகரன், 3. S. அன்பழகன், 4. A. இராமலிங்கம், 5. G. சபரிநாதன், 6. R. கார்த்திகேயன், 7. P. இரத்தினசபாபதி, 8. K. கோவிந்தராசு, 9. R. உதயகுமார், 10. S. ஞானகுமார், 11. M. முத்துகுமார், 12. K. சுப்ரமணியன், 13. B. அறிவொளி,

ஆலோசகர்களாக :

திரு. விளாகம் S. சுந்தரேசன், திரு. R. இளங்கோவன் திரு. G. சுவாமிநாதன், திரு. N. சிதம்பரம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக :

திரு. S. செல்வகுமார், திரு. T. செல்வகுமார், திரு. USSR நடராஜன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

பொதுக்குழு தீர்மானங்கள் :

கீழ்கண்ட தீர்மானங்கள் பொதுக்குழுவில் விவாதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றபட்டன.

1. கார்காத்தார் ஒப்புரவு பத்திரிகையை மேலும் மெருகூட்டும் வகையில் இணையாசிரியர்களாக G. தியாகராஜன் மற்றும் E. வனஜா ஆகியோரை நியமித்து தீர்மானம் நிறைவேறியது.

2. கீரல்வாடி பசுமை பண்ணையில் சரியான வருமானம் கிடைக்காததால் விற்பனை செய்யவும், அதேபோல் ட்ரஸ்ட்புரம் எம்பி பிளாட்ஸையும் விற்பனை செய்து அதன் மூலம் வருகின்ற பணத்தை சென்னை நகரில் அல்லது புறநகரில் கல்யாண மண்டபம் ஒன்றை வாங்கி நமது சமுதாயத்திற்கு பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டு ஏகமனதாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

3. சூளைமேடு கார்காத்தார் இல்லத்தில் கட்டிட பணிகள் முழுமையாக நடைபெற்றவுடன், கார்காத்தார் இல்லம் A பிளாக், கார்காத்தார் இல்லம் B பிளாக் என்ற பெயரில் அழைப்பது என தீர்மானம் நிறைவேற்றபடுகிறது.

4. கார்காத்தார் இல்லம் A பிளாக், சமுதாய கல்வி பணிக்கு உதவும் வகையிலும், வேலைக்கு செல்லும் மகளீர் தங்குவதற்கும் விடுதியாக செயல்பட தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கார்காத்தார் இல்லம் B பிளாக், சென்னை கார்காத்தார் சங்கம் மற்றும் கார்காத்தார் ஒப்புரவு அலுவலகம் ஒரு பிளாட்ஸிலும் மற்ற பிளாட்ஸ்கள் சர்வீஸ் அபார்ட்மெண்ட்களாக செயல்படவும் தீர்மானிக்கபடுகிறது. மேலும் வெளியூரில் இருந்து வரும் நமது சமுதாயத்தை சேர்ந்த மாணவர்கள் குறைந்த காலம் 5 நாட்கள் வரை தங்கவும், மருத்துவ உதவிக்காக வருபவர்கள் 5 முதல் 7 நாட்கள் வரை தங்கவும் வசதி செய்து தருவது எனவும் தீர்மானம் நிறைவேற்றபடுகிறது. மேற்படி வசதிகளை

ஏற்படுத்த வேண்டி தேவையான வசதிகளையும் கட்டமைப்புகளையும் செய்துதர தகுந்த நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்படுகிறது.

5. சென்னை கார்காத்தார் சங்கத்தின் சொத்துகளை முறையாக பராமரிக்கவும் நிர்வாகம் செய்யவும், சொத்து பாதுகாப்பு மற்றும் நிர்வாக குழுவை சபா. சிவகுமார் தலைமையில் S. சோமசுந்தரம், K. சண்முகம், G. தியாகராஜன், S. மதிவாணன், மற்றும் D. திருஞானசம்பந்தம் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்டு செயல்படவும் தீர்மானிக்கப்படுகிறது.

6. சங்கத்தின் கணக்கு வழக்குகளை வெளிப்படை தன்மையுடன் முறையாக பராமரிக்கவும், மாதா மாதம் வரவு செலவு கணக்கை நிர்வாகக் குழு கூட்டத்தில் தாக்கல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டு திரு. K. சுப்ரமணியன் தலைமையில் கணக்கு தணிக்கை குழுவும் உறுப்பினர்களாக G. செந்தில்நாதன், S. ஞானசேகரன் மற்றும் P. இரத்தினசபாபதி செயல்படவும் தீர்மானிக்கப்படுகிறது.

7. தமிழ்நாடு கார்காத்தார் சங்கத்தின் கூட்டமைப்புக்கு சென்னை கார்காத்தார் சங்கம் மீண்டும் இணைப்பு சந்தாவை ஆண்டுதோறும் செலுத்தி செயல்படவும் தீர்மானிக்கப்படுகிறது.

8. சென்னை கார்காத்தார் சங்கத்தின் மகளிர் அணியை மீண்டும் செயல்படுத்த திருமதி. குந்தவியை அமைப்பாளராக செயல்படவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் தீர்மானிக்கப்படுகிறது.

மேற்படி தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு, வழிமொழியபட்டு ஏகமனதாக பொதுக்குழுவால் ஏற்கப்பட்டபின் பொதுக்குழு கூட்டம் இனிதே முடிவுற்றது.

சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேனாள் செயலாளர் திரு. விளாகம் S. சுந்தரேசன் பிள்ளையவர்களின் அகவை 80ஆவது பிறந்தநாளையொட்டி அன்னாருக்கு சால்வை மற்றும் சந்தனமாலை அணிவிக்கப்பட்டு நினைவுபரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

கார்குல சான்றோர் படத்திறப்பு விழா :

சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேனாள் செயலாளர் அமரர் S. திருநாவுக்கரசு பிள்ளையவர்களின் திருஉருவ படத்தினையும், மேனாள் தலைவர் அமரர் டாக்டர் K. தர்மலிங்கம் பிள்ளையவர்களின் திருஉருவபடத்தினையும் விளாகம் S. சுந்தரேசன் பிள்ளை அவர்கள் திறந்து வைத்து மரியாதை செய்தார்கள். மேலும் S. திருநாவுக்கரசு பிள்ளை குடும்பத்தினரும், டாக்டர் K. தர்மலிங்கம் பிள்ளை குடும்பத்தினரும் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தார்கள். அமரர் S. திருநாவுக்கரசு பிள்ளை அவர்களின் சிறப்புகளையும் பெருமைகளையும் முனைவர் K. விவேகானந்தன் எடுத்துரைத்து நினைவு அஞ்சலி செலுத்தினார்கள். அதனை தொடர்ந்து அமரர் டாக்டர் K. தர்மலிங்கம் பிள்ளை அவர்களின் சிறப்பான சேவைகளையும், பெருமைகளையும், சென்னை கார்காத்தார் சங்கத்தை பல இன்னல்களில் இருந்து பாடுபட்டு மீட்டதையும் கைலை. சண்முகம் எடுத்துரைத்து நினைவு அஞ்சலி செலுத்தினார்கள். அடுத்து அமரர் S. திருநாவுக்கரசு பிள்ளையவர்களின் பேரன் டாக்டர் ரத்னவேல் அவர்களும், அமரர் டாக்டர் கே. தர்மலிங்கம் பிள்ளையவர்களின் புதல்வர் Er. D. இராஜசேகர் அவர்களும் ஏற்புரை வழங்கினார்கள்.

ஆண்டு விழா மற்றும் பொதுக்குழுவிற்கு சிறப்பு விருந்தினர்களாக வருகைபுரிந்து அனைத்துவேளாளர், வெள்ளாளர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் J.S. ராஜ்குமார் மற்றும் முதல்குரல் ஆசிரியர் டாக்டர் K.P. இரவிந்திரன் ஆகியோருக்கு மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் KKR.K.சுரேஷ் அவர்களும், சபா.சிவகுமார் அவர்களும் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்கள். டாக்டர் J.S. ராஜ்குமார் அவர்கள் அனைத்து வேளாளர், வெள்ளாளர் ஒற்றுமையின் அவசியம் குறித்தும், வருங்காலங்களில் நாம் ஒற்றுமையுடன் செயல்பட்டு நமது பலத்தை அரசுக்கு உணர்த்தவேண்டிய அவசியம் பற்றியும் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். அடுத்து மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் K.K.R. சுரேஷ் அவர்கள் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி சிறப்பு செய்தார்கள். அதனை தொடர்ந்து தலைவர் திரு. S. சோமசுந்தரம் வருகைபுரிந்த அனைவரையும் பாராட்டி பேசினார்கள். தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் சென்னை பகுதி சங்கங்களின் துணைத்தலைவர், மண்டல செயலாளர் மற்றும் இணைப்பு சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் பயனாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இறுதியாக S. மதிவாணன் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க பொதுக்குழு மற்றும் ஆண்டு விழா இனிதே நிறைவுற்றது. விழாவினை குரோம்பேட்டை திரு. D. திருஞானசம்பந்தம் மிகவும் சிறப்பாக தொகுத்து வழங்கி விழாவிற்கு பெருமை சேர்த்தார்கள்.

விழா முடிவில் வருகை புரிந்த அனைவரும் மதிய விருந்தில் கலந்துகொண்டார்கள். அனைவரது குடும்பத்தினர்க்கும் நினைவு பரிசு வழங்கி சிறப்பு செய்யப்பட்டது.

வாழ்க கார்குலம்! வளர்க கார்காத்தார் ஒப்புரவு!!

அன்புடன்

கைலை. சண்முகம், செயலாளர்

வெற்றிக்கு 10 வழிகள்

A. RAJARETHINAM,

PORUR, CHENNAI, PH: 9444224366

(1) தன்னம்பிக்கை :- வெற்றி அடைய வேண்டுமென்ற எண்ணம் மனதில் உண்டாகிறது. உங்கள் திறமையில் தீவிர நம்பிக்கை இருந்தால் அது செயலில் பிரதிபளிக்கும். உங்கள் திறமையான எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் மற்றவர்களை நீங்கள் அடையச் செய்திருப்பீர்கள். நீங்கள் சாதிப்பீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும். அதுதான் தன்னம்பிக்கை.

(2) எண்ணத்தில் தெளிவு :- எதை அடைய வேண்டும் என்பது உங்களுக்கு தெளிவாகத் தெரிய வேண்டும். உலகில் வெற்றி அடைந்தவர்கள் எல்லோரும் நன்றாக சிந்திக்கக் கூடியவர்களாகவும், எண்ணத்தில் தெளிவுடனும் விளங்கினார்கள். திறமையை அவ்வப்போது வளர்த்துக் கொள்ளுங்கள். தெளிவான எண்ணங்களுடன் செயல்படுங்கள்.

(3) சரியான லட்சியம் :- உங்கள் லட்சியம் உறுதியாகவும், தெளிவாகவும் முயன்றால் அடையக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அடிக்கடி நமது அறிவும், முயற்சிகளும் பலவிதமான சோதனைகளை சந்திக்கும். அது இயற்கை. எதுவும் சுலபமாக கிடைக்காது. லட்சியம் உறுதியாக இருந்து மனம் விடாமல் செயல்பட்டால் நினைத்ததை சாதிக்கலாம்.

(4) உன்னதமான எதிர்பார்ப்பு :- எப்போதும் நேர்மறையான எண்ணங்களுடன் வெற்றியை எதிர்பார்த்து செயலாற்றுங்கள். வெற்றி என்பது கடின உழைப்பின் பரிசு. உன்னதமான எதிர்பார்ப்புக்கு இறைஅருள் கிடைக்கும். வெற்றி அடையலாம்.

(5) செயல்திட்டம் :- வெற்றிக்கு குறுக்கு வழி கிடையாது. ஒரு வேலையை சிறிய படிகளாக பிரித்துக் கொள்ளுங்கள். அவற்றை அடைய வேண்டிய நேரத்தையும் குறித்துக் கொள்ளுங்கள். அந்தச் செயல் சம்மந்தமாக தினசரி செய்ய வேண்டிய வேலைகளையும் குறித்துக் கொள்ளுங்கள். அன்றாடம் செய்து விட்டோமா என்று கவனமாகப் பாருங்கள். இவ்வாறு செயல்பட்டால் எந்தக் கடினமான வேலையையும் முறைப்படி செய்து முடிக்கலாம்.

(6) துணிந்து செயல்படுங்கள் :- எதை சாதிக்க வேண்டுமென்றாலும் துணிச்சல் அவசியம். பயம் இருக்கக்கூடாது. செய்ய முடியாமல் போய்விடுமோ, தோல்வி அடைவோமோ என்றெல்லாம் பயப்படக் கூடாது. ரிஸ்க் (Risk) எடுங்கள் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். தண்ணீரில் இறங்காமல் நீச்சல் கற்றுக் கொள்ள முடியாது. தைரியமாக செயல்படுங்கள். உங்கள் உழைப்பையும், உறுதியையும் பார்த்துவிட்டு மற்றவர்கள் உங்களுக்கு உதவ முன் வருவார்கள்.

(7) முன்னோடி சிந்தனைகள் :- எல்லா வெற்றிகளுக்கும் பின்னால் கடுமையான உழைப்பும், தியாகங்களும் இருக்கின்றன. மற்றவர்களது அனுபவங்களிலிருந்து நாம் நிறைய கற்றுக்கொள்ள வேண்டியதிருக்கிறது. உடல் நலம் நன்றாக வைத்துக்கொண்டு, முன்னோடி சிந்தனைகளுடன் வாழ வேண்டும். வெற்றியாளர்களின் புத்தகங்களை படிக்கலாம். முடிந்தால் அவர்களை சந்தித்துப் பேசலாம். இதில் கிடைக்கும் மிகச் சிறிய யோசனைகள், உங்களுக்கு மிகப்பெரிய வெற்றியை கொடுக்கலாம். வெற்றியாளர்கள் சந்தர்ப்பங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பதில்லை. அவர்கள் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்கிறார்கள்.

(8) முன்னேறப் போராடுங்கள் :- மவுண்ட் சிகரம் மீது ஏறுவது எவ்வளவு சிரமம் எவ்வளவு போராட்டங்களுக்குப்பின் அதை வெற்றி கண்டார்கள். வெற்றிப் பாதையில் எவ்வளவு சிரமங்கள் வந்தாலும் மனம் போராடி செயலாற்றினால், முடிவில் வெற்றி பெறலாம். சமீபத்தில் சந்திராயன் 3 என்ற விண்கலம் நிலாவில் இறங்குகிறது. அதற்கு நமது விஞ்ஞானிகள் எவ்வளவு முயற்சிகளை எடுத்தார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்.

(9) பொறுப்பு எடுங்கள் :- வெற்றி பெற வேண்டுமென்றால் பொறுப்பு எடுங்கள். உங்களுடன் பலர் செயலாற்றுவார்கள். எல்லோருக்கும் பொறுப்பு உணர்ச்சியை ஏற்படுத்துங்கள். அவர்களுக்கு வேலைகளை பிரித்துக் கொடுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். முழு பொறுப்பு உங்களுடையது என்று உணர்ந்தால் வெற்றி பெறலாம்.

(10) விடாமுயற்சி :- ஒரு செயலை செய்யும் போது எவ்வளவு இடர் வந்தாலும், மனம்விடாமல் மேன்மேலும் முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். வெற்றி அடையும் வரை முயற்சி எடுப்பேன் என்ற உறுதியான எண்ணம் வேண்டும்.

இந்த எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின் தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலை ஓசை, Spoken English for your success, success habits of great achievers போன்ற புத்தகங்களைப் படித்தால் உங்கள் மென்திறன் (soft skills) அதிகரிக்கும், சுய முன்னேற்றம் அடையலாம்.

நட்பும் உறவும்

ஞான. அம்புலி.

வாழ்க்கையில் நாம் இழக்கக்கூடாத இரண்டு பொக்கிஷங்கள் (1) உண்மை உறவுகள். (2) நல்ல நண்பர்கள், இவ்விரண்டையும் ஒரு சேரப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள் எனப்படுவர். உண்மை உறவால், நல்ல நட்பால் வேதனைகள் தீர்க்கப்படுகின்றன. சாதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. இத்தருணத்தில் ஒரு முக்கியமான கருத்தானது இந்த இரு பிறிவினர்கள் செய்யும் உதவி மாற்றி செய்யப்பட முடியாதது என்பதுதான். உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கு விழுப்புண் வருவதை பாராது உதவுவது நட்பு. வெருப்பினால் நெருப்பை வெரும் கையால் அணைத்திட போனவனை தடுத்து செவிமடுக்க வைத்து செழுமை வாழ்க்கைக்கு வாழ்நாள் முழுவதும் வழிகாட்டுவதன்றோ உறவுகள். ஜாதி, சமயம், மொழி இனம் இவைகளைச் சார்ந்ததை உறவு என்றும் இந்த வறைமுறைகளை எல்லாம் கடந்த நிலையைத்தான் நட்பு என்றும் பேரறிஞர்கள் சொல்லிச் சென்றுள்ளார்கள்.

1) நட்பெனும் போதினிலே தேன் வந்து பாயுது காதினிலே !

எது நட்பு என்பதற்கு ஆயிரமாயிரம் விளக்கங்கள் உண்டு. உதாரணத்துக்கு நட்பு என்பது இருவருக்குள் ஏற்படும் நெறுக்கமான உறவு என்றாலும் முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு ஒருவரை ஒருவர் சார்ந்திருக்காத நிலையாகும். நண்பன் என்பவன் நல் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதோடு நின்றுவிடாது துணையும் வருபவனாவான். நட்பைப் போல ஒருவன் வளர்த்துக்கொள்வதற்கு அருமையான செயல் வேறெதுவுமே இல்லை. மேலும் நட்பு தரும் பாதுகாப்பு வேறு எதிலும் கிடைப்பதில்லை, வாழ்க்கையில் எதிர் பண்பில்லாத நட்பு கிடைப்பது வரம்தான்.

நட்பு என்பது எல்லா உயிரினங்களுக்கும் உண்டென்று நிருபணமாகியுள்ளது. சூழ்நிலை காரணமாய் உதயமாகும் நட்பு சாலச்சிறந்ததாக கருதப்படுகிறது.

திருக்குறளிலே நட்பெனும் அதிகாரத்தில் நடபின் அருமை பெருமைகளை அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. நாலடியார் பாடல் 217–ல் 'சரிவர பதமாய் சமைப்படாத உணவு என்றாலும் அதை நண்பனிடம் பெற்றால் அமுதமாகும். அதே சமயம் நன்கு சமைத்த உணவானது அன்பிலாரிடம் பெற்றால் அது எட்டிக்காயை தின்றதாய் ஆகிவிடும் எனச் சொல்லப்பட்டுள்ளது.

மகாபாரதத்தில் ஒரு காட்சி! பாரதப் போர் முடிந்து 36 ஆண்டுகளுக்கு பின்னால் பாண்டவர்கள் திரௌபதியுடன் சேர்ந்து சொர்கத்தை அடைவதற்காக கைலாய மலையை நோக்கி பயணிக்கிறார்கள். இவர்களுடன் ஒரு நாயும் (மாறு வேடத்தில் எமனும்) தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இவர்களில் தர்மனைத் தவிர மீதி அனைவரும் இறைவனை அடைந்திட துறக்க வேண்டிய, மறக்க வேண்டிய ஆசாபாசங்களுடன் சென்று கொண்டிருந்ததால் மலையிலிருந்து விழுந்து இறந்துவிடுகிறார்கள். முற்றும் துறந்த முனிவராகிய தர்மர் மட்டும் தன் துணையான நாயுடன் கைலாயமலை உச்சியினை அடைகிறார். அங்கு தனது தேரில் காத்துக்கொண்டிருந்த இந்திரன் தர்மரை பாராட்டி சொர்க்கத்திற்குச் செல்ல தனது தேரில் ஏறச் சொல்கிறார். உடனே தர்மர் தன்னுடன் இது காரும் துணையாக வந்த நாயுடன் சேர்ந்துதான் தான் சொர்கத்திற்கு வருவேன் என்கிறார். இந்திரன் நாய் போன்ற பிராணிகளுக்கு சொர்க்கத்தில் இடமில்லை எனச் சொல்கிறார். இதை ஏற்க மறுத்த தர்மர் தான் சொர்க்கத்தில் வாழ்வதை விட இங்கேயே நாயுடன் வாழ்வதைத்தான் விரும்புவதாக அழுத்தமாக ஆழமாக சொல்லிவிடுகிறார்! இந்த நிகழ்வு தர்மருடைய நல்ல குணங்களைக் கூறுவதோடு நட்புக்கு அவர் கொடுத்த பற்று அன்றும் இன்றும் என்றும் பாராட்டப்படுவதற்கு ஏற்றதல்லவா!

பையினில் தீய நட்பு நல்லொழுக்கத்தை கெடுக்கும் எனக்கூறப்பட்டுள்ளது.

நிறையபேர்களின் வளர்ச்சிக்கும் அதே நேரத்தில் நிறைய பேரின் வீழ்ச்சிக்கும் நண்பர்களே காரணமாக இருந்துள்ளார்கள். அதனால்தான் கூடாநட்பு கேடாய் முடியுமென்பார்கள். நல்ல சொற்க்களை பேசுபவர்கள், நல்ல நடத்தை கொண்டவர்கள், இறை அச்சம் உடையவர்கள், ஆகியோரை நண்பர்களாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. நல்ல நண்பர்கள் என்றால் நட்பில் உண்மை இருக்க வேண்டும். பொய் இருக்கக்கூடாது, ஏமாற்று இருக்கக்கூடாது. மோசடி இருக்கக்கூடாது, துரோகம் இருக்கக்கூடாது, இத்தகைய நண்பர்களை எனக்குத் தருவாயாக என முஸ்லீம்கள் அல்லாவிடம் பிரார்த்தனை செய்வார்கள்.

இமாம் ஹசன் பசரி எனும் இறை நேசர் சொன்னச் செய்தி,

நல்ல நட்பு என்பது, இவ்வலகில் மட்டுமல்ல நாம் இறந்த பிறகும் மறுமையிலும் நம்மை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் வலிமையுடையது! ஒரு ஊரில் இரண்டு நல்ல செயல் புரிபவர்கள் இணைபிரியா

நண்பர்களாக இருந்தார்கள். ஒரு கட்டத்தில் இருவரும் மரணித்து விடுகிறார்கள். பிறகு மறுமையில் இறைவனின் உத்திரவுக்கிணங்க ஒருவர் மட்டும் சொர்க்கத்துக்கு சென்றடைகிறார். அவர் அங்கு எங்கு தேடினாலும் தனது நண்பரை காணோம் என்பதால் அல்லாவிடம் சென்று தன் சந்தேகத்தை கேட்கிறார். அதற்கு அல்லா அவர்கள் சில காரணங்களுக்காக உனது நண்பர் நரகத்தில் உள்ளார் என்கிறார். மிகவும் மனம் வருத்தத்தோடு அவர் அல்லாவிடம் மன்றாடி, புலம்பி, தம் நண்பரையும் சொர்க்கத்துக்கு அழைத்து வர வேண்டுகிறார். நட்பின் வலிமையை உணர்ந்து சிரித்த அல்லா அவர்கள் உடனே தேவ தூதர்களை அனுப்பி அவரது நண்பரை நரককத்திலிருந்து சொர்க்கத்திற்கு வரவழைத்துவிடுகிறார். நட்பின் வலிமைக்கு இந்நிகழ்வு தக்க சான்றன்றோ!

கௌதம புத்தர் அவர்கள் கல்மானமிட்டா (நல்ல நண்பர்) மற்றும் பரப்பாமிட்டா (தீய நண்பர்கள்) என இரண்டு வகையினர் உண்டென கூறியுள்ளார். ஒரு கண்ணியமான நண்பன் கிடைக்காத பட்சத்தில் தனிமையான வாழ்க்கை வாழ வேண்டும் எனவும் சொல்லிச்சென்றுள்ளார். பௌத்த மத சார்ந்த பிட்சுக்கள் பார்வையில் நட்பு பற்றி சொன்னது பின்வருமாறு;

நட்பு என்பது ஈடு இணை இல்லா ஒரு சக்தி. நல்லவர்களுடனான நட்பை போன்ற நல்ல பண்புகளை ஒருவரிடம் உருவாக்கக்கூடிய வேறு எந்த சக்தியுமில்லை.

ஒரு நல்ல நண்பனை மதிப்பிடுவதற்கு (தேர்வு செய்தவருக்கு) ஏழு குணங்கள் உள்ளன. அவர் இனிமையாகவும், அன்பாகவும், மரியாதைக்குரியவராகவும், பின்பற்றுவதற்கு தகுதியானவராகவும் பயனுள்ள உரையாடலில் ஈடுபட தயாராகக் கூடியவராகவும் வார்த்தைகளை பொறுத்துக்கொள்பவராகவும், ஆழமான பேச்சில் ஈடுபாடு உள்ளவராகவும், ஆதாரமற்ற முறையில் உபதேசம் செய்யாதவராகவும் இருக்க வேண்டுமாம். இவைகளைத் தவிர ஆன்மீக லாபத்திற்கு வழிவகுப்பவராகவும் தீமைக்காரியங்களிலிருந்து பாதுகாக்கக்கூடிய அக்கரை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

நல்ல நண்பர்கள் நம்மை விட்டு பிரியாமலிருக்கவும் அவர்கள் உள்ளத்தில் நிரந்தரமாக குடியேறவும், அவர்களுடன் தாராள மனப்பான்மையோடும், மரியாதையோடும் கருணையுடனும் பழக வேண்டும்.

(2)சூறாவளி வாழ்க்கையில் சுற்றமென்ற தீபாவளி!

'சுற்றம் சுகம் தரும்' 'சுற்றத்தால் ஆகாது யாதெனில் போன்ற முது மொழிகள் நெடுநாட்களாக வழக்கத்தில் உள்ளன.

சுற்றம் என்போர் தங்கள் வாழ்க்கையில் இயற்கையாய் பிறப்பின்பால் ஒருங்கிணைக்கப்படுவோராவர். உறவு என்ற சொல்லுக்கு குலத்திலோ ஜாதியிலோ பிறந்தவர்கள் உரிமையுடையவர் எனப்பொருள் கொள்ளலாம். சுற்றமும் உறவும் ஒன்றே என்ற கருத்துமுண்டு!

கொன்றை வேந்தன் பாடல் 30–ல் ஔவையார் தேவைப்படும்காலங்களில்உனதுஉறவினர்கள்உனக்கு உதவ வேண்டுமென்றால் நீ நல்லவனாக அவர்களோடு நெருங்கிப்பழக வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். நாலடியார் பாடல் 197–ல் ஒவ்வொருவரும் தான் மட்டும் வாழ நினைக்காமல் தனது குடி தாழாதிருக்க பாடுபட வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

சுற்றத்துடன் இருப்பதுதான் வாழ்க்கை என்பதை மகாபாரதத்தின் தர்மர் தனது புண்ணிய செயல்களால் விளக்கியுள்ளார். சொர்க்கத்தை அடைந்த தர்மர் தனது சகோதரர்களையும் திரௌபதியையும் தேடிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு அசரீரி அவர்களெல்லாம் வேறுயிடத்தில் உள்ளதாகவும் சொல்லி அவர்கள் இருக்கும் இடத்தை காட்டுவதாகச் சொல்லி தர்மரை அழைத்துச்செல்கிறது. வழியெல்லாம் துர்நாற்றம் வீச, பிணங்கள் எரிந்து கிடக்கின்ற காட்சியினை கண்டு துணுக்குற்ற தர்மர் அசரீரியிடம் 'ஏன் இங்கு கூட்டி வந்தாய்' என கேட்க அசரீரி 'நீ தேடிவந்தவர்கள் இங்குதான் உள்ளார்கள். உனக்கு அவர்களை பார்க்க சம்மதமில்லையென்றால் சொர்க்கத்துக்கு நாம் திரும்பி போய்விடலாம்' எனச் சொல்ல, தர்மரும் யோசிக்க, அவர் தேடிவந்த அனைவரும் 'தர்மரே இங்கேயே நில்லுங்கள், எங்களுக்கு உங்களை பார்த்தபின்தான் மகிழ்ச்சியாய் உள்ளது. போகாதே' எனக் கேட்டார்கள். திக்கித்துப்போன தர்மரும் தன்னை அழைத்து வந்த அசரீரியிடம் தான் இங்கேயே நரகமென்றாலும், இருக்கப்போவதாகவும் சுற்றத்தோடு இருப்பதால் நரகம் எனக்கு சொர்க்கபூமி நீ உடனே திரும்பிப் போ' என்றாராம்!.

சற்று நேரத்தில் அங்கு இந்திரனும் தோன்றிட அச்சமயம் பிரகாசிக்கின்ற சுற்றுச்சூழல் சொர்க்கமாய் மாறிட அனைவரும் ஆனந்தமாய் கத்திட இந்திரன் தர்மனிடம் கூறினார். "தர்மரே! இதுவரை நடந்ததெல்லாம் உன்னுடைய அனுமானங்களே தவிர உண்மையல்ல! இவையெல்லாம் உங்களை சோதிப்பதற்கே நான் நடத்திய மற்றுமொரு நாடகம்"

என்று சொல்லி மறைந்தாராம். உறவின் மேன்மையை உலகுக்கு உணர்த்தியவர் தர்மர் பெருமான்.

இரத்த உறவுகளை பேணுவது இஸ்லாமியம் ஈமான் அம்சங்களில் ஒன்றாம். ஒரு முஸ்லீம் தன்பெற்றோர், உடன் பிறந்தவர் ஆகியவரிடம் நடந்துகொள்வதைப் போலவே தனது இரத்த பந்தமுடையவர்களிடமும் உறவினர்களுடனும் நடந்துகொள்ளவேண்டுமாம்.இரத்தபந்தமுடையவர்கள் முஃமின்களாக காஃமிகர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் நன்மையும் நல்லுபரிகாரமும் செய்வது கடமையாக கருத வேண்டுமாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு சமயம் ஒருவர் வந்து சொர்க்கத்துக்கு செல்ல தான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டதற்கு "அல்லாவைத் தொழுது, ஜக்காத் கொடுத்து, உன் உறவுகளை பேணிக்கொள்வதே சிறந்த வழி" என்றாராம்.

"பைபிளில் நல்ல உறவுகள் தொடர உங்கள் உடன் பிறப்போர் பாவம் செய்திருந்தார்களானால் தனித்திருக்கும்போதுகுற்றத்தைஎடுத்துக்காட்டுங்கள். அவர்கள் செவிசாய்த்தால் நலம் பெறலாம்" எனக் கூறப்பட்டுள்ளது. உறவுகளோடு என்றென்றும் பிரச்சனையின்றி வாழ பௌத்த அடிகளார் சொன்னது "சிரித்துக்கொண்டே சில தருணங்களை கடந்துவிடுங்கள். விலகவும் வேண்டாம்! விளக்கவும் வேண்டாம்!! விவாதமும் வேண்டாம்!!! இந்த புத்தி சாதுர்யம் உங்களுக்கு எப்பொழுதும் கைகொடுக்கும்."

3) சுற்றமும் நட்பும் இருகண்களாக கருதுதல் நலமிகு வாழ்க்கையின் தத்துவமே!

சிவபார்வதி கடவுள்களின் ஞானப்பழ நிகழ்வைப்பற்றி உலக விஞ்ஞானி பேரா. மு. கதிரேசன் கீழ்கண்டவாறு கூறினார். "வெற்றி பெற்ற பிள்ளையார் ஞானப்பழத்தை தம்பி முருகனுக்கு கொடுக்க முன்வந்தது உறவுக்கு பெருமை சேர்ப்பது என்றாலும் முருகன் (அண்ணன் பிள்ளையாரை நல்ல நண்பனாக ஏற்றுக்கொண்ட காரணத்தால்) அப்பழத்தை தம்பிக்கே திருப்பிக் கொடுத்தது நட்பின் மிகச் சிறந்த பண்புக்கோர் எடுத்துக்காட்டன்றோ," இதனுடன் இப்பேராசரியர் தொடர்பாக சொன்னது, "தில்லை நடராசர் தனது இதயத்தை ஒட்டிய இடது கையால் அணைத்தவாறு சுற்றத்தை காட்டுகிறார் அதே சமயம் வலது கரத்தை தூக்கிக்காட்டி நட்பினை உணர்த்துகிறார்"! போற்றுதலுக்குரிய நன்னெறிவிளக்கமன்றோ!

சுற்றமும் நட்பும் மனித உறவுகளின் மிகச்சிறந்த உயர்ந்த நற்பண்புகளாகும். இவை இரண்டுமின்றி வாழ்தல் நீரில்லா நிலமாகும். சுற்றம் நட்பானால் அதோடு நட்பே சுற்றமுமானால் பேரின்பப் பெருவாழ்வு உங்கள் வசமன்றோ!

நட்பும் உறவும் கைகோர்த்து நின்றது ஸ்ரீராமர் வாழ்க்கையில்! உறவுக்கு உத்திரவாதமாய் உடன் நின்றவர் தம்பி லெட்சுமணன். நட்பின் கால் தன் உயிரையும் பணையம் வைக்க தயாராய் நின்றவர் அனுமன். உலகின் முதல் உதாரணபுருஷர்கள் இவர்கள்தான்.

இயேசு கிறிஸ்து அவர்கள் உண்மையான நட்பும் பரிசுத்தமான உறவும் இரண்டும் இருக்குமிடத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் அன்பும் பாசமும் என்றும் நிலைத்திருக்கும் என அருள் வாக்கு தந்துள்ளார்.

Dr. சாமளா என்பவர் சமீபத்தில் சேமிப்பை பற்றி எழுதும் போது பொருள், பணம், *Status* போன்றவைகளை அளவுக்கதிகமாக சேமித்து வைப்பதைவிட நல்ல உறவினர்களை, உண்மையான நண்பர்களை, சேமித்து வையுங்கள்! அந்தி சாயும் நேரம், இவர்கள் இரண்டு பேர்தான் மூப்பு உற்றொரை (என்றென்றும் எங்கு இருப்பினும் உங்கள் நினைவாகவே வாழும்) அரவணைத்துசெல்வார்கள்எனக்கூறியுள்ளார். மரணம்தான் பேரின்பம் பெற்றுத் தரும் தருணம் என்பதை உணரவைப்பவர்கள் இவர்கள்தான்.

ஒருவரிடம் மகிழ்ச்சி குறைய குறைய நம் சுற்றமும் நட்பும் சுருங்கிப் போகின்றன. எனவே தனி மனித மகிழ்ச்சி தழைத்து ஓங்கினால்தான் சுற்றம், நட்பு என்ற உன்னத மனித உறவுகள் விரிவடைந்து விடுவதோடு மேம்படும். நம் சொல் செயல் பகிர்ந்திடும் மனப்பாங்கு பிறரை மகிழ்விக்கும் போது சுற்றமும் நட்பும் பல்கிப் பெருகும். இந்த வாழும் கலையை பெற்றிட எல்லோரும் முயன்றிட்டால் உலகம் சமாதான பூமியாகிவிடும்.

அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு கட்டுரை மற்றும் தகவல்கள் அனுப்புபவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் அனுப்புவதுடன் அனுப்பப்பட்ட கட்டுரை / தகவல்கள் யாரால் அனுப்பப் பட்டதோ அவர் பெயர் மற்றும் அலை பேசி எண்ணுடன் அனுப்ப வேண்டும் அவ்வாறு வராதவற்றை பிரசுரிக்க இயலாது. அனுப்பப்படும் கட்டுரை / தகவல்கள் கட்டாயம் தமிழில் இருக்க வேண்டும். அனுப்பப்படுபவைகளை அச்சிடுவதற்கும் அச்சிட மறுப்பதற்கும் அச்சுக்கு ஏற்றவாறு தொகுக்கவும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. அவர் முடிவே இறுதியானது. அச்சிடாதவைகள் திருப்பி அனுப்ப இயலாது

– ஆசிரியர்

கார்காத்தார் ஒப்புரவு

சொந்த கார்.... வாடகை கார்.... குத்தகை கார்..... எது உகந்தது?

Dr. D. Kalyanakumar, Trichy-18.

சொந்த வீடு கனவு போலவே, சொந்தமாக கார் வாங்க வேண்டும் என்பதும் நடுத்தர வர்க்கத்தின் கனவாக இருக்கிறது. வீட்டுக்கடன் போலவே, வாகனக்கடன் மூலம் சொந்த கார் கனவையும் நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. எனினும், தற்போது கால் டாக்சி நிறுவனங்களின் சேவை பரவலாகி வரும் நிலையில் சொந்த காரை விட வாடகை காரை பயன்படுத்துவது சிறந்ததா? அல்லது காரை குத்தகைக்கு எடுப்பது சிறந்ததா? என்பதை தீர்மானிக்க மூன்றிற்குமான செலவுகள், சாதக பாதகங்களை ஒப்பிட்டு பார்க்க வேண்டும் சொந்த கார் எனில் வாகனக் கடனுக்கான தவணை, பெட்ரோல் செலவு, பராமரிப்பு செலவு, இன்ஷூரன்ஸ் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். கால் டாக்சி உள்ளிட்ட வாடகை கார் எனில் வாடகை கட்டணம் மற்றும் பயன்பாட்டை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்தின் எதிர்கால ஆசைப் பட்டியலிலும் கார் நிச்சயம் இருக்கும். கார் தேவையாக இருக்கிறதோ இல்லையோ, பயன்படுத்துகிறோமோ இல்லையோ, வீட்டு வாசலில் ஒரு அழகான காரை நிறுத்தி வைக்கவே எல்லோரும் விருப்பப்படுவது உண்டு. இந்தியாவிலேயே அதிகம் விற்பனையாகும் கார்களில் *Maruti Alto (K10), Wagon R, TATA Tiago, Hyundai Grand i10, Renault Kwid, Maruti Suzuki Celerio* போன்ற சிறிய கார்கள்தான் முதலிடங்களில் உள்ளன. இந்தச் சிறிய கார்கள் நடுத்தர மக்களின் கார் வாங்க வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றி வருகின்றன. இந்திய கார் மார்க்கெட்டின் ஆணிவேர் இந்தச் சிறிய கார்கள்தான். ஆனால் நகரங்களில் கார்களை நிர்வகிப்பது என்பது பெரும் பிரச்சனையாக உருவெடுத்திருப்பதால் இப்போதெல்லாம் மொபைலை எடுத்தோமா, ஆப் மூலம் டாக்ஸியை புக் செய்தோமா, வேண்டிய இடத்துக்கு போய் வந்தோமா என்பதுதான் ட்ரெண்ட் ஆக இருக்கிறது.

நகரங்களில் உபர், ஓலா, *Red Taxi* போன்ற பல டாக்ஸி சேவை நிறுவனங்கள் கொடிகட்டிப் பறக்கின்றன. அதுவும் ஆட்டோவில் செல்வதைவிடவும் டாக்ஸியில் செல்வது மலிவாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. இதனால் சொந்தமாக ஒரு காரை வாங்கி பயன்படுத்துவதைவிட வாடகை கார் பயன்படுத்திக் கொள்ளவே பலரும் நினைக்கிறார்கள். காரில் பயணிக்கிறோம் என்பதைக் காட்டிலும் நம்மிடம் சொந்த கார் இருப்பது ஒரு ஸ்டேடஸ் கௌரவமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் சொந்தமாக கார் வாங்கும் முன் நம் வருமானம், தேவை. எத்தனை பேர் பயணிப்போம் என்கிற விஷயங்கள் முக்கியமானவை. ஏனெனில் பெரும்பாலான நகரங்களில் இருப்போரின் வருமானம் ரூ. 30,000–க்கும் அதிகமாக இருப்பதால் எளிதில் கார் வாங்கும் முடிவை எடுத்து விடுகிறார்கள். அதற்கேற்ப கார் நிறுவனங்களும் கார் கடன் விளம்பரங்களும் அவர்களை கவர்ந்து இழுக்கின்றன.

சொந்த கார் – வாடகை கார் விவாதம் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும், இதற்கான பதில் மாறுபடக்கூடியதாகவே இருக்கிறது. இந்நிலையில், அண்மையில், கிரிசில் ரிசர்ச் அமைப்பு நடத்திய ஆய்வு, இந்திய சூழலில் சொந்த கார் வைத்திருப்போர், ஆண்டுக்கு 15 ஆயிரம் கி.மீக்கு மேல் பயன்படுத்தினால் தான் அது லாபகரமாக இருக்கும் என தெரிவித்துள்ளது. பொதுவாக இந்திய கார்கள் ஆண்டுக்கு சராசரியாக 12 ஆயிரம் கி.மீ பயணிப்பதாக கருதப்படுகிறது. இதன் அடிப்படையில் பார்த்தால், சராசரிக்கும் குறைவான பயன்பாடு கொண்டவர்களுக்கு சொந்த கார் செலவு மிக்கதாக அமையலாம். இவர்கள் வாடகை காரை பயன்படுத்துவதே சிக்கனமானதாக இருக்கும். வாடகை கார் எனும் போது பராமரிப்பு பிரச்சனைகளும் இல்லாமல் இருக்கிறது.

ஆனால் சென்னை போன்ற பெரு நகரங்களில் கார் வாங்குவோரின் எண்ணிக்கை அதிகரித்ததால் பெரும் போக்குவரத்து நெருக்கடி உருவாகி இருக்கிறது. இதனால் சொகுசாக அலுவலகம் போகலாம் என்று நினைத்து கார் வாங்கியவர்கள் அதனை வீட்டில் வைத்து விட்டு, இரு சக்கர வாகனம் மற்றும் ஆட்டோ, டாக்ஸி போன்றவற்றைப் பயன்படுத்துகிறார்கள். போக்குவரத்து நெருக்கடி என்பதுடன் பார்க்கிங் பிரச்சனையும் முக்கிய காரணம். நம் ஊரில் அதுவும் சென்னையில் கார் பார்க்கிங் செய்வதற்கு பாதுகாப்பான இடம் இல்லாததால், காவல் துறை எப்போது வேண்டுமானாலும் காரை 'டோ' செய்து, எடுத்துக் கொண்டு போகலாம் அல்லது யாராவது வந்து இடித்து சேதப்படுத்திவிடவும் வாய்ப்புண்டு.

அது மட்டுமல்லாமல் கார் வாங்கிய ஒரு ஆண்டில் உங்கள் காரின் மதிப்பு ஒரிஜினல் விலையில் இருந்து கிட்டத்தட்ட *20%* வரை குறைய வாய்ப்புண்டு. இரண்டாவது ஆண்டு காரின் மதிப்பில் கிட்டத்தட்ட 35 சதவிகிதமும் மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டால், *45%* குறையும். ஐந்து ஆண்டுகளுக்குப்பின் காரின் மதிப்பு அதிகளவில் குறையும் இதற்கெல்லாம் என்னதான் தீர்வு? கார் வாங்கும் ஆசையே இருக்கக் கூடாதா

என்று கேட்கிறீர்களா? சொந்த கார் வாங்குவது தவறே இல்லை. ஆனால் அது ஒரு செலவுதானே தவிர முதலீடு அல்ல என்பதை முதலில் உணர வேண்டும். உங்களுடைய வருமானம் எவ்வளவு ஒரு வருடத்துக்கு மொத்தமாக எரிபொருள், பராமரிப்பு, சர்வீஸ் மற்றும் பார்க்கிங் உட்பட பல்வேறு செலவுகளையும் பட்டியலிட்டு உங்களுடைய காருக்கான பட்ஜெட்டைப் போட்டுக்கொள்ளவேண்டும்.

சராசரியாக லிட்டருக்கு 13 கிமீ மைலேஜ் தரும் காரில் மாதம் எவ்வளவு கிமீ பயணிப்பீர்கள். பெட்ரோலுக்கு மட்டுமே மாதம் ஆகும் செலவு சர்வீஸ் இன்ஷூரன்ஸ், பார்க்கிங், டோல் போன்றவற்றுக்கு மொத்தமாக மாதத்துக்கு சொந்த காருக்கு ஆகும் செலவு, டிரைவிங் தெரியாதவர்கள் டிரைவர்களை வேலைக்கு எடுக்க வேண்டும். டிரைவர்களுக்கு குறைந்தபட்சமாக மாதம் ரூ. 12,000 ஆகும்) போன்றவற்றை கணக்கிட்டு பார்க்கவும் உங்கள் ஆண்டு வருமானத்தில் இந்தத் தொகையை மைனஸ் செய்யுங்கள். மீதமுள்ள தொகையிலிருந்து வீட்டுக்கடன் அல்லது வாடகை வீட்டு இதர செலவுகள், பள்ளி கல்லூரிக் கட்டணம் என அனைத்தையும் கழித்தால் மீதி என்ன இருக்கிறது என்று பாருங்கள் உங்களுடைய செலவுகளுக்கு மீறி *20%* தொகை கையில் சேமிப்புக்காக நின்றால் மட்டுமே நீங்கள் கார் வாங்குவது சரியான முடிவாக இருக்கும்.

காரை சொந்தமாக வாங்குவதற்கு பதில் லீசுக்கு எடுக்கும் வழக்கம் அதிகரித்து வருகிறது. ஆட்டோமொபைல் துறையில் தொடர்ச்சியாக புதுமைகள் புகுத்தப்பட்டு வருகிறது. விற்பனையை அதிகரிப்பதற்காக பல புதிய யுக்திகளை கார் உற்பத்தி நிறுவனங்கள் கையில் எடுத்துள்ளன. வாடிக்கையாளர்களுக்கு தள்ளுபடிகளை வழங்குவது எல்லாம் நம்பியார் காலத்து டெக்னிக். தற்போது ட்ரெண்ட் மாறிவிட்டது. கார்களை லீஸ் *(Lease)* அடிப்படையில் அதாவது குத்தகை அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதுதான் கார் நிறுவனங்கள் தற்போது புதிதாக கையில் எடுத்திருக்கும் யுக்தி.

காரை குத்தகைக்கு எடுப்பது என்பது கிட்டத்தட்ட ஒரு வீட்டை வாடகைக்கு எடுப்பது போன்றது. புதிய காரை சொந்தமாக வாங்கினால் நீங்கள் மிகப்பெரிய தொகையை முன்பணமாக செலுத்த வேண்டியிருக்கும். அதன் பின் மீதி தொகையை ரொக்கமாகவோ அல்லது வங்கி லோன் மூலமாகவோ நீங்கள் செலுத்தலாம். ஆனால் கார் குத்தகை திட்டத்தில் இந்த தலைவலிகள் இல்லை. காரை குத்தகைக்கு எடுக்கும்போது நீங்கள் முன் பணம் செலுத்த வேண்டியதில்லை. அப்படியே இருந்தாலும் அது மிகவும் குறைவாகத்தான் இருக்கும். காரை குத்தகைக்கு எடுத்த பின் நீங்கள் மாதந்தோறும் கட்டணம் செலுத்தி கொள்ளலாம். பராமரிப்பு பதிவு கட்டணம் மற்றும் காப்பீடு புதுப்பிப்பது போன்ற செலவுகளை பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

2–3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய காருக்கு மாறி விட வேண்டும் என நினைப்பவர்களுக்கும், பராமரிப்பு செலவு உள்பட காரை சொந்தமாக வைத்திருப்பதால் ஏற்படும் செலவுகளை விரும்பாதவர்களுக்கும் இந்த திட்டம் மிகச்சிறந்த தேர்வாக இருக்கும். ஆனால் ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் என்பதை போல், இந்த திட்டத்திலும் ஒரு சில சாதகங்களும், ஒரு சில பாதகங்களும் இருக்கின்றன. காரை குத்தகைக்கு எடுத்தால் நீங்கள் கார் லோன் கேட்டு விண்ணப்பிக்க வேண்டியதில்லை. எனவே கால்குலேட்டரை கையில் வைத்து கொண்டு வட்டி எவ்வளவு? என தலையை பிய்த்து கொண்டிருக்க வேண்டாம். எல்லாவற்றையும் விட நீங்கள் பல லட்ச ரூபாய் கடனுக்கு வட்டி செலுத்த வேண்டியதில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் மாதாந்திர கட்டணத்தை செலுத்துவது மட்டும்தான்.

நீங்கள் லோன் வாங்கி புதிய காரை வாங்கினால் அதற்கு மாதந்தோறும் இஎம்ஐ செலுத்த வேண்டும். சில சமயங்களில் இந்த இஎம்ஐ–யை விட குத்தகை திட்டத்தில் பெறப்படும் காருக்கு செலுத்த வேண்டிய மாதாந்திர கண்டணம் குறைவாக இருக்கும். இவை எல்லாம் குத்தகையில் கார் வாங்குவதன் மூலம் கிடைக்கும் மிக முக்கியமான நன்மைகள். அதேபோல் 2–3 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காரை வைத்திருக்கக் கூடாது என விரும்ப கூடியவர்களுக்கும் இது மிகச்சிறந்த தேர்வு ஏனெனில் எவ்வளவு காலம் வைத்திருக்கிறோமோ, அதற்கு மட்டும் கட்டணம் செலுத்தினால் போதும். குத்தகை காலம் முடிவடைந்த பிறகு அதனை கார் நிறுவனத்திடமே மீண்டும் ஒப்படைத்துவிட்டு வேறு ஒரு புதிய காருக்கு மாறி கொள்ளலாம். அதேபோல் காரை குத்தகைக்கு எடுத்தால், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் டீலர்ஷிப்பே பராமரிப்பு மற்றும் ரிப்பேர் வேலைகளை கவனித்து கொள்ளும் எனவே குறிப்பிட்ட இடைவெளிகளில் அவ்வப்போது நடக்க வேண்டிய பராமரிப்பு பணிகளுக்கு நீங்கள் பொறுப்பாக வேண்டியதில்லை. அதேபோல் காரின் மறு விற்பனை *(Resale)* குறித்தும் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

ஒரு சில கார்களை நம்மால் வாங்க முடியாது.

அந்த அளவிற்கு விலை உயர்ந்ததாக இருக்கும். ஆனால் அந்த காரை ஓட்ட வேண்டும் என்பது நம்முடைய கனவாக இருக்கும். அப்படிப்பட்ட கார்களை குறிப்பிட்ட காலத்திற்கு ஓட்டுவதற்கு குத்தகை திட்டம்தான் ஏற்றது குறிப்பிட்ட கிலோ மீட்டர்கள் மட்டுமே ஓட்ட முடியும் என்பது காரை குத்தகைக்கு எடுப்பதில் இருக்கும் மற்றொரு குறைபாடு குறிப்பிட்ட கிலோ மீட்டர்களை கடந்து விட்டால், குத்தகை காலம் முடியாவிட்டாலும், அதாவது கார் உங்களிடமே இருந்தாலும் நீங்கள் மேற்கொண்டு ஓட்ட முடியாது. மீறி ஓட்டினால் அதற்கு ஏற்ப கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்.

எந்த அளவிற்கு நமக்கு காருக்கான தேவை மற்றும் உபயோகம் உள்ளது என்று பார்த்து சொந்த கார் வாங்குவதாக வேண்டாமா என்று முடிவு எடுக்கலாம். ஒரு உதாரணத்திற்கு தனிப்பட்ட முறையில் என்னிடம் கார் நிறுத்துவதற்கு இடம் உண்டு. கடன் வாங்காமல் உடனடியாக ஒரு *Toyota Innova* காரை முழு பணமும் கொடுத்து வாங்குவதற்கான பணமும் உண்டு என வைத்து கொள்வோம். ஆனாலும் நான் காரை வாங்க விரும்பவில்லை, ஏனெனில் அதிகபட்சம் ஒரு வருடத்திற்கு நான்கு அல்லது ஐந்து முறை மட்டுமே நான் காரை பயன்படுத்துவேன். ஆகவே எனக்கு சொந்தமாக கார் தேவையில்லை நான் என்னிடம் இருக்கும் பணத்தை கொண்டு இந்த காரை வாங்கி இருந்தால் இன்று அதன் மதிப்பு வெகுவாக குறைந்திருக்கும். ஆனால் அந்தப் பணத்தை பங்குச்சந்தையில் மற்றும் மியூச்சுவல் பண்டுகளில் முதலீடு செய்வதன் மூலம் அதன் மதிப்பு வெகுவாக உயர்ந்து இருக்கும். ஒரு வருடத்தில் *luxury* வாடகை கார்களுக்காக நான் செலவழிக்கும் தொகை என்பது எனது பரஸ்பர நிதி மற்றும் பங்குச் சந்தை முதலீட்டில் கிடைக்கும் லாபத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவு; இந்த சூழ்நிலையில் சொந்த கார் வாங்குவது நஷ்டத்தையே ஏற்படுத்தும்.

எனவே மேலே குறிப்பிட்டவற்றை மனதில் கொண்டு உங்களது தேவை சாதக பாதகங்களை ஆராய்ந்து பொருளாதார அடிப்படையில் சிந்தித்து முடிவு எடுப்பது புத்திசாலித்தனம்.

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

Online fund Transfer Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

குடியரசும் ஜன நாயகமும்
REPUBLIC DEMOCRACY

மேலையூர் ச.அன்பழகன் அலை பேசி 98413 73184

பொங்கல் விடு முறைகளுக்கு முன்பு வந்த ஒரு சனிக் கிழமை மாலை தொலைக் காட்சியில் செய்தி பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது "நமஸ்காரம் வக்கீல் சார்" என்று கூறிக் கொண்டே எதிர் வீட்டு சாமியின் மாமனார் திரு சந்தானம் உள்ளே நுழைந்தார், வாருங்கள் எங்கே ரொம்ப நாட்களாகப் பார்க்க முடியவில்லையே என்றேன். ஏன் 2 மாதத்துக்கு முந்தி தான் மாயரத்திலியோ சிதம்பரத்திலியோ ஒரு கல்யாணத்தில் பார்த்தோமே. விவசாய வேலைகள் நிறைய இருந்ததால் சென்னை வர முடியவில்லை பொண்ணுக்கு பொங்கல் வரிசை வச்சூட்டுப் போக வந்தேன் என்ற அவர் சரி நான் ஸ்ட்ரைட்டா விஷயத்துக்கு வரேன், "ரிபப்ளிக் னா என்னா டெமாக்ரசி னா என்னா என்றார்.

ரிபப்ளிக் னா குடியரசு டெமாக்ரசி ன்னா ஜன நாயகம் அல்லது மக்களாட்சின்னு சொல்லுவாங்க என்றேன். அந்த டிக்ஷ்ணரி அர்த்தம் எல்லாம் எங்களுக்கும் பார்க்கத் தெரியும் ரெண்டுக்கும் உள்ள வித்தியாசம் நம் நாடு ரிபப்ளிக்கா டெமாக்ரசியா ங்கறதை எல்லாம் விபரமா கட்டுரையாத் தயார் பண்ணுங்க நான் திங்கட்கிழமை காலைல ஊருக்குப் போறேன் அதுக்கு முன்னாடி வந்து வாங்கிக்கறேன்னு சொல்லிட்டு கிளம்பி விட்டார்

இந்தியா குடியரசா ஜன நாயக நாடா ?

குடியரசுக்கும் ஜன நாயகம் என்னும் மக்களாட்சிக்கும் உள்ள வேறு பாடு தெரியாத சிலர் நம் நாடு ஜன நாயக நாடுதான் ஆனால் உண்மையில் குடியரசு நாடு அல்ல என்பார்கள் அது தவறு நமது அரசியல் சாஸனத்தின் முகப்புரை.

இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு இறையாண்மை வாய்ந்த சமதர்ம நெறி சார்ந்த மதச் சார்பற்ற மக்களாட்சிக் குடியரசாக அமைக்கவும் அதன் குடி மக்கள் அனைவருக்கும் என்று தொடங்குகிறது/

ஆங்கிலத்தில் WE THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC and to secure all citizens என்று தொடங்கும்.

எனவே நமது நாடு ஒரு ஜனநாயகக் குடியரசு என்பது தெளிவாகிறது.

மக்களாட்சி மற்றும் குடியரசின் முக்கிய அம்சங்கள்

" குடியரசு மற்றும் ஜன நாயகம் என்னும் மக்களாட்சி இரண்டுமே ஒரு அரசியல் முறையை அளிக்கின்றன. அதில் குடி மக்கள் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் அந்தக் குடி மக்களின் நலனைக் காக்கப் பதவி ஏற்பார்கள்.

" ஒரு சுத்தமான ஜன நாயகத்தில் பெரும்பான்மை யானவர்கள் வாக்களித்து சட்டங்கள் இயற்றப்படும் அதில் சுறு பான்மையினரின் நலன்கள் பாது காக்கப்படாமல் விடப் படும்.

" ஒரு குடியரசில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளால் சட்டங்கள் இயற் றப்படும் அவை நாட்டில் உள்ள பெரும்பான்மை யானவர்களின் விருப்பங்களில் இருந்து சிறு பான்மகியினரின் உரிமைகளைப் பாதுக்காக்க உள்ள அரசியல் சாஸனத் தில் கூறப்பட்டுள்ளவாறு இருக்க வேண்டும்.

" ஐக்கிய அமெரிக்கா அடிப்படையில் குடியரசாக இருந்த போதிலும் ஒரு நல்ல பிரதி நிதித்துவ ஜன நாயகமாகவும் விளங்குகிறது.

ஜன நாயகமும் அரசியல் சாஸனமும்

பெரும்பாலான ஜன நாயக நாடுகள் எழுதப்பட்ட அரசியல் சட்டத்தைப் பெற்றிருக்கும் ஆனால் ஜன நாயக நாட்டுக்கு அரசியல் சட்டம் இருந்தாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. கீழ்க்கண்ட நாடுகள் டெமாக்ரடிக் என்னும் ஜன நாயக நாடாக இருந்த போதிலும் அவைகளில் எழுதப்பட்ட அரசியல் சட்டங்கள் கிடையாது.

1. பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட ஒன்று பட்ட அரசு மற்றும் வடக்கு அயர்லாந்து

2. இஸ்ரேல் பொதுவாக ஜன நாயகம் என்னும் மக்களாட்சி நாடாகக் கருதப்படும் ஆனால் அதற்கு என்று கான்ஸ்டிடூஷன் என்னும் அரசியல் சட்டம் ஏதும் கிடையாது.

3. ந்யூஸிலாந்துக்கும் எழுதப்பட்ட அரசியல் சட்டம் கிடையாது.

அரசியல் சாஸனத்தின் இரண்டு செயல் பாடுகள்

ஒரு நாட்டின் கான்ஸ்டிடூஷன் என்னும் அரசியல் சட்டம் இரண்டு குறிப்பிட்ட செயல்களைச் செய்கிறது. முதலாவதாக நாடு செயல் படத்தேவையான ஒரு கட்டமைப்பை உருவாக்குகிறது அரசின் ஒவ்வொரு பிரிவுக்கும் உள்ள அதிகாரங்கள் மற்றும் அவற்றின் எல்லைகளை விவரிக்கிறது நாட்டின் இரு அவைகள் முறை , கூட்டாட்சி முறைத் தத்துவம் மற்றும் சுதந்திரமான நீதித் துறை போன்ற வற்றின் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன் ஜன நாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படட் பெரும்பான்மை யினரின் அதிகாரங்களை சரி பார்த்து தனி நபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் ஒரு முறையை உருவாக்கும்.

இரண்டாவது செயல்பாடு நேரடியாக தனிநபரின் உரிமைகளைப் பாதுகாப்பது ஆகும் நமது அரசியல் சாஸனத்தின் பகுதி III ல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மாநில அரசின் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தவும் கட்டாயப் படுத்தலில் இருந்து தனி நபர்களைப் பாது காக்கவும் ஆகும். அரசியல் சட்டத்தின் இந்தப் பகுதி குடியரசின் தனிநபர்களின் சுதந்திரம் பற்றிய குறிக்கோளுக்கு ஒரு உறுதியான முறையை அளிப்பதற்காக உள்ளது . ஒரு வகையில் பார்த்தால் அரசியல் சட்டத்தின் இப்பகுதி ஜன நாயகமற்றது போலிருக்கும் . ஏனென்றால் இது ஜன நாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் பெரும்பான்மை விதிகளைப் பயன் படுத்தி எடுக்கும் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துகிறது அடிப்படை உரிமைகள் ஜன நாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கன்ங்கள் என்ன செய்யக் கூடாது என்பதை நமக்குக் கூறுகின்றன அரசியல் சட்டப் பிரிவு 14 ல் அரசு சட்டத்தின் முன்னால் எவருக்கும் சமத்துவத்தை மறுக்கக் கூடாது என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

ஜன நாயகம் மக்கள் ஆட்சி என்றால் என்ன?

டெமோக்ரசி என்னும் ஆங்கில சொல டெமோஸ் மற்றும் க்ரேஷியா என்ற இரண்டு கிரேக்க சொற்களின் சேர்க்கை ஆகும் டெமோஸ் என்றால் மக்கள் என்றும் க்ரேஷியா என்றால் அதிகார மையம் என்றும் பொருளாகும் இப்படியாக டெமோக்ரசி என்னும் ஜன நாயகம் என்பது ஒரு அரசாங்கத்தை நடத்தும் அதிகாரம் ஒரு அரச குடும்பத்தையோ அல்லது தனிப்பட்ட தனி மனிதனையோ சாராமல் அந்த நாட்டு மக்களிடம் சாரும் என்பது பொருளாகும் அதாவது நாட்டு மக்கள் தங்கள் அரசாங்கம் எவ்வாறு நடை பெற வேண்டும் என்பதை தாங்கள் அளிக்கும் வாக்குகள் மூலம் தீர்மானிக்கிறார்கள் அதனால்தான் இதனை மக்களாட்சி என்கிறோம்

மூன்று முக்கிய வகை ஜன நாயகம்

இன்றைய உலகில் உள்ள முக்கிய மூன்று வகை ஜன நாயகத்தைப் பார்ப்போம்

1. நேரடி ஜன நாயகம்

இதற்கு சுத்தமான ஜன நாயகம் என்றும் பெயர் உண்டு இந்த முறை ஜன நாயகம் என்னும் மக்களாட்சியின் அடிப்படை முறையாகும் இந்த முறையில் தகுதி உள்ள தனி நபர்கள் தாங்கள் தேர்தலில் அளிக்கும் வாக்குகள் மூலம் அரசின் கொள்கைகளை ஒரு வடிவில் அமைக்க முடியும் வேறு விதமாகச் சொல்லப் போனால் குடி மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் நேரடி யாக ஈடு படுகிறார்கள் இந்த முறையில் அரசியல் முடிவுகள் பெரும்பான்மையாக வாக்களித் தவர்களால் எடுக்கப் படும் . தகுதி வாய்ந்த ஒவ்வொருவரும் வாக்களிப்பார்கள் அதிக வாக்குகளைப் பெறும் குழு வெற்றி பெறும் நேரடி ஜன நாயகத்தில் உள்ள நன்மை குடி மக்கள் ஒவ்வொருவரும் ஜாதி மத இன மற்றும் பொருளாதார பேதம் இல்லாமல் வாக்களிப்பதன் மூலம் அவர்களுக்கும் ஒரு அதிகாரம் உள்ளது.

2. பிரதி நிதித்துவ ஜன நாயகம்

இரண்டாவது வகையான பிரதி நிதித்துவ ஜன நாயகம் சில நேரங்களில் மறை முகமான ஜன நாயகம் என்றும் அழைக்கப்படும் இந்த முறையில் நடை பெறும் அரசாங்கத்தில் சில தனி நபர் கள் பொது மக்களின் மன் விருப்பத்தை பிரதி பலிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப் பார்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் என்று அழைக்கப்படும் இத்தகைய நபர்கள் சில குறிப்பிட்ட பிரிவினைச் சேர்ந்த குடி மக்கள் சார்பாக வாக்களிப்பதற்காகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் ஆவார்கள் அந்தப் பிரிவு குடி மக்கள் பல வகைப் படும் அரசாங்கத்தின் செயல்பாடுகளை ஒழுங்கு படுத்துவதே இந்த வகை பிரதிநிதித்துவ ஜன நாயகத்தின் நோக்கமாகும் ஒரு அர சாங் கத்தில் நிறைய மக்களின் பிரதி நிதிகள் இருக்கும்போது இது முக்கியமாகும் அதனால் தான் பல கூட்டாட்சி முறை அரசாங்கங்கள் இந்த வகை மறை முக ஜன நாயக முறையைப் பயன் படுத்து கின்றன.

இந்த முறையில் உள்ள குறை பாடு

இந்த முறையில் உள்ள ஒரு பெரிய சங்கடம் என்னவென்றால் பெரும்பாலான இனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் சட்டப்படியோ அல்லது அரசியல் சாஸனப்படியோ அவர் களு டைய தொகுதி மக்களின் பிரதி நிதிகளாகச் செயல் படுவதில்லை அவர்களாகவே அவர்களுடைய சொந்த முடிவினை எடுத்துக் கொள்வார்கள் அது அவ்வாறு தேர்ந்தெடுக் கப்பட்ட பிரதி நிதிகள் லஞ்சம் பெற வாய்ப்பளிக்கும்.

3 அரசியல் சாஸன ஜன நாயகம்

அரசியல் சாஸன ஜன நாயகம் என்பது தற்போது நடை முறையில் உள்ள மூன்றாவது ஜன நாயகம் ஆகும் பெரும்பானமையினரின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்தும் வகையில் இந்த ஜன நாயகத்தின் கட்டமைப்பு இருக்கும் இந்த வகை ஜன நாயகத்தில் அரசியல் சாஸனமும் இதர அரசு ஆவணங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளின் அதிகாரங்களை ஒழுங்கு படுத்தி உதவும் அரசியல் சாஸனம் தான் ஒரு நாட்டின் மிக உயர்ந்த சட்டமாகும் அதில் மக்களின் உரிமைகள் கூறப்படுவதுடன் ஒரு அரசாங்கம் எவற்றைச் செய்யலாம் எவற்றைச் செய்யக் கூடாது என்பனவற்றையும் கூறப்பட்டிருக்கும் அதாவது நாட்டு

மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைக் காக்கும் வண்ணம் அரசாங்கத்தின் அதிகாரங்களை அரசியல் சாஸனம் கட்டுப் படுத்தும்.

அதன் விளைவாக அரசியல் சாஸன ஜன நாயக அரசாங்கம் அரசியல் சட்டத்தை நிலை நிறுத்துவதுடன் மக்களின் விருப்பங்களையும் பிரதி பலிக்கச் செய்யும்.

குடியரசு என்றால் என்ன ?.

ரிபப்ளிக் என்ற ஆங்கிலச் சொல் பொலைடெலா POLITELA என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது அதன் பொருள் குடி மக்களின் உரிமைகள் ஆகும் நவீன ஆங்கிலத்தில் ஒரு குடியரசு முறை அரசாங்கத்தில் அதிகாரங்கள் நாட்டின் குடி மக்கள் வசம் இருக்கும் இதனைச் செய்வதற்கு குடியரசு நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளை அவர்களுடைய குடி மக்களின் விருப்பங்களை அரசாங்கத்தின் விதி முறைகளுக்குள் பிரதி பலிக்கச் செய்யப் பயன் படுத்திக் கொள்ளும் வேரு விதமாகச் சொன்னால் குடியரசு நாடுகள் பிரதிநிதித்துவ முறை அரசாங்கத்தைச் சார்ந்து உள்ளன கூடுதலாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு நாடு குடியரசு என்று சொல்லப் படுவதற்கு அதன் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவராக இருக்க வேண்டும்.

அதனுடைய பொருள் என்ன வென்றால் ஃப்ரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற தேர்ந் தெடுக் கப் பட்ட தலைவர்களைக் கொண்டுள்ள நாடுகள் குடியரசு ஆகும் கனடா பிரிட்டன் போன்ற அரச வம்சத்தினரைத் தலைவராகக் கொண்டுள்ள நாடுகள் குடியரசு நாடுகள் அல்ல என்ப தாகும்.

ஒட்டு மொத்தமாகக் கூறுவதானால் குடியரசு முறை அரசாங்கத்தில் அதிகாரங்கள் அ மக்கள் வசம் இருக்கும் ஆ அந்த அதிகாரம் பிரதி நிதித்துவ அரசால் செலுத்தப்படும் மற்றும் இ அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இருப்பார்.

குடியரசு வகைகள்

ஏற்கனவே சொல்லியுள்ள மாதிரி எந்த ஒரு நாட்டில் பொதுவான அரசு அதிகாரங்கள் குடி மக்கள் வசம் இருந்து அந்த நாடு பிரதி நிதித்துவ அரசாங்க முறையை அனுஷ்டித்து அதன் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கிறாரோ அந்த நாடு குடியரசு ஆகும் இவை எல்லாம் குடியரசுக்கான பொதுவான அடையாளங்கள் உலகெங்கும் பல வகைக் குடியரசு நாடுகள் உள்ளன 2017 ஆம் ஆண்டு நிலவரப்படி உலகெங்கும் உள்ள 206 நாடுகளில் 159 நாடுகள் குடியரசு என்ற சொல்லைத் தங்கள் நாட்டின் அதிகார பூர்வ பெயருடன் சேர்த்துக் கொண்டுள்ளன அத்தகைய குடியரசு வகைகளைப் பற்றி சற்று பார்ப்போம்.

அரசியல் சாஸனம் சார்ந்த குடியரசு

அரசியல் சாஸனம் சார்ந்த குடியரசில் அரசாங்கம் அந்த நாட்டின் அரசியல் சட்டத்தில் உள்ள சட்டங்களால் வரையறுக்கப்படுகிறது அது பொதுவாக மத சார்பற்றத் தன்மை உடையதாக இருக்கும் அத்துடன் அந்த அரசாங்கம் மக்களால் வாக்களிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளால் நடத்தப்படும் அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் நாட்டின் அரசாங்கத் துக்காக அந்த நாட்டின் அரசியல் சாஸனத்தில் வகுக்கப்பட்டுள்ள விதி முறைகளைப் பின் பற்றி அரசை நடத்த வேண்டும்.

நவீன அரசியல் சாஸனம் சார்ந்த குடியரசுக்கு உதாரணம் ;– இந்தியா தென் ஆபிரிக்கா போன்ற நாடுகள்.

நாடாளும் மன்றம் சார்ந்த குடியரசு

இப்படிப்பட்ட நாடாளும் மன்றம் சார்ந்த குடியரசு என்பது தனது நாட்டு நாடாளும் மன்றத்தைச் சார்ந்து இருக்கும் இதில் நாட்டின் தலைவர் அரசாங்கத்தின் நிர்வாகப் பிரிவினை நடத்துவார் நாடாளும் மன்றத்தின் தலைவர் அந்நாட்டு சட்டங்களுக்குத் தலைமை வகித்து நடத்துவார் அந்த சட்டங்களை உருவாக்கும் சட்ட மன்றம் நாட்டின் குடி மக்களால் வாக்களித்து நாடாளும் மன்றத்துக்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளைக் கொண்டதாக இருக்கும்

உதாரணம் – கிரீஸ் , ஹங்கேரி மற்றும் மால்டா

அதிபரைச் சார்ந்த குடியரசு

அதிபரைச் சார்ந்த குடியரசில் அந்த நாட்டின் குடி மக்களே வாக்களித்து நேரடியாக அதன் அதிபரை குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப் படுவார் கள் இருந்த போதிலும் அதிபரைச் சார்ந்த குடியரசில் குடியரசு அதிபரே அரசாங்கத்தின் தலை வராகவும் பணியாற்றுவார் இது மோனார்ச்சி என்னும் மன்னராட்சிக் குடியர்சு முறையிலிருந்து மாறு பட்டதாகும் அதாவது மன்னராட்சிக் குடியரசில் அரசரோ இராணியோ நாட்டின் அதிபரா கத் திகழும்போது ஒரு பிரதமரோ அல்லது தலைவரோ அரசின் அன்றாட அலுவல்களைக் கவனிப்பார்கள்.

உதாரணம் – ப்ரேசில் , மெக்ஸிகோ , இந்தோனிஷியா

கூட்டாட்சிக் குடியரசு

கூட்டாட்சிக் குடியரசு நாடுகள் என்பவை பல நாடுகள் ஒன்று சேர்ந்த ஒரு அமைப்பாகும் அந்த நாடுகள் அனைத்தும் குடியரசு முறையில் அரசாங்கம் அமைத்திருக்கும் ஒரு நாடு கூட்டாட்சிக் குடியரசாகத் திகழ, அதில் இணைந்துள்ள அனைத்து நாடுகளும்

தங்களுக்குரிய சட்டங்களைத் தாங்களே இயற்றிக் கொள்ளவும் சுயமாக முடிவு எடுத்துக் கொள்ளவும் சுதந்திரம் கொண்ட நாடுகளாக இருக்க வேண்டும் கூட்டாட்சி முறையில் உள்ள அந்த நாடுகளின் சட்டங்கள் நாடு முழுமைக்குமான கொள்கைகள் மற்றும் சட்டங்களுக்கு முரண்பாடு இல்லாமல் இருக்க வேண்டும்.

உதாரணம் ;– ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் ஸ்விட்சர்லாந்து

மத சார்புக் குடியரசு

இந்த வகைக் குடியரசுள் அடிப்படையில் மதம் சாரந்த சட்டங்களால் ஆட்சி செய்யப்படும் அந்நாடுகளின் அரசியல் சட்டமும் மதம் சார்ந்ததாக இருக்கும் அதன் பொருள் அரசாங்கத் தால் கூடுதலாக இயற்றப்படும் சட்டங்களும் கொள்கைகளும் மதச் சட்டங்களை ஒட்டியே இருக்க வேண்டும் என்பதாகும் மேலும் அந்த நாடு குடியரசு என்னும் தகுதியைப் பெற இத்தகைய மத சார்புள்ள நாட்டின் தலைவர் அரச குடும்பத்தை ச் சாராதவராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.

உதாரணம் ;– ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான்.

ஒரே நாடு ஒன்றுக்கு மேற்பட்ட குடியரசாக இருக்க முடியுமா ?

ஒரு நாடே ஒன்றுக்கு மேற்பட்ட ஜன நாயக நாடாக இருப்பது போல் ஒரே நாடு ஒன்றுக்கு மேற்பட்ட குடியரசாகவும் இருக்க முடியும் உதாரணமாக ஈரான் நாட்டுக்கு நாடாளும் மன்றம் உள்ளது அதனால் அது நாடாளும் மன்ரம் சார்ந்த குடியரசாக உள்ளது ஆனால் அதன் அரசாங் கக் கட்டமைப்பு மதம் சார்ந்ததாகவும் உள்ளது அதனால் அது மதம் சார்ந்த குடியர சாகவும் கருதப்படும் அதே போல ஜெர்மனி போன்ற நாடு நாடாளும் மன்ரம் சார்ந்த குடியர சாகவும் கூட்டாட்சிக் குடியரசாகவும் திகழ்கிறது.

குடியரசு மற்றும் ஜன நாயகம் பற்றி ஏதும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக் இருக்கும்.

சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் தாட்கோ.காம், கோரா.காம். திங்க் ப்ரகதி.காம், டைம்ச் ஆஃப் இந்தியா. இந்தியா டைம்ச்.காம்,மற்றும் ப்ளாக். பிரிப்ஸ்காலர் .காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுக்கப் பட்டது.

பேத்திக்காக!

நினைந்து நினைந்து
பார்க்கிறேன்.
மூன்றாவது படித்தது
முதல்தான் எனக்கு
ஞாபகத்திற்கு வருகிறது!

அதற்கு முன்பு
ஐந்து, ஆறு வயதின்
நிகழ்வுகள்
அவ்வளவு தெளிவாக
நினைவில் இல்லை!

என் பெயர்த்திக்கு
இப்போதுதான்
வயது நான்காகிறது!

வந்து வந்து
என்னிடம்
மழலை பேசுகிறாள்.
கை பிடித்து கடைக்குச்
செல்ல அடம் பிடிக்கிறாள்!

தன்னைப்போல்
என்னையும்
உட்கார்ந்து எழுந்து
குதித்து
உடற்பயிற்சி செய்யச்
சொல்கிறாள்
அவள் டீச்சர்
சொல்லிக் கொடுத்தபடி!

இயலாது என்று
சற்று நழுவினாலும்
கண்டு பிடித்து
சிரித்துக் கொண்டே
திரும்பவும் விடாமல் செய்ய
வம்புக்கு இழுக்கிறாள்!

இதுபோல் நிகழ்வுகளை
அவள் நெஞ்சில் நிலுத்தி
வாழ்நாள் முழுதும்
பேசிக் கொண்டிருக்க
வேண்டுமென்ற ஆசையில்,

இன்னுங் கொஞ்ச வருடம்
அவள் வளரும் வரை,
என் உயிர் நீடிக்க
வேண்டுமென
மனசு துடிக்கிறது
இதயமும் சேர்ந்தே
துடிக்குமென்ற
நம்பிக்கையோடு!

– மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.
95782 86891

சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
தொ.பேசி: 044–26532182
Email: thiagu1943@gmail.com

நம்வாழ்விலிருந்து கிளைத்தெழுந்த இலைகளினின்று உதிர்ந்துபோன இலைகளுக்காக வருந்தாமல், விழுந்த இலைகளை உரமாக்கிக் கொள்வதே அறிவுடமை.

தாய்ப் பாசம் அனைவரும் அவசியம் படிக்கவேண்டிய ஒரு கதை

பழங்காலத்தில் ஜப்பான் நாட்டில் விசித்திரமான ஒரு பழக்கம் இருந்தது.பெற்றோர்கள் வயதாகி முதுமையின் காரணமாக ஆற்றல் குறைந்து ,மற்றவர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்கமுடியாத நிலைக்கு வந்துவிட்டால் அவர்களைத் தூக்கிக் கொண்டுபோய் உயரமான மலைகளின் மேல் வைத்துவிட்டு வந்துவிடுவார்கள்.எதுவும் செய்யமுடியாத நிலையில் உள்ள அம்முதியோர்கள் பசி.தாகத்தினால் தனிமையில் வாடி வதங்கி மடிவார்கள்.

இப்படியான சூழ்நிலையில் ஓர் இளைஞன் முதுமையடைந்த தன் தாயை சுமந்துகொண்டு மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியில் மலை உச்சியை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.தாய் .மகன் இருவருமே ஏதும் பேசவில்லை.ஆனால் சிறிது நேரத்தில் தன் தோலில் இருந்த தாயார் ,ஏதோ ஒருவித மணம் கொண்ட மரங்களின் சின்னச் சின்ன கிளைகளை ஒடித்து போட்டுக்கொண்டே வருவதை மகன் அறிந்தான்.உடனே அம்மா ,ஏதோ ஒருமாதிரியான மரத்தின் கிளைகளை ஒடித்து போட்டுக்கொண்டே வருகிறீர்களே! ஏன் ?

என்று கேட்டான்.அதற்கு தாயார் மகனே ,நீ என்னை மலை மீது விட்டு விட்டு வீடு திரும்பும் போது வழி தெரியாமல் திண்டாடக் கூடாதல்லவா ? இங்கே போடப்பட்டுள்ள கிளைகளை கவனித்து நடந்தால் வழி தவறாமல் நீ பாதுகாப்பாக வீடு போய்ச் சேரலாம்.அதற்காகவே கிளைகளை அடையாளமாப் போடுகிறேன்

என்றாள்.வயதாகிவிட்ட தன்னைத் தவிக்கவிட்டுச் சென்றாலும்,மகன் பத்திரமாக வீடுபோய்ச் சேர வேண்டும் என்று நினைக்கும் பாசமிகுந்த இந்த தாயா பயனற்றவர் என்று உள்ளம் கேட்க ,அவன் தாயை மீண்டும் தன் வீட்டுக்கே கொண்டுவந்து பாசத்துடன் பராமரிக்க லானான்.அதன் பின்பு அக் கொடூரமான பழக்கம் அந்த நாட்டை விட்டே ஒழிந்தது.

இக்கதை சொல்லவரும் கருத்து நம் வாழ்வுக்கு மிக முக்கியம்.நீ நல்லவனா என்று தெரிவதற்கு முன்னாலேயே தன் வயிற்றில் இடம் கொடுத்தவள் உன் தாய் எத்தனை எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீ இருந்த வீட்டிற்கு வாடகை கொடுக்க முடியாது என்றால் அது உன் தாயின் கருவறை என்பதை மறந்துவிடாதே! எத்தனையோ கஷ்டங்கள் ,நஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் அசிங்கங்கள், அவமானங்கள் ,கடந்த பிறகும் ஒன்றுமே தெரியாதது போல் காட்டிக்கொண்டு குடும்பத்தின் மத்தியில் சிரித்துக் கொண்டிருக்கும் தந்தைக்கு நிகரான நம்பிக்கை ஊட்டும் புத்தகம் இந்த உலகில் வேறு எதுவும் இல்லை.நம் பெற்றோர்கள் எப்போதும் நம் நலன் நினைப்பவர்கள்.இவர்களை கண்போன்று பாதுகாப்போம்!

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

கல்லாத ஒருவன், தன்னைக் கற்றவன் போல மதித்துக்கொண்டு பேசினால் அவனுக்கு இயல்பாக உள்ள மதிப்பும் கெட்டுப்போகும்.

துணைக்கால் இல்லாத திருக்குறள்!

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. – என்றார் வள்ளுவர்.

இந்தக்குறளின் சிறப்பு, எந்த இடத்திலும் துணைக்கால் (ா) இல்லாமல் அமைந்துள்ளது. காரணம், ஒருவன் கற்ற கல்வியானது அவனுக்கு வாழ்நாள் முழுவதும், அவனது கால் போல துணைவரும் என்பதை குறிக்கிறதாம்.

சிரிப்புக்கு சில

ஒருத்தன் நீண்டதூரம் ரயில் பிரயாணம் புரப்பட்டான்.ரயில் போய்கிட்டே இருந்தது. கொஞ்ச தூரம் போச்சு...பாதி வழியிலே கையிலே வச்சிருந்த டிக்கெட்டை காத்துலே விட்டுட்டான். அய்யய்யோ என் டிக்கெட் போயிட்டதே...டிக்கெட் போயிட்டதே...ன்னு கத்த ஆரம்பிச்சுட்டான்.

பக்கத்தில் இருந்த பெரியவர் அவனைப் பார்த்துப் பரிதாபப்பட்டு...கவலைப் படாதே தம்பி...போனா போவுது வேறே டிக்கெட் வாங்கிக்கலாம் ...! ன்னு ஆறுதல் சொன்னார். அதுக்கு அவன் சொன்றான்.

...சார் ....நான் அதுக்காக அழலே... அந்த டிக்கெட் கிடைச்சாத்தான் நான் எந்த ஊருக்குப் போகணுங்கறது எனக்குத் தெரியும்!...அப்படிங்கறான்.

சிரிப்பு சாவி தொலைந்துவிட்டால் சந்தோஷம் என்னும் வீடு பூட்டியே கிடக்கும்.சிரிப்பவர்கள் எல்லோரும் கவலையின்றிவாழ்பவர்கள் அல்ல.கவலையைமறக்கக்கற்றவர்கள்.கவலை,நம்சவப்பெட்டிக்குஓர் ஆணிசேர்க்கிறது. சிரிப்பு, ஓர் ஆணியை கழற்றுகிறது. சிரிப்பு சுவாசத்தை மேம்படுத்துது! ரத்த அழுத்தத்தை குறைக்குது! உடம்பு குணமாகறத்துக்கே உரிய சில ஹார்மோன்களை அதிகமா உருவாக்க வழி செய்கிறது!இந்த அளவுக்குத்தான் சிரிப்போட செயல்பாட்டை நாம புரிஞ்சுக்க முடியுது! இருந்தாலும் இதைப்பத்தியெல்லாம் கண்டபிடிக்க வேண்டியது இன்னும் இருக்கு! அதையெல்லாம் விவரமா கண்டுபிடிக்கிறவரைக்கும் நாம காத்துகிட்டிருக்க வேண்டாம்! இப்பவே தாராளமா சிரிக்கலாம்அதுலே என்னத்துக்கு சிக்கனம்? காசா? பணமா?

புத்தகம் படியுங்கள்

புத்தகங்களை நாம் மேலிருந்து கீழே வாசிக்கின்றோம். புத்தகங்கள் நம்மை கீழிருந்து மேலே உயர்த்துகின்றன.புத்தகங்கள் படிக்கும் பழக்கம், ஒருவனை முழுமையான மனிதனாக உருவாக்கும்.

வெற்றியை எவ்வாறு சாதனையாக்குவது, தோல்வியை எப்படி தோற்கடிப்பது என்பதை நூலகத்தில் உள்ள நூல்களைப்படித்தால் புரியும். ஆயிரக்கணக்கான நுட்பம் நிறைந்த வழிகள் புதையலாக புதைந்திருந்கின்றன. நல்ல புத்தகங்களை வாசிப்பதற்கு ஆகும் நேரத்தைவிட,யோசித்து நல்ல நூல்களை தேர்ந்தெடுப்பதற்கு ஆகும் நேரத்தை நீட்டித்துக்கொள்ளுங்கள்.

ஒரு நல்ல புத்தகமே ஒரு மனிதனுக்கு ஏமாற்றாத நண்பனும்,சிறந்த துணையுமாகும். கடன் மற்றும் வட்டி என்னும் வார்த்தைகளை நாம் கணித பாடத்தில் அறிந்துகொள்கிறோம். நாம் வளர்ந்த பிறகு, நம் வாழ்க்கையில் அது அனுபவமாக மாறுகிறது. சிறு பிராயத்தில் நாம் சாதாரணமாக தாண்டும் சொற்கள்தான் வாழ்க்கையை வாழும்போது நம்மைத் துரத்தத் தொடங்குகின்றன. எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன, நம்மைச்சுற்றிலும் அவற்றைப் பகுத்தால் எத்தனையாயிரம் சொற்கள்? எல்லாச் சொற்களையும் வாசிக்கின்ற அனுபவம், அறிந்துகொள்கிற அனுபவம் சகலருக்கும் கிடைக்கிறதா? எல்லோருமா புத்தகங்களோடு இயைந்த வாழ்க்கை வாழ்கிறார்கள். புத்தகங்களை மனிதர்களும் ,மனிதரகளை புத்தகங்களும் உருவாக்குவது ஒரு ரகம்.

குழந்தை

அன்பைக் கொடுத்தேன்
பலமடங்கு திரும்பக் கிடைத்தது
மண்ணிப்பை வேண்டினேன்
நிபந்தனையின்றிக் கிடைத்தது
மிட்டாயைத் தவிர
அனைத்தும் எளிதாகவே கிடைக்கிறது
குழந்தை யிடம் இருந்து.

கோயில் இல்லாத ஊர்

பிரம்மனுக்கு கோயில்கள்
இல்லாத குறையைப் போக்க
வீதி யெங்கும் பெற்றோருக்கு
கோயில்கள் முதியோர் இல்லம்.

ரம்யா ரவிந்திரன் எழுதிய அம்புலிக்கு
அப்பால் கவிதைத் தொகுப்பில் இருந்து

தமிழின் தனிச்சிறப்பு

பூப்பறித்தல், பூக்கிள்ளுதல். பூக்கொய்தல் என்ற பல சொற்கள் பழக்கத்தில் இருந்தாலும் ஒவ்வொன்றும் ஒரு தனிப்பொருளைக் பெற்றுள்ளது:

ரோஜா முதலிய செடிகளில் பூக்கும் பூவை எடுப்பது – பூப்பறித்தல்
தரையில் படர்ந்திருக்கும் கொடிகளில் உள்ள பூவை எடுப்பது – பூக்கிள்ளுதல்
மரம். பந்தல் இவற்றில் மேலே படர்ந்திருக்கும் கொடிகளில் உள்ள பூவை எடுத்தல் – பூக்கொய்தல்

Uncle எனும் ஆங்கிலச் சொல் சிற்றப்பா,பெரியப்பா பிள்ளைகளையும் குறிக்கும். அத்தை மகள், மாமன் மகள்களையும் குறிக்கும். (ஆண்பால், பெண்பாலுக்குக்கூட இந்த ஒரே சொல்தான்.) சிற்றப்பா, பெரியப்பா, மாமா என்று அனைவரையும் ஒருசேர குறிப்பது.

டார்வினின் அதிரடி பதில்



சார்லஸ் டார்வின், பரிணாமக் கோட்பாடு தத்துவத்தை விளக்கி புகழ் பெற்ற விஞ்ஞானி ,குரங்கிலிருந்து தோன்றியவன் மனிதன் என்ற உண்மை கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியது. அக்காலத்து மக்கள்,நம் மூதாதியரை இவர் குரங்கு என்று சொல்கிறாரே,என்று அவர் மீது கோபம் கொண்டிருந்தார்கள். எனவே சில குறும்புக்கார சிறுவர்கள் நீல வண்டு ஒன்றினைப்பிடித்து அதன் இறக்கைகளை ஒடித்துவிட்டு அதற்குப்பதிலாக வண்ணத்தப்பூச்சியின் இறக்கை களையும் வேறு சில பூச்சிகளின் உறுப்புகளையும் உடைத்து ஒட்டி டார்வினிடம் கொண்டுவந்தார்கள்.

ஐயா! இதோ இது ஒரு புதுவிதமான பூச்சி.அதை இதற்கு முன்பு நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள்.இது என்ன பூச்சி என்று கண்டுபிடித்துக் கூறுங்கள் பார்க்கலாம். என்றார்கள். டார்வின் அப்பூச்சிய வாங்கிப் பார்த்தார். இதை நீங்கள் கொல்வதற்கு முன்னால் இது நன்றாக ரீங்காரம் செய்ததா ?என்று கேட்டார்.

ஆமாம் என்றார்கள் சிறுவர்கள். சபாஷ்! இதுதான் அசல் ஹம்பக். என்றார். ஹம் என்றால் ஆங்கிலத்தில் ரீங்காரம் என்றும் பக் என்றால் பூச்சி என்றும் பொருளுண்டு.அதையே ஹம்பக் என்று சேர்த்து ஒரே வார்த்தையாகச் சொன்னால் முழுப்புரட்டு என்று அர்த்தமுண்டு....டார்வின் அதிரடியான பதிலைக்கேட்ட சிறுவர்கள் முகத்தில் அசடு வழிந்தது.

புதிருக்கு உங்கள் பதில் என்ன?

1) இரண்டு அப்பாக்களும் இரண்டு மகன்களும் ஒரு ஹோட்டலில் ஒவ்வொருவரும் ரூ.200 க்கு சாப்பிட்டனர்.ஆனால் பில் என்னவோ ரூ.600 மட்டும் வந்தது.எப்படி ?
2) முன்னால் பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய்பிறந்தநாள் 29021896.இவர் தனது முதலாவது பிறந்த நாளை என்று கொண்டாடியிருப்பார் ?
3) இவர் வாழ்க்கை முழுவதும் பிறருக்காகவே உழைக்கிறார். தனது உழைப்பைத் தானே பயன்படுத்திக்கொள்ளும் எண்ணம் சிறிதளவும் இல்லாதவர்.தன் உழைப்பு தனக்குப் பயன்படுவதை உயிருள்ளவரை விரும்ப மாட்டார்.யார் அவர் அப்படி என்ன உழைக்கிறார் ?

4) இந்த ஊரிலே அடிபட்டடால் அடித்த ஊரில் போய் சொல்லுவான்.யார் ?
5) உரசினால் போதும் அழிந்து விடும்.எது ?
6) பள்ளம் பார்த்தால் பாய்ந்து செல்வான்.இவன் யார் ?
7) ஒற்றைக்கால் நாராயணன் ஓடையிலே மீன் பிடிக்கிறான்.இவன்யார் ?

காற்றை எதிர்த்துத்தான் பட்டம் பறக்கிறது



வாழ்வில் எல்லா துறைகளிலும் யாராலும் வெற்றிபெறமுடியாது.சிலதுறைகளில்தோல்வி நேரிடத்தான் செய்யும். தோல்விகளைக் கண்டு தளரக்டாது.

தோல்விகள் நிகழ்வது இயற்கையே. தோல்விகளும்,போராட்டங்களும் நம்மை வாழ்க்கையில் மேலும் விழிப்புடன் சேயலாற்ற வைக்கின்றன.தோல்விகளிலிருந்து தவறுகளை உணர்ந்து தனது இலக்கை நோக்கித் தீவிரமாக செயல்படுபவனையே வெற்றி நாடிவருகின்றது. அத்தகைள நேரங்களில் இதுவும் கடந்துபோகும் ,நாளை நமதே என உற்சாகத்துடன் தொடர்ந்து செயலாற்றவேண்டும்.தோல்வி என்பது உண்மையை நிலைநாட்ட ஏற்படும் அனுபவம். என்பதை நினைவில் வைத்துக் கொண்டு எதிப்பைக் கண்டு அஞ்சாமல் தொடர்ந்து முன்னேறுங்கள்.

எழுதப்படிக்கக் கற்றுக்கொள்கிறபோதே நமக்கு எதிர்ச்சொற்களைப்பற்றி கற்றுத் தருகிறார்கள். இரவு பகல், சிரிப்பு அழுகை, இன்பம் துன்பம் என எல்லாவற்றுக்கும் எதிர்ப்பதங்கள் கற்றாலும் யதார்த்த வாழ்க்கையில் எந்த விஷயத்தையும் நாம் அப்படி அணுகுவதில்லை.ஒரு விஷயத்தைக் கையில் எடுக்கும்போதே அதன் சாதகங்களைப்பற்றிமட்டுமே யோசிக்காமல், பாதகமான இன்னொரு பக்கத்தைப்பற்றியும் கொஞ்சம் யோசித்து வையுங்கள். நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் உள்ளதைப் போல வாழ்க்கையில் நிகழ்கிற சம்பவங்களுக்கும் பல பக்கங்கள் இருக்கும். எந்த விஷயத்திலும் உணர்வு சார்ந்து யோசிக்காமல், யதார்த்த சிந்தனைக்கு இடமளித்து,நல்லது கெட்டதுகளை ஆராய்ந்து எடுக்கிற முடிவுகளே எப்போதும் சரியாக இருக்கும். வெற்றியைவிட தோல்விதான் அதிக பாடங்களைக் கற்றுத்தருகிறது.தோல்விப் படிக்கட்டுகளில் ஏறாமல் பெறுவது வெற்றியே அல்ல.

புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்



நோபல்பரிசு பெற்ற உலகப் புகழ்பெற்ற வங்கக்கவி ரவீந்திர நாத் தாகூர் ஜம்பது அல்லது அறுபதுபேர் கொண்ட பெரிய கூட்டுக்குடும்பத்தில் பிறந்தவர். அதில் பிள்ளைகள் பிறந்தநாளைக் கொண்டாடும் முறையே புதுமையானது. ஒவ்வொரு பிள்ளை பெயரிலும் ஒரு நோட்டுப் புத்தகம் இருக்கும். அதில் அந்தக் குடும்பத்துப் பெரியவர்கள் பிள்ளைகளைப் பற்றியத் தங்கள் பாராட்டை, விமர்சனத்தை, கருத்தை எழுதுவது வழக்கம்.ரவீந்திரநாத் பிறந்த நாளன்று அவன் பாட்டி எழுதிய வரிகள் என்ன தெரியுமா ?

ரவியைப் பற்றிச் சொல்ல உருப்படியா எதுவும் இல்லை.அவன் எதிர்காலத்தை நினைத்தால் கவலையாக இருக்கிறது.டாக்டராகவோ, என்ஜினியராகவோ பெரிய ஆளாக அவன் வருவான் என்று தோன்றவில்லை. மற்ற பிள்ளைகள் மாதிரி அவன் புத்திசாலியாக இல்லையே என்று வருத்தமாக இருக்கிறது. என்று எழுதியிருந்தார்.மற்ற பிள்ளைகள் என்ன ஆனார்கள் என்பதே இன்று தெரிய வில்லை. உருப்படமாட்டான் என்று பாட்டி பதிவு செய்தவர்தான் உலகின் புகழ்பெற்ற உருப்படி யானார்.இரண்டு நாடுகளுக்குத் தேசிய கீதம் தந்த ஒரே கவிஞர் என்ற தனிப் புகழ் அவருக்கு மட்டுமே உண்டு. எனவே பிறரது அங்கீகாரங்கள் பெரிய விஷயமல்ல...உங்களைப் பற்றிய உங்களது அபிப்பிராயங்களே முக்கியம். புரிந்துகொண்டால் வெற்றிநிச்சயம். – நன்றி சுகி சிவம்

அவசரத்தில்

நான்கு பேர் மட்டுமே பயணிக்கக் கூடிய ஒரு சிறு விமானம். அதில் ஆசிரியர், மாணவன், அரசியல்வாதி இவர்களோடு ஒரு விமான ஓட்டி என நான்கு பேர் இருக்கிறார்கள். நடுவானில் பறந்து கொண்டிருக்கும்போது திடீரென விமானம் பழுதடைந்து விடுகிறது. விமானி எவ்வளவோ முயற்சித்துப் பார்க்கிறார்,அவரால் விமானத்தைச் சரி செய்யமுடியவில்லை.

வேறுவழியில்லாமல் ,...இந்த விமானத்தில் மூன்று பாராசூட்டுகள் இருக்கின்றன.நான் ஒன்றை எடுத்துக் கொள்கிறேன்.மீதி இருக்கும் இரண்டை யார் எடுத்துக்கொள்வது என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்....என்று கூறிவிட்டு ஒரு பாரசூட்டை எடுத்து மாட்டிக்கொண்டு கீழே குதித்துவிடுகிறார் விமானி.

விமானிசொல்வதைக்கேட்ட அரசியல்வாதி...நான்ஒருஎம்.எல்.ஏ.நாளைக்கேநான்ஒரு அமைச்சராகலாம். அதனால் என் உயிர் உங்களைவிட உயர்வானது....என்று சொல்லி விட்டு அவசர அவசரமாக அங்கே கிடந்த இன்னொரு பாரசூட்டை எடுத்து மாட்டிக்கொண்டு அவரும் விமானத்திலிருந்து கீழே குதித்துவிட்டார்.

அடுத்து , ஆசிரியர் தன் மாணவனைப் பார்த்துச் சொன்னார் ..நான் வாழ்க்கையை முழுமையாக வாழந்து விட்டவன்.ஆனால் நீ சாதிக்க வேண்டியது இன்னும் அதிகம் உள்ளது. அதனால் நீ அந்த பாரசூட்டை மாட்டிக்கொண்டு குதித்துவிடு....மாணவன் பதற்றப் படாமல் இப்படிச்சொன்னான்...கவலைப்படாதீங்க சார்...இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை.கைவசம் இரண்டு பாரசூட்டுகள் இருக்கின்றன.... ஆசிரியர் ஆச்சரியப்பட்டு ,..எப்படி ?...என்று கேட்க,மாணவன் சொன்னான்....அரசியல்வாதி அவசரத்தில் பாரசூட் என்று தவறுதலாக என் ஸ்கூல் பேக்கை மாட்டிக்கொண்டு குதித்துவிட்டார்....

அந்த அரசியல் வாதியைப்போலத்தான் நாம் பல சமயங்களில் செயல்படுகின்றோம்.

உறுதியாக நம்புங்கள்

நாம் அதிர்ஷ்டம் மிக்கவர்கள்தான் என உறுதியாக நம்புங்கள்.குறையற்ற மனிதர்கள் என்று இந்த உலகில் எவருமே இல்லை.நம்மைப்பற்றி நமக்கே நன்மதிப்பீடுகள். இல்லாவிட்டால் அதை மற்றவர்களிடம் எப்படி எதிர்பார்க்கமுடியும் ?பிரபலங்களின் வெற்றியை உங்கள் வெற்றிக்கான தூண்டுதலாக எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களைவிட முனைப்புடனும்,ஈடுபாட்டுடனும் உழைக்க வேண்டும் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.உலகம் மிகப்பெரியது.யார் வேண்டுமானாலும் ஜெயிக்க இங்கு இடமுண்டு.முனைப்புடன் உழைக்க ஆரம்பித்துவிட்டால் நாமும் புகழ்மிக்க பிரபலம்தான்.

புதிருக்கு உங்கள் பதில் : 1) சாப்பிட்டது தாத்தா,அப்பா மற்றும் பையன்தானே! 2) 1904 ல் (அடுத்து வந்த ஆண்டு 1900 லீப் ஆண்டு இல்லை) 3) சவப்பெட்டி தயாரிக்கிறார். 4) தந்தி 5) தீக்குச்சி 6) தண்ணீர் 7) கொக்கு

கார்காத்தார் வேளாளர் சங்கம்

சிதம்பரம் பகுதி

19-வது மங்கல சந்திப்பு
17.12.2023

அன்புடையீர்! வணக்கம்.

சிதம்பரம் பகுதி கார்காத்தார் வேளாளர் சங்கத்தின் சார்பாக **19**-வது மங்கல சந்திப்பு வருகின்ற **17.12.2023** (மார்கழி-**1**) ஞாயிற்றுக்கிழமை காலை மணி **9.00 - 12.30** மணி வரை சிதம்பரம், **S.P.** கோயில் தெரு, **G.M. வாண்டையார் திருமண மண்டபத்தில்** நடைபெற உள்ளது.

பதிவு ஒன்றுக்கு ரூபாய் **500/-.** இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தில் **கேட்டுள்ள தகவல்களை மட்டும்** தெளிவான கையெழுத்துடன் **தமிழில்** பூர்த்தி செய்ய வேண்டுகிறோம்.

மணமகன், மணமகள் பதிவு இல்லாமல் தனிப்பிரதி (பட்டியல்- **Book**) வேண்டுவோரும் ரூபாய் **500/-** செலுத்தி முன்பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

தபாலில் பெற விரும்புவோர்க்கு ரூபாய் **550/-.**

வெளியூர் அன்பர்கள் **D. புகழேந்தி** என்ற பெயருக்கு "DD" அல்லது அவரது **G-Pay No. 97864 11357** அனுப்பி வைக்கவும். பதிவு செய்ய விரும்பும் அனைவரும் **10.12.2023** -க்குள் பதிவு செய்து ஒத்துழைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

N.முருகன் பிள்ளை
98421 97489

பதிவு பொறுப்பாளர்கள்

R. ராஜாராமன் Cell : 81240 82758 / 98400 24975
D. புகழேந்தி Cell : 97864 11357 (G-Pay No.)

78, வடக்குவீதி, (ராயல் ப்ளாசா எதிரில்)
சிதம்பரம் - 608 001.

பதிவு நேரம் : காலை **10 a.m. - 1 p.m,** மாலை **4 p.m - 8 p.m**

விண்ணப்ப படிவம்

பெயர் ..... ஆண்/பெண்
பிறந்த தேதி .....
உயரம் (செ.மீ) .....
நட்சத்திரம் .....
கோத்திரம் .....
நிறம் .....
கல்வி தகுதி .....
.....
பணி விபரம் & .....
ஊதியம் .....
.....
.....
.....

தந்தை பெயர் .....
பூர்வீகம் .....
பணி விபரம் .....

தாயார் பெயர் .....
பூர்வீகம் .....
பணி விபரம் .....

உடன் பிறந்தோர் ஆண் ..... பெண் .....

விருப்பம் மற்றும் .....
இதர தகவல்கள் .....
.....

தொடர்பு முகவரி .....
.....
.....
✆ ..... ✉ .....
email

நட்சத்திரங்களும் மரங்களும்

அக்ரி. கு. சேதுசுப்ரமணியன், சிதம்பரம்.

அலைபேசி : 9443665642

19. மூலம்

சோதிடத்தின் இராசிச் சக்கரத்தில், 27 நட்சத்திரக்கோணப் பிரிவில், 19–வது நட்சத்திரமாக வருவது மூலம் நட்சத்திரம். தனுசு இராசியில், 240–00°–க்கும் – 253–20°–க்கும் இடையில் இந்த நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும் அமைந்துள்ளன. இது ஒரு முழுமையான நட்சத்திரமாகும். இதன் அடையாளக் குறியீடு "வேர்களின் கட்டு" ஆகும். மூலநட்சத்திரம் வாயு புத்திரமான ஸ்ரீ ஆஞ்சநேயரின் அவதார நட்சத்திரமாகும். "ஆண் மூலம் அரசாளும், பெண் மூலம் நிர்மூலம்" என்றெல்லாம் வழக்கு மொழியாய் இருப்பதற்கெல்லாம் எவ்வித ஆதாரமும் இல்லை. மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எல்லாம் நல்ல வாழ்க்கையை வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

மூல நட்சத்திரத்தின் கிரகாதிபதி கேது பகவானாகும். இதன் குணம் இராட்சதம், அதிதேவதை நிருதி, மிருகம் ஆண் நாய், பறவை செம்போத்து, விருட்சம் மாமரம் என்பவையாகும். எனவே, மூல நட்சத்திரக்காரர்களுக்கு மாமரம் பரிகார விருட்சமாக அமைகிறது. மாமரம், திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம்) திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாள்புரம்), திருநரிகைக்காரோணம் (நாகப்பட்டினம்), திருமாந்துறை, திருமயிலாடுதுறை, திருப்பாதாளீச்சரம் (பாமணி) திருவுச்சாத்தானம் (கோவிலூர்) ஆகிய தலங்களின் விருட்சமாக வணங்கப்படுகிறது. மேற்கண்ட திருத்தலங்கள் மூல நட்சத்திரக்காரர்களுக்குப் பரிகாரத் தலங்களாக விளங்குகின்றன.

மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், கர்வமுடன் இருப்பார்கள். ஆனால் நல்ல ஞானம் அடையப் பெற்றவர்கள். தெய்வபக்தி கொண்டவர்கள். பெரியவர்களுக்கு மரியாதை அளிப்பவர்கள். நீதி, நேர்மைக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். கல்வி அறிவு மிகுந்திருக்கும். இளம் வயதிலேயே சுக்கிர திசை வந்து விடுவதால் கலைத்துறையில் பிரகாசிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். ஆனால் சுக்கிரன் நல்ல அமைப்புடன் இருக்க வேண்டும். சில சமயம், முன் கோபம் கொண்டவர்களாகவும், நித்திரைப் பிரியர்களாகவும் இருப்பார்கள்.

தல வரலாறு : ஒரு சமயம், கயிலாயத்தில் உமையம்மை விளையாட்டாக சிவபெருமானின் இருகண்களையும் பொத்திய போது, பிரபஞ்சம் முழுவதும் இருண்டுவிட்டது. இதனால் அனைத்து உயிர்களும் துன்பம் அடைந்தன. இறைவனும், உயிர்களுக்கு நேர்ந்தமைக்குப் பிராயச்சித்தமாக அன்னை பூவுலகம் சென்று தவம் மேற்கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டார். பூவுலகம் வந்த அன்னையும், காத்யாயன முனிவரின் ஆசிரமத்தில் வளர்ந்து, பருவமடைந்ததும், காஞ்சிபுரத்தை அடைந்து, நான்கு கிளைகள் கொண்ட மாமரத்தடியில் மணலால் லிங்கம் தாபித்து முறைப்படி பூசித்து வந்தார். அன்னையைச் சோதிக்க விரும்பிய சிவபெருமான் ஆற்றில் வெள்ளத்தைப் பெருக்கெடுக்க வைத்தார். மணலால் அமைந்த சிவலிங்கம் கரைந்து விடுமோ என அஞ்சி, அதனைக் காத்திட அன்னையும் தன் இருகரங்களால் அணைத்து தன் மார்புடன் தழுவிக் கொண்டார். அதனால் மனம் மகிழ்ந்த சிவபெருமானும் தழுவக்குழைந்த நாதராக எழுந்தருளி அன்னையின் கரம் பற்றி மணக்கோலத்தில் அருள்புரிந்தார்.

காஞ்சிபுரம் திருத்தலத்தில் இன்றும் இம்மாமரத்தைக் தரிசிக்கலாம். இதற்கு மாவடி என்று பெயர். இவ்விடம் மிகச்சிறந்த பிரார்த்தனைக்குரிய இடமாகும். திருமணப்பேறு, புத்திரப்பேறு அளிக்கும் தலமாக உள்ளது. வேதமே மாமரம். வேதத்தின் நான்கு வகைகளே இம் மரத்தின் நான்கு கிளைகள். இயல்பாகவே பழுத்துக் கீழே விழும் கனிகள், நான்கு வித சுவை கொண்டதாகச் சொல்கின்றனர்.

மாமரத்தின் இலைகள் மங்கல நிகழ்ச்சிகளில் தோரணங்கள் கட்டவும், ஹோமங்கள், பூசைகள் நடத்தும் போது கும்பங்களில் வைக்கவும் பயன்படுகின்றன. இலைகளில் "புரோஹிபிடின்ஸ்" என்ற கிருமி நாசினிப் பொருள் இருப்பதால் சுற்றுப் புறத்தை தூய்மையாக்குகின்றன. இதன் அடிப்படையில் நம் முன்னோர்கள் தம் மெய்ஞ்ஞானத்தால் மங்கல நிகழ்வுகளில் இடம் பெறச் செய்தனர் போலும்!

மாமரப் பலகைகள் வீட்டு உபயோகப் பொருள்கள் செய்வதற்குப் பயன்படுகின்றன.

மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மாமரத்தினை வாய்ப்புள்ள இடங்களில் நட்டும், நீர் ஊற்றிப் பராமரித்தும் வணங்கிவருதலும் நல்ல பரிகாரமாகும். மேலும் முன்னர் சொல்லப்பட்ட தலங்கள் சென்று முறையாக வழிபாடு செய்தலும் நற்பலன்களை நல்கும்.

வைணவர்களுக்கு சௌந்தரராஜப் பெருமானாக எழுந்தருளியிருக்கும் நாகப்பட்டினம் சிறந்த பரிகாரத் தலமாகும்.

(பயணிப்போம்)

போரூர் கார்காத்தார் சங்கம் பகுதியில் உள்ள கார்குல மருத்துவர்கள் பட்டியல்

Sl No	Name, Address and Phone Number	Specialization
1	டாக்டர். சி. சந்திரசேகர், MBBS, DTCD, MD (Chest Diseases) ஏ.சி.எஸ். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, டாக்டர்.எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் வேலப்பன் சாவடி, சென்ன, Ph : 9941198101	Prof. HOD (TB, Bronchoscope, Thoracoscopy - Pulmonologist)
2	டாக்டர். பி. தர்மராஜன் MBBS, MD (Gen.Med.), Dip.Diab., S.B. டயாபடீஸ் ஸ்கின் கேர் சென்டர், No 31, வன்னியர் தெரு, போரூர், சென்னை. Ph : 9884139696	Diabetologist, General Physician
3	டாக்டர் ஷோபா தர்மராஜன், MBBS, Diploma in Dermatology, S.B டயாபடீஸ் ஸ்கின் கேர் சென்டர், No 31, வன்னியர் தெரு, போரூர், சென்னை. Ph :9962529696	Dermatologist, Cosmetologist
4	டாக்டர். வருண் குணசேகர், MBBS, Diploma in Child Health (DCH), DNB - Pediatrics, துளிர் கிட்ஸ் கிளினிக், No. 94, ராமச்சந்திர தெரு, சந்தோஷ் நகர், மதனந்தபுரம், போரூர், சென்னை. Ph : 9361834246	Pediatrician
5	டாக்டர். ப்ரீத்தி சுபலட்சுமி MBBS, DNB, துளிர் கிட்ஸ் கிளினிக், No. 94, ராமச்சந்திர தெரு, சந்தோஷ் நகர், மதனந்தபுரம், போரூர், சென்னை. Ph :7598450784	Surgery, General Physician
6	டாக்டர். பாக்கியராஜ் MD (ANES) FNB(CARDIAC ANES), சாய் நர்சிங் ஹோம், ஸ்ரீ காமாட்சி அம்மன் நகர், லாண்ட்மார்க்: கங்கை அம்மன் கோயில் பஸ் ஸ்டாப் அருகில், மாங்காடு, சென்னை. Ph :9894462248	Cardiac Anesthesiologist
7	டாக்டர் சுபஸ்ரீ. எஸ். ஆர், MBBS, MS - Obstetrics Gynaecology, DNB - Obstetrics Gynecology, சாய் நர்சிங் ஹோம், ஸ்ரீ காமாட்சி அம்மன் நகர், லாண்ட்மார்க்: கங்கை அம்மன் கோயில் பஸ் ஸ்டாப் அருகில், மாங்காடு, சென்னை. Ph : 9840016650	Gynecologist, Obsterician, Infertility Specialist, Laproscopic Surgeon (Obs Gyn)
8	டாக்டர் வி. சந்தோஷ் MD, DNB, DM Cardiac Anesthesia, MGM ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட், நெல்சன் மாணிக்கம் ரோடு, அமைந்தகரை சென்னை – 29. Ph : 9894462248	Consultant-Cardio Thoracic Vascular Anesthesiologist
9	டாக்டர் பி.சினேகா சித்ரா MCh, FRCS, அப்போலோ ஸ்பெஷல்லட்டி ஹாஸ்பிட்டல், வானகரம், அயனம்பாக்கம், சென்னை–95. Ph : 9841693030	Consultant Neurosurgeon
10	டாக்டர். ஆர். ராஜசேகர் ஆனு, Ph : 9043602280	Anesthesia
11	டாக்டர். ஆர். சிவபிரகாஷ் BDS, நிர்வாக இயக்குனர் – Dr.Smilez Group of Dental Centre, Ph : 9840401520	Dental Surgeon
12	டாக்டர் வள்ளி சண்முகப்ரியா MBBS, பில்ரோத் மருத்துவமனை, Ph : 9840186341	Medical Superintendent
13	டாக்டர்.அரவிந்த் MDS, அரவிந்தின் பல் மருத்துவமனை, 31, இந்திரா நகர் 1வது தெரு, ஓம் சக்தி நகர், வானகரம், சென்னை – 600095. (போரூர் டோல்கேட் அருகில்) Ph : 9790801260	Oral Pathologist Dental Surgeon
14	டாக்டர். கே. சுரேஷ் குமார் BDS, KSR பல் மருத்துவமனை, எண் 3, பனகல் தெரு, திருவள்ளூர் – 602001 (தேரடி அருகில்) Ph : 9443011584	Dental specialist
15	டாக்டர். எஸ். விஜயா B.P.T.,M. I. A. P. விஜயா பிசியோதெரபி கிளினிக், பழைய எண்.53, புதிய எண்.125, மேடவாக்கம் டேங்க் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை Ph : 9445331014	Consultant Physiotherapist.

16	டாக்டர். கார்த்திகா ராஜம் MS, Ph : **9282115703**	General Surgeon
17	டாக்டர். எஸ்.அபிராமி MBBS, FEM, சைரஸ் மருத்துவ மையம், அரும்பாக்கம், சென்னை Ph : **9790941365**	General Physician
18	டாக்டர். பி.அபிநயா MBBS, Ph : **9445563663**	General Physician
19	டாக்டர். எம்.ரேணுகா தேவி ஆனு, Ph : **9486356361**	Paediatrician
20	டாக்டர். எஸ்.கோகுல் MBBS, Ph : **9940013303**	General Physician
21	டாக்டர். ஆர்.விமலாதித்தம் MBBS, Ph : **9790885702**	General Physician
22	டாக்டர். டி.சத்யா MD, Ph : **9842463052**	General Physician
23	டாக்டர். எஸ்.பவதாரணி MBBS MS, Ph : **9444220893**	General Surgeon
24	டாக்டர். எஸ்.பிரியதர்ஷினி, Ph : **9444220893**	General Physician
25	டாக்டர். ஜே.அபர்ணா MDS, Sr.Lecturer, ஸ்ரீ பாலாஜி பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, 18 F5 சுனில் பிளாட்ஸ் 3வது தெரு, ரேஸ் வியூ காலனி, கிண்டி சென்னை – 32. Ph : **9840193475**	Oral medicine and Radiology specialist
26	டாக்டர். விக்ரம் MBBS, MD (Pediatrics), சன் ஷைன் ஸ்பெஷாலிட்டி கிளினிக், எண்.80, நரசிம்மன் தெரு, குருசாமி நகர், மதானந்தபுரம், சென்னை 600125. Ph : **7010378023**	Consultant Paediatrics
27	டாக்டர் பூர்ணிமா MBBS, MS (OG) DNB (OG), சன் ஷைன் ஸ்பெஷாலிட்டி கிளினிக், எண்.80, நரசிம்மன் தெரு, குருசாமி நகர், மதானந்தபுரம், சென்னை 600125. Ph : **7010378023**	Gynecologist, Obsterician

தகவல் : **A. ராமலிங்கம்,** தலைவர்
போளூர் கார்காத்தார் சங்கம்

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRA, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

CS TEXTILE PROCESS

Office : NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. TATA ZUDIO (INDIA)

"QUALITY IS OUR LIFE"

உ

திருச்சிற்றம்பலம்

மலைநாட்டு 13 திவ்ய வைணவத் தலங்கள்

குருவாயூர் & கேரள சபரிமலை யாத்திரை - ரூ. 5400/-

நாள்: 12.02.2024 முதல் 16.02.2024 முடிய 5 நாட்கள்

தரிசிக்கும் தலங்கள்: (உணவு & தங்கும் இடம் உட்பட)

1. திருநாவாய் (65), 2. திருவித்துவக்கோடு (திருமிற்றக்கோடு) (66), 3. திருகட்காரை (67), 4. திருமுழிக்களம் (68), 5. திருவல்லவாழ் (திருவல்லா) (69), 6. திருக்கடித்தானம் (70), 7. திருச்செங்குன்றூர் (71), 8. திருப்புலியூர் (குட்டநாடு) (72), 9. திருவாறன்முளா (73), 10. திருவண்வண்டூர் (74), 11. திருவனந்தபுரம் (75), 12. திருவட்டாறு (76), 13. திருவெண்பரிசாரம் (77), 14. வர்க்கலா, 15. குலசேகரப்பட்டினம், 16. திருவஞ்சைக்களம், 17. கொடுங்கல்லூர், 18. கொச்சின், 19. காலடி, 20. சோட்டாணிக்கரை, 21. எரிமேலி, 22. ஆற்றுக்கால் பகவதி.

பஞ்சதுவாரகா & மூன்று ஜோதிர்லிங்க யாத்திரை

நாள் : 11.03.2024 முதல் 12 நாட்கள் - ரூ. 13,500/-

பஞ்சதுவாரகா (டாக்கூர் துவாரகா, மோட்ச துவாரகா, மூல துவாரகா, பேட் துவாரகா, கோமதி துவாரகா) & மூன்று ஜோதிர்லிங்கம் (சோமநாத், மகாகாளேஸ்வர், ஓங்காரேஸ்வர்), சபர்மதி ஆஸ்ரமம், போர்பந்தர், பாவ்நகர் (கடல் லிங்கம்), உஜ்ஜைனி காளி தரிசனம், நர்மதா நதி ஸ்நானம்

ஹரித்வார் கங்கா நதி & காசி யாத்திரை

நாள் : 15.04.2024 முதல் 27.04.2024 முடிய 13 நாட்கள் - ரூ. 14,400/-

தரிசிக்கும் தலங்கள்: மதுரா, கோகுலம், ஆக்ரா, அயோத்யா, டில்லி, ரிஷிகேசம், பிரயாகை, காசி, கயா

பூரி, கல்கத்தா, கொனார்க், புவனேஸ்வர், விஜயவாடா, பெனுகொண்டா, கன்னிகா பரமேஸ்வரி கோவில் யாத்திரை

நாள் : 26.02.2024 முதல் 6 நாட்கள் - ரூ. 7,200/-

தொடர்பு முகவரி:

ஜோஸ்வர் **சிவ. ஆர்.எஸ். நாதன்,** B.Sc.,

14/36, புதுத்தெரு, சிதம்பரம் – 608 001.

Cell : 94436 79282, 94436 65926

மணமகள் தேவை

பெயர்	செல்வன் **S. கௌசிக்**
படிப்பு	B.Tech (Civil), MBA.,
வேலை	Project Engineer, DOHA, Qatar
பிறந்த தேதி	21.05.1995
நட்சத்திரம்	அவிட்டம்
கோத்திரம்	நன்னுட
பூர்வீகம்	மழவராயநல்லூர் (சிதம்பரம்)
தகப்பனார்	**V. சங்கர்,** Chief Pharmacist RMMC Hospital அண்ணாமலை நகர்
தாயார்	**S. வித்யா** (பாலாகுடி)
முகவரி	53, தேவதாஸ் நகர், விபீஷ்ணபுரம், சிதம்பரம் – 608 001. Cell : +91 94862 23517, 70100 41488
விருப்பம்	அரபு நாடான கத்தாரில் பணிபுரிய விரும்பும், சமபடிப்புடன் கூடிய மணமகள்

பெயர்	செல்வன் **பா. ஆதித்யன்**
படிப்பு	B.E. (ECE)
வேலை	ராம்கோ சிஸ்டம், சென்னை (14 லட்சம் ஆண்டு வருமானம்)
பிறந்த தேதி	17.08.1992
உயரம்	5' - 11"
நட்சத்திரம்	உத்திரட்டாதி 4ம் பாதம்
கோத்திரம்	பஞ்சதரிய
பூர்வீகம்	கௌத்தூர்
தகப்பனார்	**அ. பாலசுப்ரமணியன்**
தாயார்	**பா. வான்மதி** (ஆர்ப்பாக்கம்)
முகவரி	23A, கரையான்தோப்பு, ராஜா தெரு, மயிலாடுதுறை – 609 001. Cell : +91 94873 32726, 94454 53251
விருப்பம்	சமபடிப்பு வேலையில் உள்ள வரன்.

மணமகள் தேவை

பெயர்	செல்வன் இரா. பிரவின்
படிப்பு	B.Com., CMA (India) CMA (U.S.A.)
வேலை	Finance Manager - TVS Credit Services Ltd., Chennai Rs. 13 Lakhs / PA
பிறந்த தேதி	16.10.1994
உயரம்	6' - 2"
நட்சத்திரம்	பூரட்டாதி (முதல்) பாதம்
கோத்திரம்	பொன்னாமுட
பூர்வீகம்	கும்பகோணம்
தகப்பனார்	G. இராஜகோபாலன், (Southern Railway Retd.)
தாயார்	R. ஆர்த்தி
முகவரி	Flat No. A3, R.C. Residency, Cholambedu Road, Thiruvengadam Nagar, Ambattur, Chennai - 600 053. Cell : +91 73388 84682

பெயர்	செல்வன் S. நிரஞ்சன்
படிப்பு	B.E. (Mechanical)
வேலை	Deputy Manager, Plant Incharge, Premier Carbonic Pvt. Ltd., Inside E.I.D. Parry, Nellikuppam, Cuddalore Rs. 37,500/PM
பிறந்த தேதி	05.11.1994
உயரம்	190 cm
நட்சத்திரம்	அனுஷம்
கோத்திரம்	காமகுட
பூர்வீகம்	திருவந்திபுரம், கடலூர்
தகப்பனார்	ம. சிவராமகிருஷ்ணன், B.Sc., கண்காணிப்பாளர் (ஓய்வு) வேளாண்மை துறை, விழுப்புரம்
தாயார்	S. சந்திரா, B.Sc., (பாபநாசம்)
முகவரி	1/5, பிள்ளையார் கோவில் தெரு, திருவந்திபுரம் – 607 401. Cell : Whatsapp : 97885 21529, 95516 87053

மணமகள் தேவை

பெயர் செல்வன் M. சாய் ஆனந்த்
படிப்பு M.S. (Computer Science)
வேலை Software Engineer
Oracle USA
பிறந்த தேதி 06.01.1996
உயரம் 178 cm
நட்சத்திரம் புனர்பூசம்
கோத்திரம் விச்சுட
பூர்வீகம் தென்பாதி (காட்டுமன்னார்குடி)
தகப்பனார் ப. மோகன், BDO (Retd.)
தாயார் பா. இரமா (மயிலாடுதுறை)
ஆசிரியை, தனியார் பள்ளி
முகவரி எண். 13, பாடசாலைத் தெரு,
லஷ்மிபுரம், குரோம்பேட்டை,
சென்னை – 44.
Cell : 94440 59747 (W)
94446 23775 (6pm to 11pm)
E-mail : ramasai1966@gmail.com
விருப்பம் BE / MS (Computer Science)
சென்னை / அமெரிக்காவில்
பணிபுரியும் வரன்.

பெயர் செல்வன் R. கபிலன்
படிப்பு D.M.E.,
வேலை சொந்த தொழில் (மளிகை)
Rs. 30,000/PM
பிறந்த தேதி 16.04.1996
உயரம் 5' - 9"
நட்சத்திரம் உத்திரட்டாதி
கோத்திரம் மாருட
பூர்வீகம் முருகமங்கலம்
தகப்பனார் M. ரெத்தினகுமார் பிள்ளை
தாயார் வள்ளி (கன்னியாகுடி)
முகவரி முருகமங்கலம்,
திருமங்கலம் (PO),
மயிலாடுதுறை – 609 811.
Cell : 96888 86835, 93426 28710,
94864 93704, 93636 78956
விருப்பம் படித்த பெண் மட்டும்

பெயர் செல்வன் MANOJKUMAR .K
படிப்பு B.E (MECH)
வேலை 2 Years Worked at CREW Pvt Ltd Chennai
Now Running Own Business (Mobile Shop)
Expecting NLC Job (For Land)
ANNUAL INCOME : 600000 P.A
பிறந்த தேதி 25.05.1992
உயரம் 5' - 7"
நட்சத்திரம் Sathayam
கோத்திரம் Gunavaluda
பூர்வீகம் VALAYAMADEVI
தகப்பனார் Kalyanasundaram S, (Business)
தாயார் Meenakumari K, Home Maker
முகவரி 1E, Anna Salai,
Valayamadevi Melpathy,
Cuddalore (Dt)
Cell : 9842778383

பெயர் செல்வன் U. ஆதித்யா
படிப்பு B.Tech
வேலை Sr. Engineer
(QHSE) in MNC Chennai
பிறந்த தேதி 28.02.1994
உயரம் 184 cm
நட்சத்திரம் அஸ்தம்
கோத்திரம் காருடையான்
பூர்வீகம் தலைச்சங்காடு
(மயிலாடுதுறை)
தகப்பனார் P. உமாபதி
தாயார் U. ரேணுகா
முகவரி F-4, மந்தராலயா, சுபம் பிளாட்ஸ்,
No. 21/52, அண்ணா தெரு,
A.K.A. நகர், புதூர்,
அம்பத்தூர்,
சென்னை – 600 053.
Cell : 97910 07467

மணமகள்/மணமகன் தேவை

பெயர் செல்வன் டாக்டர் **எம். சத்தியசீலன்**
படிப்பு M.B.B.S., D.P.H.,
வேலை அரசு கி.ஆ.பெ.வி. மருத்துவ கல்லூரி, திருச்சி
ரூ. 1,06,000/மாதம்

பிறந்த தேதி 14.05.1984
உயரம் 171 cm
நட்சத்திரம் சுவாதி
கோத்திரம் வேளா
பூர்வீகம் சத்யவாடி
தகப்பனார் டாக்டர் **எஸ். முத்துகிருஷ்ணன்,** பி.எச்.டி., ஓய்வு பெற்ற பிரின்சிபல், வடலூர் டயட் (DIET)
தாயார் **எம். பார்வதி** (இல்லத்தரசி)
முகவரி 27/2, அய்யனார் கோவில் தெரு, விருத்தாசலம் – 606 001. கடலூர் மாவட்டம்.
Cell : 90033 76297, 87782 78936
E-mail : dr.m.sathyaseelan@gmail.com
விருப்பம் எதிர்பார்ப்புகள் கிடையாது, அமைதியான குணமுள்ள பெண்
குறிப்பு சட்டப்படி விவாகரத்து பெற்றவர்.

பெயர் செல்வன் **B. பிரதீப்**
படிப்பு B.E. (E.C.E.)
வேலை Infosys (Technology Lead)
Rs. 15 Lakhs/PA

பிறந்த தேதி 21.07.1995
உயரம் 6' - 2"
நட்சத்திரம் பரணி
கோத்திரம் வில்வராய
பூர்வீகம் தருமகுளம் (பூம்புகார்)
தகப்பனார் **S. பாலசுப்ரமணியன்**
தாயார் **B. விஜயலெட்சுமி**
முகவரி No. 3, Venkateswara Nagar, Thenpathy, Sirkali - 609 111.
Cell : 70109 73770, 94880 04523
விருப்பம் சமபடிப்பு, பணியிலுள்ள வரன்.

பெயர் செல்வி **S. அபிநயா**
படிப்பு M.Sc., B.Ed.,
பிறந்த தேதி 29.06.1999

உயரம் 5' - 2"
நட்சத்திரம் பூராடம் 2–பாதம்
கோத்திரம் காளிங்கராய
பூர்வீகம் ஜெயங்கொண்டம்
தகப்பனார் **V. சாமிநாதன்** முதன்மை தலைமை வரைவாளர் (ஓய்வு TNEB)
தாயார் **S. உமாமகேஸ்வரி** (சிதம்பரம்)
முகவரி பாலாஜி இல்லம், பிளாட் எண். 144, ஸ்ரீசத்யம் நகர், 3வது வீதி, தாளக்குடி – 621 216. திருச்சி மாவட்டம்
Cell : 98652 20366, 98426 23297, 98423 51949
விருப்பம் அரசு பணி (அ) தனியார் துறை, வங்கி பணி

பெயர் செல்வி **R. அட்சயா**
படிப்பு B.E., E.C.E.
வேலை CREW - Chennai
பிறந்த தேதி 04.06.1999

உயரம் 162 cm
நட்சத்திரம் திருவோணம்
கோத்திரம் சாத்தனுட
பூர்வீகம் பெருந்தோட்டம்
தகப்பனார் **M. ராஜசேகரன்** (Teacher)
தாயார் **V. சித்ரா** (Teacher)
முகவரி 217-A, G.V.M. நகர், டவுன் ஸ்டேஷன் தெற்கு, மயிலாடுதுறை – 609 001.
Cell : 88258 80186, 94427 24479
விருப்பம் படித்து, பணியிலுள்ள வரன்.

மணமகன் / மணமகள் தேவை

பெயர் செல்வன் **G. அருணாச்சலம்**
படிப்பு 10ம் வகுப்பு
வேலை Two Wheeler Mechanic, Own Two Wheeler Workshop, Virudhachalam, Rs. 70,000/PM
பிறந்த தேதி 24.06.1997
உயரம் 165 cm
நட்சத்திரம் திருவோணம்
கோத்திரம் நெப்புகுட
பூர்வீகம் காவனூர் (விருத்தாசலம் அருகில்)
தகப்பனார் **S. குருமூர்த்தி பிள்ளை**
தாயார் **கு. அன்னபூரணி**
(இளையபெருமாள் நல்லூர்)
முகவரி திரௌபதி அம்மன் கோயில் பின்புறம்,
வசந்தம் நகர்,
பூதாமூர், விருத்தாசலம்
Cell : 94427 71965, 81480 25834
விருப்பம் குடும்பபாங்கான பெண்.

பெயர் செல்வி **M. பத்மபூஷணி**
படிப்பு M.Sc., Cardiac Technology (ECHO)
பிறந்த தேதி 13.05.2000
உயரம் 156 cm
நட்சத்திரம் உத்திரம்
கோத்திரம் பொண்ணமுட
பூர்வீகம் காவனூர்
தகப்பனார் **M. முத்துகுமாரசாமி**
Camp - Djibouti (Africa)
தாயார் **M. கவிதா** (மயிலாடுதுறை)
முகவரி தெற்கு தெரு,
காவனூர்
Cell : 94869 11578, 94423 88676

பெயர் செல்வன் **M. விஸ்வக்**
படிப்பு DME., BBA.,
வேலை Senior Relationship Officer, Muthoot Fincorp Ltd., Chidambaram
Rs. 31,000/PM
பிறந்த தேதி 16.05.1991
உயரம் 173 cm
நட்சத்திரம் மிருகசீரிஷம்
கோத்திரம் இரவுட
பூர்வீகம் துணிசிரமேடு, சிதம்பரம்
தகப்பனார் **வை. முருகானந்தம் பிள்ளை** (விவசாயம்)
தாயார் **மு. மல்லிகா**
முகவரி 3/184, சிவன் கோவில் தெரு,
துணிசிரமேடு, சி. வீரசோழகன்,
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் – 608 602.
Cell : 97156 38810, 97156 38811
விருப்பம் நல்ல குணமுள்ள, படித்த குடும்பபாங்கான பெண்.

அண்ணாநகர் கார்காத்த வேளாளர் சங்கம் 16ம் ஆண்டு விழா - 02.10.2023

அண்ணாநகர் கார்காத்த வேளாளர் சங்கம் 16ம் ஆண்டு விழா - 02.10.2023

மணமகன் தேவை

பெயர்	செல்வி B. நித்யா
படிப்பு	B.Tech (CS)
வேலை	Cleared TNPSC Group II Preliminary Exam
பிறந்த தேதி	09.07.1997
உயரம்	164 cm
நட்சத்திரம்	பூரம்
கோத்திரம்	தூதுக்குட
பூர்வீகம்	ஜெங்கொண்டம் – உத்திரக்குடி
தகப்பனார்	அக்ரி T. பாலசுப்ரமணியன் Deputy Director of Agriculture (Rtd.)
தாயார்	B. இராஜலட்சுமி, B.Sc., B.Ed.,
முகவரி	சாக்கோட்டை – கும்பகோணம் Cell : 99426 77646, 99426 77545
விருப்பம்	நல்ல பணியில் உள்ள வரன்

பெயர்	செல்வி S. பார்வதி சுந்தர கோமதி
படிப்பு	M.Sc., (Computer Science)
வேலை	Junior Executive - Tata Communication Ltd., Chennai
பிறந்த தேதி	19.05.1998
உயரம்	155 cm
நட்சத்திரம்	சதயம்
கோத்திரம்	தனவாருடை
பூர்வீகம்	திருநெல்வேலி
தகப்பனார்	G. ஷண்முக தெய்வநாயகம் Retd. E.O., நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி
தாயார்	S. சிவகாமி சுந்தரி
முகவரி	3, அருளகம், பேட்டை ரோடு, திருநெல்வேலி டவுன் – 627 006. Cell : 94871 75342 / 96295 34268

பெயர்	செல்வி B. ஓவியா
படிப்பு	B.E. (C.S.E.), M.S. , (Suny Buffalo, USA)
வேலை	Cloud Engineer, California, USA
பிறந்த தேதி	03.02.1998
உயரம்	160 cm
நட்சத்திரம்	பரணி முதல் பாகம்
கோத்திரம்	பாலுட
பூர்வீகம்	வெள்ளியக்குடி, கடலூர் மாவட்டம்
தகப்பனார்	M.N. பாலமுருகன், B.E., Director, IT MNC, Chennai
தாயார்	B. தாமரைச்செல்வி, B.Sc., (வெய்யலூர், கடலூர் மாவட்டம்)
முகவரி	AP 1239, 77வது தெரு, 12வது செக்டர், கே.கே. நகர், சென்னை – 600 078. Cell : +91 99401 16291, 98407 77045 E-mail : mnbtso@gmail.com
விருப்பம்	அமெரிக்காவில் பணிபுரியும் வரன்

மணமகன் தேவை

பெயர்	செல்வன் **G. மாளவிகாதேவி**
படிப்பு	B.Tech., M.B.A.,
வேலை	HTC Global Services, Chennai Rs. 10,50,000/PA
பிறந்த தேதி	18.07.1998
உயரம்	170 cm
நட்சத்திரம்	கார்த்திகை – முதல் பாதம்
கோத்திரம்	வளதரிய
பூர்வீகம்	K.ஆடூர்
தகப்பனார்	**T. ஞானசேகரன்,** M.Com., Manager, Aavin (Rtd.)
தாயார்	**P. கலா,** M.A., B.Ed., (காத்திருப்பு, சீர்காழி தாலுகா) தலைமை ஆசிரியர், அரசு பள்ளி
முகவரி	12A, சாத்தபாடி தெரு, சிதம்பரம் – **608 001.** கடலூர் மாவட்டம் Cell : 87541 11041, 99940 76132
விருப்பம்	சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்

"கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

ஆண்டு சந்தா	ரூ.	300/-
ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்)	ரூ.	2000/-
கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	1500/-
கலர் (½) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	3000/-
கலர் முழு பக்கம்	ரூ.	6000/-
பின் அட்டை வெளியுறம்	ரூ.	7000/-
மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	ரூ.	500/-
கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம்	ரூ.	750/-
கருப்பு வெள்ளை (½) அரைப் பக்கம்	ரூ.	1500/-
கருப்பு வெள்ளை முழுப் பக்கம்	ரூ.	3000/-

ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன், ஸ்ரீ வீரனார், பேரருளாலும்
ஸ்ரீ மயூரநாதஸ்வாமி சமேத அபயாம்பிகை துணையாலும்

வாழ்க மணமக்கள்

மயிலாடுதுறை மாவட்டம், பாலாக்குடி வெள்ளாழத் தெரு, தெய்வத்திருவாளர்கள் குழுமுட R. ரெங்கநாதன் பிள்ளை, Rtd. (Teacher) – ஜெயலட்சுமி அம்மா இவர்களின் குமாரர் திரு. R. ரவிச்சந்திரன், M.Com., – ஜெயசித்ரா, B.Sc., B.Ed., தம்பதிகளின் செல்வமகள் **Dr. ஷிவானி,** M.B.B.S. க்கும், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி (TK) காருட தெய்வத்திரு. ஷண்முகம் பிள்ளை – திருமதி சூரியகாந்தி இவர்களின் குமாரர் திரு S. மதிக்குமார் – திருமதி Dr C. வள்ளி தம்பதிகளின் செல்வமகன் **Dr. M. சந்தோஷ்குமார்,** M.D., க்கும் 10–9–2023 ஞாயிறு அன்று காலை மயிலாடுதுறை, சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்ற திருமணவிழாவுக்கு வருகை தந்து வாழ்த்திய இரு வீட்டார் உறவினர்கள், நண்பர்கள், கார்காத்தார் சங்க நிர்வாகிகள், கார்குல நண்பர்கள் உள்ளிட்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



R. ரவிச்சந்திரன், M.Com., - **ஜெயசித்ரா,** B.Sc., B.Ed.,
R. சைலேஷ், (Doha Qatar)
மற்றும் **குடும்பத்தினர்** பாலாக்குடி



திரு. **S. மதிக்குமார்**– திருமதி **Dr.C. வள்ளி,** கொள்ளிடம்
Er. சரவணக்குமார், M.E., - **Er. திவ்யா சரவணக்குமார்,** M.E.,
பேபி **ஆராத்யா,** நியூ டெல்லி மற்றும் **குடும்பத்தினர்**

10–9–2023 ஞாயிறு அன்று மயிலாடுதுறை, சிக்னேச்சர் திருமண மஹாலில் சிறப்புடன் நடைபெற்ற எங்கள் இல்ல திருமண விழாவிற்கு வருகை தந்து வாழ்த்திய உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது உளம்கனிந்த நன்றியும் வணக்கமும்.

R. பாலசுந்தரம் – சுமதி பாலசுந்தரம், பாலாக்குடி, **B ராஜசேகர்**. B.E . (Doha) – **B. ஐஸ்வர்யா,** B.E.(ECE)

R. குமார் – மலர்க்கொடி குமார், K. அனுக்ஷா, B.E., M.Tech., **K. வெங்கடேஷ்,** B.E., (DOHA)

R. உதயசங்கர், மயிலாடுதுறை மாவட்ட திமுக இலக்கிய அணி, துணைசெயலாளர், **93427 78372**
கவிதா உதயசங்கர், பாலாக்குடி, **U.S. யோகேஸ்வரன்,** B.E., (Doha-Qatar), **U.S. ஸ்ரீ ஜனனி**

R. சிவராமன், (Q.P), **சுதா சிவராமன், ஸ்ரீ ஹரிணி,** B.E.,(U.K.) **ஸ்ரீ லக்ஷ்மி,** (Doha-Qatar)

V. சங்கர், M.Sc., D.Pharm., - **வித்யா சங்கர்,** சிதம்பரம்,
S. கவுசிக் மணிகண்டன், B,E MBA..(Doha-Qatar), **S. விஷால் கவுதம்**

B. அறிவழகன், B.Sc., - **A. அரவிந்த்,** B.A., B.L., நல்லத்துக்குடி..

R. கனகசபை பிள்ளை, பாலாக்குடி, **V மனோகரன் பிள்ளை,** பாலாக்குடி

நன்றி !



மயிலாடுதுறை மாவட்டம், உளுத்துக்குப்பை, கீழவீடு, மாலுட,
தெய்வத்திருவாளர்கள். **R.வீரப்பப்பிள்ளை - தங்கபாப்பு,** கும்பகோணம் வட்டம்,
திருப்புறம்பியம், குடமுட, திரு. **G.பரமசிவம்பிள்ளை - தையல்நாயகி** இவர்களின் பேரனும்,
திருவிடைமருதூர் வட்டம், திருமாந்துறை, சாத்துகுட,
தெய்வத்திருவாளர்கள். **S.ராஜரத்தினம்பிள்ளை - சுசிலா,** மயிலாடுதுறை மாவட்டம்,
வல்லம், சாத்தனுட, தெய்வத்திரு. **G.வேம்புபிள்ளை** - நலமுடன். **சாவித்திரி** இவர்களின் பேத்தியும்,

R.K.கார்த்திகேயன், B.E., - S.ஸ்வாதி, B.Tech.,

இவர்களுக்கு **20.10.2023** அன்று திருவிடைமருதூர், **ஸ்ரீ சாரதா மஹாலில்** நடைபெற்ற திருமணத்திற்கும், **21.10.2023** அன்று **திருச்சி, ஹோட்டல் ஸ்ரீ சங்கீதாஸ், சிந்தூர் ஹாலில்** நடைபெற்ற வரவேற்பிற்கும் முன்னதாக வருகை தந்து ஒத்துழைப்பு நல்கி

மணமக்களை வாழ்த்திய உறவுகள், கார்குல சொந்தங்கள், நண்பர்கள், திருச்சி கார்காத்தார் சங்க நிர்வாகிகள், கார்குல உறவினர்கள்

அனைவருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்

இரா.சுந்தர்,
ஸ்ரீவீரா வாடகை பாத்திரக்கடை, கோவிந்தபுரம்
S.கவிதா, ஆசிரியை
உதவிபெறும் ஆரம்பப்பள்ளி, வானாபுரம்
S.ஷிவா,
(Scigenics india private Ltd., Chennai)
திருமாந்துறை.

V.ரவி, TNSTC Rtd
R.கவிதா
R.திருவரசன்,
(Brakes india private Ltd., Chennai)
14, காயத்ரி நகர், திருவானைக்கோவில்,
திருச்சி-620 005.

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/11 செல்வி **A. ஜெயலட்சுமி** திருவோணம் 4ம் பாதம் குழுமுட பூர்வீகம் : தாமரைப்பூண்டி குறிப்பு : இராகு, கேது தோஷம் உள்ள வரன்	01.01.1998 154 cm	M.Sc., (Physics) .		திரு. V. ஆறுமுகம், No. 1/189, தாமரைப்பூண்டி, மணக்குடையான் அஞ்சல், செந்துறை Tk., அரியலூர் DT., - 621 719 Cell : 94889 49380, 94428 68191 94887 85045
B 2/11 செல்வி **க. வைஷ்ணவி** சித்திரை – 2ம் பாதம் பூதாமுட பூர்வீகம் : பூதாமூர் விருப்பம் : நல்ல குணமுடைய பணியில் உள்ள ஆண் 1990ம் அதற்கு பிறகு பிறந்திருந்தால் நலம்	10.02.1996 5' - 0"	B.E. (ECE)	Syrma Technologies Pvt. Ltd., Chennai Rs. 1,26,000/PA	திரு. தி. கணேசன் (Late), 5/20, கிழக்குத் தெரு, பூதாமூர், விருத்தாசலம், கடலூர் Dt. – 606 001.. Cell : 81108 35403, 86753 64629
B 3/11 செல்வி **K. அர்ச்சனா** உத்திராடம் காலிங்கராய பூர்வீகம் : திருச்சி விருப்பம் : வேலை பார்க்கும் வரன்	26.4.2000 153 cm	B.Tech. (IT)	Jr. Software Engineer, LTI Mindtree, Chennai Rs. 4 Lakhs/PA	திரு. B கார்த்திகேயன், 10B, குமுதவல்லி இல்லம், வரதன் தெரு, ஞானமூர்த்தி நகர், அம்பத்தூர், சென்னை – 53. Cell : 98411 70011, 94980 63730
B 4/11 செல்வி **Dr. V. Priyadharshini** Uthradam 4th Patham Koodaluda பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram விருப்பம் : Middle / Upper Middle Class Carring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor.	Jan. 1995 5' - 2"	Internal Medicine M.D., .	Sr. Resident Doctor at a Private Medical College, Chennai Rs. 12-18 Lakhs/PA	திரு. J. Venugopalan, B-703, Solitaire Appartments, Mount Poonamallee High Road, Porur, Chennai - 600 116 Cell : 99404 77263, 98949 28283 E-mail : venugopalani@yahoo.com
B 5/11 செல்வி **R. பானுபிரியா** கேட்டை 3ம் பாதம் எரவுட பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்) விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன்.	21.11.98 165 cm	B.E. (ECE)	Sr. Software Engineer Fresh Works Technologies Chennai	திரு. T. Ramesh, D. No. 11, SNR Flats, Viswanathapuram Main Road, Kodambakkam, Chennai - 600 024. Cell : 94445 56972, 90801 87596
B 6/11 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : சென்னையில் வேலையில் உள்ள வரன்.	16.09.95 154 cm	B.E. (Computer Science) M.Sc., (Cyber Forensics and Information Security	Reputed Pvt. Company	திரு. N.Gowrishankar 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044–2363 8284
B 7/11 செல்வி **M. தனலட்சுமி** உத்திரம் பருவுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு	07.05.98 154 cm	B.Tech (CS) .	Software Professional EPSILON Bangalore Rs. 10 Lakhs/PA	திரு. K. மணிகண்டன், G1, Ashok Manor, Ruby Builders, 5/2, Kalamegam Street, East Tambaram, Chennai - 600 059. Cell : 94447 11045, 99416 20355

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 8/11 செல்வி **Sai Sruthi** Uthirattathi Iraiudai Vathirairuppu	30.05.97	B.E., M.B.A.,	Asst. Manager, Vedanta Group Fajirah Near Dubai	திரு. R. Jagatheesan, Maternal G Father, 199, Lake View Road, West Mambalam, Chennai - 600 033. Cell : 94449 68899
B 9/11 செல்வி **R. அனுக்கிருபா** மகம் மருங்குட பூர்வீகம் : ஆக்கூர் விருப்பம் : சமபடிப்பு நல்ல வேலையில் உள்ள வரன்	10.05.92 169 cm	B.Com., MBA.,	TCS, Chennai	திரு. A. ராஜாராமன், 7/4, கல்லூரி மேற்கு சாலை, அரும்பாக்கம், சென்னை–600 106. Cell : 97908 80266, 93809 97467 Phone : 044 – 2363 8205 E-mail : rajaramchennai2010@gmail.com

பதி, பசு, பாசங்கள் விளக்குவது யாது?

சித்தாந்த ரெத்தினம் தி. கபீர்தாஸ்,
சிதம்பரம். 9445473386

சைவ சிந்தாந்தம் கூறும் முப்பொருள் பதி, பசு, பாசம், பதி இறைவன், பசு உயிர், பாசம் உயிரிகளை கட்டியிருக்கும் கயிறு. இதில் பாசமானது ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகைகளில் அடங்கும். இதனை நாம் அறிந்ததே.

மாயையிலிருந்துதான் உலகமும் உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் தோன்றின. அவற்றை உயிர்களானது கண், காது போன்ற புறக்கருவிகளாலும் மனம், புத்தி போன்ற அகக்கருவிகளாலும் அறிந்து கொள்கிறது. பாசமாகிய கருவிகளைக் கொண்டு பாசமாகிய உலகப் பொருள்களை அறியும் அறிவு ''பாச அறிவு'' எனப்படும். இதனை ''பாச ஞானம்'' என்றும் கூறுவர்.

பாச அறிவினால் புறப் பொருளை அறியும் உயிரானது, தன் நிலையை அறியாது. தனக்கு வேறாகிய பொருள்களே தானாக எண்ணி மயங்கி உணரும். தன்னையே அறியாத உயிரானது பதியாகிய இறைவனை எவ்வாறு அறியும், முற்றிலும் அறியாது.

இப்படிப்பட்ட உயிரானது குருவின் உபதேசத்தாலும், ஐம்பொறி கருவிகளாலும் அறியப்படும் பொருள்கள் அனைத்தும் சடப்பொருள்களே, சித்துப் பொருள்கள் அல்ல என உணர்கிறது. இப்படியாக உயிரானது படிப்படியாக பக்குவம் பெறுகிறது. தான் சித்துப் பொருள் ஆதலையும் அறிந்து, தன்னை மாயா காரியத்திலிருந்து வேறு என்று உணர்ந்து நிற்கும். இப்போது இறைவனது திருவருள் உயிர்க்கு வியாபக உணர்வைக் கொடுக்கும். வியாபக அறிவினைப் பெற்ற உயிரானது திருவருளை உணராது கருவி கரணங்களுக்கு தானே அதிபதி என்பதாக மயங்கி நிற்கும். இந்த அறிவு ''பசு அறிவு'' எனப்படும். இதைப் ''பசுஞானம்'' என்றும் கூறுவர். இந்த ஞானத்தால் இறைவனை அடைய முடியாது. இறைவன் வாக்கு மனங்களை கடந்தவன். வாக்கு என்பது பாச ஞானத்தையும், மனம் என்பது பசு ஞானத்தையும் குறிக்கும்.

உயிர்கள் பக்குவம் பெற பெற புறக்கருவிகளும் அகக்கருவிகளும் தான் அல்ல என்று உயிர் தன்னை அறிகிறது. இந்த நிலையில் கருவிகள் இல்லாமல் தனக்கு ஓர் அறிவு எவ்வாறு உண்டாயிற்று என்று உயிரானது சிந்தித்தப்போது தன் அறிவுக்கு அறிவாய் நின்று தன் வியாபக நிலையைக் கொடுத்தது பதிப்பொருளின் அறிவுதான் என உணர்கிறது. அந்த அறிவு ''திருவருள்'' எனப்படும். அதனை ''பதிஞானம்'' என்றும் ''சிவஞானம்'' என்றும் கூறுவர்.

உயிரின் அறிவினால் புலப்பட்ட பதிஞானத்தை விடாது பற்றி நின்றால் திருவருள் உயிருக்கு பதியினை இனிது காட்டும். பதிஞானத்தால் பதியை அறிவதையே ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்கிறார் மணிவாசகர். அதனால் இறைவன் பசுஞான, பாச ஞானங்களால் அறியப்படவில்லை என்றாலும் பதிஞானத்தால் அறியப்படுவான் என்பதை தெளிவாகக் கூறுகிறது சைவசித்தாந்தம்.

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/11 செல்வன் **ம. அரவிந்த்** ரேவதி வாணாதிராய பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : நல்ல குணமுள்ள சமபடிப்புள்ள வரன்.	15.02.94 182 cm	B.E., (Aeronotical) M.E., MBA.(HR)	HR Instro Medical Devices and Solutions, Pune	திரு. மு. முகேஷ், 3, பட்டித் தெரு, பெண்ணாடம், திட்டக்குடி T.K., கடலூர் DT., Cell : **80127 85399, 82208 57114**
G 2/11 செல்வன் **B. காந்திமதி நாதன்** புனர்பூசம் 2ம் பாதம் காகுடை பூர்வீகம் : ராஜவல்லிபுரம் (திருநெல்வேலி) விருப்பம் : படித்த பணியில் உள்ள பணிக்கு செல்ல விருப்பம் உள்ள வரன்.	11.10.90 173 cm	B.E., (CSE)	TEAM Leader TCS, Chennai	திரு. B. காந்திமதி நாதன், 414, முதல் தெரு, T.N.H.B. காலனி, திருநெல்வேலி. Cell : **99445 34751, 95977 53715**
G 3/11 செல்வன் **S. பாலகுமரன்** உத்திராடம் காங்கேய பூர்வீகம் : தீவளூர் திட்டக்குடி வட்டம் விருப்பம் : சமபடிப்பு	02.07.96 170 cm	B.E. (CSE)	ஸ்ரீலட்சுமி நகை அடகு கடை & Car Finance விருத்தாசலம் Rs. 12,00,000/PA	திரு. கோ. செல்வமணி 3A, மறைமலைஅடிகள் தெரு, விருத்தாசலம் – **606 001.** Cell : **98426 52837,** **96299 12901** (W)
G 4/11 செல்வன் **V. அருண் சம்பத்** அனுஷம் –2ம் பாதம் பருவுட பூர்வீகம் : அருகேரி (பெண்ணாடம்) விருப்பம் : வேலையில் உள்ள வரன்	02.11.97 5' - 7"	B.Tech. IT	JRK HighTech Industries, Chennai	திரு. வரதராஜன், **2/623**, ஆலமரத்துக்காடு, காமராஜர் சிலை அருகில், எருமாபாளையம், சேலம் – **636 015** Cell : **94431 34352, 94422 13435**
G 5/11 செல்வன் **S. தினேஷ்** உத்திரட்டாதி காலிங்கராய பூர்வீகம் : திருச்சி விருப்பம் : வேலை பார்க்கும் வரன்.	24.10.96 190 cm	B.E	Software Engineer Rs. 11 Lakhs/PA	திரு. B சரவணன், 16, கலைவாணி நகர், கீழ்கட்டளை, சென்னை – **600 117.** Cell : **94449 58989, 94442 10062**
G 6/11 செல்வன் **V. ரவிவர்மா** அஸ்தம் 4ம் பாதம் குளத்துட பூர்வீகம் : தில்லைவிடங்கன், சீர்காழி தாலுக்கா விருப்பம் : பட்ட படிப்பு, பணியில் உள்ள வரன்.	23.10.95 170cm	B.E., (Mechanical)	No Broker-Relationship Manager, Rs. 5.5 Lakhs/PA	திரு. T. வரதராஜன், No. 897, TNHB Colony, Sithalapakkam Housing Board, Sithalapakkam, Chennai - 600 126. Cell : **84895 60855, 75500 63118**
G 7/11 செல்வன் **R. Karthikeyan** Karthigai Kothanuda பூர்வீகம் : Mullaiyur	28.08.94 5' - 10"	B.Tech., (Computer Science)	ZOHO Corporation Chennai Rs. 18 Lakhs /PA	திரு. T. ராமலிங்கம், 1/183, Perumal Koil Street, Mullaiyur, Sendurai Taluk, Ariyalur Dist. Cell : **99655 57000**
G 8/11 செல்வன் **V. குணசீலன்** உத்ரம் (சிம்மம்) செம்புதரிய பூர்வீகம் : துணிஞ்சிரமேடு, சிதம்பரம் விருப்பம் : பொருத்தமான வரன்.	06.01.91 170 cm	B.Sc. (CSE) BBA., MBA Banking	Deputy Branch Manager, IDFC First Bank, Pondicherry Rs. 5,40,000/PA	திரு. P வாகீசன் பிள்ளை, 2, ராம் நகர் விரிவாக்கம், கோண்டூர், கடலூர், Cell : **94435 89944, 97893 46847**

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/11 செல்வன் **R. குருபிரசாத்** அவிட்டம் 1ம் பாதம் கடலுட பூர்வீகம் : வாளூர்	24.09.96 180 cm	B.E. (Computer Science)	Software Engineer, Inatech Software, Rs.7.5 Lakhs/PA	திருமதி. R. ராஜேஸ்வரி, ஆற்றங்கரைத் தெரு, வாளூர், கீரனூர் Post, நன்னிலம் TK., Cell : **98424 78018, 99700 34222**
G 10/11 செல்வன் **பா. சந்தோஷ்குமார்** திருவாதிரை மருங்குட பூர்வீகம் : பூதனூர், தரங்கம்பாடி (Tk)	22.11.94 174 cm	B.Tech. (Mech)	Managing Director Jayaveera Enterprises Guindy, Chennai Rs. 12 Lakhs/PA	திரு. பாண்டியன், 20, ஜீவா நகர் விரிவு, பள்ளிக்கரணை, சென்னை – 600 100. Cell : **98402 43591**
G 11/11 செல்வன் **G. விக்னேஷ்** பூரம் பொன்னாருடை பூர்வீகம் : மேலப்பாவூர்	03.07.95	B.E. (Computer Science)	I.T. Executive Go Colors (Go Fashions Inda Ltd., Chennai)	திரு. C. கணபதி, 10/41, ஜெயின் நகர், ஆறுமுகநேரி P.O., திருச்செந்தூர் T.K., தூத்துக்குடி Dt. – 628 202. Cell : **94880 70503**
G 12/11 செல்வன் **Vijay Veerabadran** Ayilyam 1st Patham Theeyanudai பூர்வீகம் : Tirunelveli விருப்பம் : Employed Girl in USA	26.04.96 180 cm	B.E., Ph.D., (USA- UC San Diego) Defence in Feb24	Research Scientist in Facebook Meta-Infinity@ Seattle-USA	Dr. K. Sasikala F-7, 137/138, Mahalakshmi Apartments, Pillaiyar Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Cell : **99409 99587,** E-mail : sasikalaveerabadran2013@gmail.com
G 13/11 செல்வன் **K.B. சுமந்த்** உத்திராடம் (மகரம்) பஞ்சதரிய பூர்வீகம் : விசலூர் விருப்பம் : பணிக்கு செல்லும் வரன் குறிப்பு : TWINS	11.04.96 5' - 10"	B.E (Mech)	Asst. Engineer (Flow Serve) Bangalore	திரு. K. Balamurugan (NLC India), S/o. R. Kanagasabai (Retd. Prof. AVC College) 41, VKA Nagar, Ammapettai, Chidambaram - 608 401. Cell : **94897 08585, 94430 46094**
G 14/11 செல்வன் **M. சரவணன்** திருவாதிரை வங்காரமுட பூர்வீகம் : வானமாதேவி–காட்டுமன்னார்குடி விருப்பம் : படித்த குடும்ப பாங்கான பெண்.	08.07.94 170 cm	B.E. (ECE)	TCS Chennai Rs. 40,000/PM	திரு. B. முத்துக்குமரன், வெள்ளாழத் தெரு, வானமாதேவி & PO, காட்டுமன்னார்கோவில் Tk.–608 701. Cell : **91768 40787**
G 15/11 செல்வன் **M. விக்னேஷ்** மகம் 4ம் பாதம் வானதிராய பூர்வீகம் : விருத்தாசலம் விருப்பம் : சமபடிப்பு	25.03.94 180 cm	M.E. (EEE)	தனியார் பணி பெங்களூர் Rs. 40,000/PM	திரு. C. மனோகர், 11, கமால் பாஷா தெரு, V.N.R. நகர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் – 606 001. Cell : **94424 25822, 94428 68196**
G 16/11 செல்வன் **B. ஹரிஹரன்** அவிட்டம் 2ம் பாதம் காவனூட பூர்வீகம் : விருத்தாசலம் விருப்பம் : Any Degree	28.02.95 187 cm	B.E., M.Tech.	சுய தொழில் Rs. 30,000/PM	திரு. G. பாஸ்கர், 9, கமால் பாஷா தெரு, V.N.R. நகர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் – 606 001. Cell : **94428 68196, 98426 71488**

உறவுகளே நவக்கிரகங்கள்.

நவக்கிரக தோஷங்களை கழிப்பதற்கு ஜோதிடர்கள் பல பரிகாரங்கள் சொல்கிறார்கள். திருநள்ளாறு, திருச்செந்தூர், திருப்பதி, காளகஸ்தி போன்ற இடங்களுக்கு செல்ல கூறுகிறார்கள். அப்படிப் போய் செய்வதில் தவறு ஏதும் கிடையாது. ஆனாலும் கவனகர் திருக்குறள் இராம. கனக. சுப்புரத்தினம் சொல்லுகிற வழிமுறை மிக மிக எளிமையானவை.

நவக்கிரகங்களை தேடி வானத்தையும் பார்க்க வேண்டாம். கோயில், கோயிலாக அலையவும் வேண்டாம். ஒன்பது கிரகங்களும் உங்களைச் சுற்றியே உள்ளது. ஒன்பது கிரகங்களாகத்தான் உங்கள் சுற்றத்தார்கள் அமைஞ்சிருக்காங்க. சுற்றத்தார்களை நாம் எப்படி நடத்துகிறோம் என்பதைப் பொருத்தே நமக்கு கிரக தோஷங்கள் அமையும். நவக்கிரகங்களும் உங்கள் வீட்டிலேயே இருக்கு. சூரியன் தான் இருக்கிறதிலேயே சக்தி வாய்ந்தது. அதுதான் நவக்கிரகங்களுக்கு தலைமை வகிக்கிறது. அது போல் குடும்பத்திற்கு தலைமை வகிப்பவர் அப்பா. எனவே அவர்தான் சூரியனின் அம்சம். அப்பா சொல்படி கேட்டு நடந்தால் உங்களுக்கு தொழில் தடை வராது. வியாபாரத்தடை வராது. படிப்பில் தடை வராது. வேலை வாய்ப்பில் தடை வராது. திருமணத்தடை இருக்காது. அப்பாதான் சூரியனுக்கு நிகரானவர். எனவே நமக்கு சூரிய தோஷம் இருக்கக் கூடாது என்றால் அப்பாவிடம் நாம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் நடந்து வந்தால் நமக்கு சூரிய தோஷம் ஏற்படாது.

அடுத்தது சந்திரன். தாய்க்குரிய கிரகம். சந்திரன் தான் மகா சக்தி. தாய்க்குரிய கடமைகளையும் மரியாதையையும் சரியாக செய்து வந்தால் நமக்கு ஆயுள் குறையவே குறையாது. சந்திரன் தான் அழகு காரகன். உங்கள் அழகு, ஆரோக்கியம், மன அமைதி, நீண்ட ஆயுள் இவைக்கெல்லாம் சந்திரனே காரணம். ஆகையால் பெற்ற தாயை எந்த நிலையிலும் தவிக்க விடக்கூடாது. அவர்களுக்கு மரியாதை குறைவாக நடந்து கொள்ள கூடாது. அடிப்படைத் தேவைகளை செய்து கொடுப்பதில் தவறக் கூடாது. அவ்வாறு நடந்து கொண்டால் நமக்கு சந்திர தோஷம் ஏற்படாது. இருந்தாலும் விலகி விடும்.

மூன்றாவதாக சகோதரகாரன் செவ்வாய். சகோதர, சகோதரிகளுக்கு உரிய கடமைகளைச் செய்து அவர்களிடம் அன்பாக நடந்து கொண்டாலே செவ்வாய் தோஷம் விலகி விடும். அத்துடன் மனைவியின் சகோதர, சகோதரிகளிடம், கணவனுடைய சகோதர, சகோதரிகளிடமும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுடன் பிணக்கு இருந்தாலும் மனதில் வெறுப்பு காட்ட கூடாது. இதனை கடைப்பிடித்து வந்தால் செவ்வாய் தோஷம் நம்மை அண்டாது. நம்மை விட்டு விலகி பாதிப்பு ஏற்படுத்தாது.

அடுத்து புதன் கிரகம். புதன் என்றால் கணவர். அவருக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளை முறையாக செய்து வந்தாலே இல்லத்தரசிகளுக்கு அறிவாற்றல் குறையாது. புத்திச்சாலித்தனம் அதிகமாகும். காரியத்தடைகள் ஏற்படாது. கணவரை நன்றாக பேணினால் புதன் தோஷம் ஏற்படாது. தாய்மாமன், அத்தை, கொழுந்தன், மச்சான் ஆகியோரும் புதன் அம்சத்தில்தான் வருகிறார்கள். எனவே அவர்களிடமும் நேசத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இவர்களை புதன் தோஷம் பாதிப்பு ஏற்படுத்தாது.

அடுத்து வெள்ளி (சுக்கிரன்) கிரகம். இது மனைவி ஸ்தானம். வெள்ளி என்பது எப்படி மகாலெட்சுமி அம்சமோ அது போல் மனைவி என்பவளும் மகாலெட்சுமியின் அம்சம். எனவே மனைவியை கண் கலங்க விடாமல் காக்க வேண்டும். நேசமாக நடந்து கொண்டு இல்லறத்தை நல்லறமாக்கி அவர்களை எப்போதும் சந்தோஷத்தில் வைத்திருந்தால் நமக்கு செல்வ வளம் குறைவிருக்காது. வீடு, தொழில், நகை, அந்தஸ்து புகழ் என எல்லாவற்றிற்கும் காரணம் மகாலெட்சுமிதான். அது மனைவி ஸ்தானத்தில் இருக்கிறது. மனைவியிடம் அன்பாகவும், நேசமாகவும் நடந்து கொண்டால் சுக்கிர தோஷம் ஏற்படாது.

அடுத்து வியாழன் (குரு) கிரகம்.

குருதோஷமிருந்தால் நம்மை பாதிக்கும். குருமார்கள் ஆசியிருந்தால் எமனையே ஜெயிக்கலாம். எல்லா பாவங்களையும் போக்கலாம். குரு பார்க்க கோடி பாவம் நீங்கும் என்பார்கள். அதனால் நமக்கு கற்றுக்கொடுத்த குருமார்கள், வாழ்வியலை போதித்த குருமார்களிடம் நாம் நன்றியுடன் நடக்க வேண்டும். இவ்வாறு நாம் குரு பக்தியுடன் நடந்தால் நாம் குரு தோஷமில்லாமல் நிம்மதியாக வாழலாம்.

அடுத்து ராகு – கேது. இந்த கிரகங்களுக்கு சொந்தமானவர்கள் யார் என்றால் நம்மைச் சுற்றியிருக்கும் சுற்றத்தார்கள்தான். எல்லா நல்லதுக்கும், கெட்டதுக்கும் அவர்களே காரணமாக இருப்பார்கள். சுற்றத்தார் எந்த நிலையிலிருந்தாலும் அவர்களுக்குரிய மதியாதையை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு நம்மால் இயன்றதை கொடுப்பதும் இன்சொல் பேசுவதும் சுற்றத்தாரை மகிழ்விக்கும். அவ்வாறு நடந்து கொண்டால் ராகு – கேது தோஷம் நம்மை பாதிக்காது.

கடைசியாக சனி பகவான்.

இவரிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால் நம்முடைய இறுதி முடிவை முடிவு செய்பவர் சனிபகவான்தான். சனி தோஷம் கூடாது என்றால் பொது சேவையை தன்னலம் கருதாமல் செய்ய வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் கனிவுடன்

நடந்து கொள்ள வேண்டும் நம்மால் இயன்ற அளவு ஏழைகள் பசிப்பிணியை போக்க வேண்டும்.

ஏழைமக்களுக்கு தொண்டு செய்தல், உணவளித்தல், உடை வழங்குதல், திருமணம் செய்து வைத்தல், நம்பிக்கையான ஆறுதல் வழங்குதல், போன்ற உதவிகளை நம்மால் முடிந்த வரை செய்து கொண்டே வந்தால் சனி தோஷம் நம்மை விட்டு விலகி கொண்டே வரும். நலமுடன் நாம் நீண்ட ஆயுள் வாழலாம்.

– தகவல். நெ.ஆ. சிவகுருநாதன், சிதம்பரம்.
செல் : 9944419423

வருந்துகிறோம்

புதுச்சேரி, முத்துப்பிள்ளைபாளையம், பூஜா தெரு, எண். 5–ல் வசித்து வந்த திரு. K.G.S. குமார் அவர்கள் மனைவி திருமதி சௌமியா குமார் அவர்கள் 26.10.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

புதுச்சேரி, ரெட்டியார்பாளையம், சிவகாமி நகர் 7வது கிராஸ், பிளாட் எண். 131–ல் வசித்து வந்த திரு. V. சண்முகசுந்தரம் அவர்கள் 14.10.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். மறைந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு புதுச்சேரி கார்காத்தார் சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

வருந்துகிறோம்

சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேனாள் தலைவர் முனைவர் கே.தர்மலிங்கம் அவர்கள் 20.10.2023 அன்று இரவு இறைவனடி சேர்ந்தார்கள்.அன்னாரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கைலை சண்முகம்,
செயலாளர்.

.....

சீர்காழி, சட்டநாதபுரம் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் மகன் திரு. வெ. மணிகண்டன் (ராஜா) 12–10–23 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்

ஸ்ரீ விநாயகா டிராவல் ஏஜென்ஸி
கழனிவாசல்–மங்கைநல்லூர்,
மயிலாடுதுறை-609404.
e-mail: vinayagatravelskvl@gmail.com

மிக குறைந்த கட்டணத்தில் ரயில் யாத்திரை

தீட்டம்	ஸ்தலங்களின் விபரம்	புறப்படும் நாள்	நாட்கள்	கட்டணம்
A	காசி, கயா, அலகாபாத், டெல்லி, ஆக்ரா, மதுரா, அயோத்தி	11-03-2024	11	₹14,500/-
B	காசி, கயா, அலகாபாத், டெல்லி, ஆக்ரா, மதுரா, அயோத்தி, ஹரித்துவார், ரிஷிகேஷ்	11-03-2024	14	₹17,500/-
C	உஜ்ஜைனி, ஓங்காரேஸ்வரம், உதய்ப்பூர், ஜந்து துவாரகை, சோம்நாத், தாருகாவனம், கோடியாக், டியூக், அகமதாபாத், போர்பந்தர்	25-03-2024	14	₹22,500/-
D	ஷீரடி, பண்டரிபுரம், சனி சிக்னாபூர், பரலி, அகுண்டா நாகாநாத், எல்லோரா, கிருஷ்ணேவர், திரியம்பகேஸ்வர், பீமாசங்கர், நாசிக், துல்ஜாபூர், மந்திராலயம்	18-04-2024	10	₹12,500/-

(கட்டணம் : ரயில், பஸ், படகு, தங்குமிடம், ஒருவேளை காபி, மூன்று வேளை உணவு உட்பட)

தொடர்புக்கு: **S. ராஜா** B.Sc., கழனிவாசல். Cell: 9443617870, 9488016470

கார்த்திகை தீபத்தின் சிறப்பு

பண்டைக்காலம் முதலே கார்த்திகை தீப விழாவை ஒரு பெரிய பண்டிகையாக நம்மவர்கள் விசேஷமாகக் கொண்டாடி வருகிறார்கள். திரிசங்கு மன்னன் இழந்த தன்னுடைய நாட்டைக் கார்த்திகை தீப விரதமிருந்து திரும்பப் பெற்றான் என்றும், மகாபலிச் சக்கரவர்த்தி தனது உடம்பிலே தோன்றிய வெப்பத்தைக் கார்த்திகை விரதமிருந்து தீர்த்துக் கொண்டார் என்றும், அந்த அளவு சக்தி வாய்ந்தது கார்த்திகைத் தீப விழா என்றும் புராணங்கள் கூறுகின்றன.

கார்த்திகை தீபத்திருவிழா கொண்டாடப்பட்டதற்குநம்பழந்தமிழ்இலக்கியங்களில் சான்றுகள் நிறையவே இருக்கின்றன. திருஞான சம்பந்தர், திருமயிலையில், நந்தவனத்தின் பாம்பு தீண்டி இறந்து கலசத்தில் சாம்பலராக இருக்கும் பூம்பாவை எனும் இளம் கன்னியை மீண்டும் உயிர்ப்பித்தருள திருப்பதிகம் பாடிய போது, 'கார்த்திகை விளக்கீடு காணாத போதியோ' என்று பாடியுள்ளார். 'கார்த்திகை திருவிளக்குகள் ஏற்றிக் கொண்டாடும் காட்சியைக் காணாது செல்வது முறையோ?' என்று அதன் பொருள்.

'நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலைநாள் விளக்கில் தகைமையுடைவளாகி....' என்று இன்னொரு பழந்தமிழ்ப் பாடல் கூறுகிறது. நன்மைமிக்க கார்த்திகை விழாவில் நாட்டினர் ஏற்றி வைத்த முதல் தீபத்தைப் போல் அழகுடையவளாய் என்பது இதன் பொருள்.

கார்த்திகை விளக்கீடு என்றழைக்கப்பட்ட இந்தப் பண்டிகையை கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி திதியும், கார்த்திகை நட்சத்திரமும் கூடிய திருநாளில் கோயில்களிலும், வீடுகளிலும் வரிசையாகத் திருவிளக்கேற்றி சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இந்தத் திருநாளைக் கொண்டாடுவதற்கான காரணத்தை இரண்டு புராணக் கதைகள் கூறுகின்றன.

சிவபெருமானின் அடி–முடி காண முடியாமல் திகைத்த திருமாலுக்கும், பிரம்மனுக்கும் தீபஜோதியாக சிவபெருமான் காட்சி தந்து அருள்பாலித்த திருநாள் திருக்கார்த்திகை திருநாள் என்கிறார்கள்.

கந்தபுராணத்தில் இன்னொரு கதை சொல்லப்படுகின்றது. தேவர்களின் துயர் தீர்ப்பதற்கு என்று சிவபெருமான் தன் நெற்றிக் கண்களினின்றும் தோற்றுவித்த ஆறு தீப்பொறிகளும் சரவணப் பொய்கையில் தாமரை மலர்களில் வந்து தங்கி ஆறு குழந்தைகளாக உருமாறி நின்றன. அந்தக் திருக்குழந்தைகளை கார்த்திகைப் பெண்கள் அறுவர் தம் மடியேந்தி பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டினர்.

திருக்குமாரர்களைக் காண என்று சிவபெருமானுடன் சரவணப் பொய்கைக்கு எழுந்தருளிய அம்பிகை தன் அன்பு செல்வங்களை வாரி அணைக்க, ஆறு திருமேனிகளும் ஒருருவாகி ஆறு திருமுகங்களுடன் பேரொளிப் பிரகாச ரூபமாய் தேவியின் திருக்கரங்களில் எழுந்தருளியது.

சிவபெருமானும், அம்பிகையும் கந்தனுடன் திருக்கயிலாயத்திற்குத் திரும்பும் முன் கந்தனைப் பாசத்துடன் சீராட்டிப் பாலூட்டி வளர்த்த மங்கையர் அறுவர்க்கும் அருள் பாலித்தனர். "கார்த்திகை பெண்களாகிய உங்களால் வளர்க்கப்பட்ட எங்கள் செல்வன் கார்த்திகேயன் என்ற திருப்பெயருடன் மக்களால் வழிபடப்படுவான். நீங்கள் அறுவரும் ஒருங்கிணைந்து கார்த்திகை நட்சத்திரமாகத் திகழ்வீர்கள். கார்த்திகைத் திருநாளில் கார்த்திகேயனை வணங்குவோர் எண்ணியதெல்லாம் ஈடேறும். இக்கார்த்திகை நன்னாளில் கார்த்திகேயனைப் போற்றி விரதமிருந்து வழிபடுவோருக்கு அனைத்து நலன்களும் கிடைக்கும்!" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இப்படி பரஞ்சோதியாகிய சிவபெருமானுக்கும், கார்த்திகேயனான முருகப் பெருமானுக்கும் உகந்த கார்த்கைத் திருநாளை விரதம் இருந்து வரிசையாகத் திருவிளக்குகள் ஏற்றிக் கொண்டாடுவார்கள். சிலர் கார்த்திகை மாதம் முழுவதும் விசேஷமானது என்று தினமும் வீட்டு வாசலில் விளக்கேற்றி வணங்குகிறார்கள். அது முடியாவிட்டாலும் துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று தினங்களிலாவது தவறாது அகல் விளக்கேற்றி வணங்குவது சிறப்பு. கார்த்திகை தீபத் திருநாளில் நெல் பொரியில் உருண்டை செய்து இறைவனுக்கு நைவேத்தியம் வைத்து வழிபடுகிறார்கள்.

கார்த்திகைத் தீபங்கள் ஏற்றும் போது இந்த மந்திரத்தை கூற வேண்டும் என்று சொல்வார்கள்.

கீடா: பதங்கா: மசகாச்ச வ்ருக்ஷா
ஜலே ஸ்தலயே நிவஸந்தி ஜீவா
த்ருஷ்ட்வா ப்ரதீபம் ந ச ஜந்ம பாஜா
பவந்தி நித்யம் ச்வபசா ஹிவிப்ரா.

புழு, பட்சி, கொசு உள்ளிட்ட சகல உயிரினங்கள், தாவரங்கள், மனிதர்களில் முதல் பிறவியில் இருந்து முக்திப் பிறவி வரையில் உள்ளவர்கள் – இப்படி யார் யார் பார்வையில் எல்லாம் இந்த தீப ஒளி படுகிறதோ அவரெல்லாம் இன்னொரு பிறவி என்ற துன்பம் இன்றி நிதமும் ஆனந்தம் பெறட்டும் என்று இந்த மந்திரத்தின் பொருள். தனக்கு மட்டுமல்லாமல் காண்கின்ற அனைவருக்கும் துன்பம் விலகட்டும் என்று வேண்டுவது எவ்வளவு உயர்ந்த நோக்கம் பாருங்கள்! மந்திரம் சொல்ல வராவிட்டாலும் தீபங்கள் ஏற்றும் போது அந்த பாவனை மனதில் இருப்பது சிறப்பு.

இந்த உன்னத நோக்குடனேயே கார்த்திகை தீபத்தன்று திருவண்ணாமலையின் உச்சியில் மகாதீபம் ஏற்றப்படுகிறது. அங்கு கார்த்திகைத் திருநாளிற்கு பத்து நாட்கள் முன்பே கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகின்றது. பத்தாம் நாள் முடிவில் கார்த்திகை தீபம் திருநாளன்று அதிகாலை சுமார் நான்கு மணி அளவில் பரணி தீபம் ஏற்றப்படும். மாலை ஆறு மணி அளவில் உச்சியில் மஹாதீபம் ஏற்றப்படும்.

மிகப் பெரிய கொப்பரையில் 24 முழம் நீளமுடைய துணியில் கற்பூர தூளைச் சேர்த்து வைத்து சுருட்டித் திரியாக்கி வைத்து கொப்பரையில் பல லிட்டர் நெய் வார்த்து இந்த சுடர் எரிக்கப்படுகிறது. இந்தப் பெருஞ்சுடர் பல மைல்கள் தூரம் வரை தெளிவாகத் தெரியும். பஞ்சபூதங்களில் அக்னியாக இந்தத் தலத்தில் காட்சி தரும் அருணாச்சலேஸ்வரரை இந்த நாளில் தொழுவது அறியாமை இருட்டை நம்மிடமிருந்து விளக்கி ஞான ஒளியை ஏற்ற வழி செய்யும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

இந்தத் தீபத்திருநாள் அன்று சொக்கப்பனை கொளுத்துதல் என்றொரு வழக்கம் மற்ற பல கோயில்களிலும் உண்டு. பனைமரங்களை நட்டு, அதில் பனை ஓலைகளைச் சுற்றிலும் கட்டி, உள்ளே மத்தாப்பு, வெடிகளை எல்லாம் வைத்து தீயிலிட்டு எரியச் செய்வது வழக்கம். இதை சுகி சிவம் அவர்கள் 'எரிவது பனை அல்ல வினை, பல ஜென்மத்து வினை என்ற பாவனையோடு கொளுத்தினால் பலன் உண்டு' என்று அழகாகக் கூறுவார்.

இப்படி பண்டிகைகள் ஆன்மிக ஞானத்தில் நம்மை உயர்த்திக் கொள்ளும் பாவனையிலேயே அந்த நாளில் உருவாக்கப்பட்டன. ஞானத்தை மட்டும் சொன்னால் பலருக்கு அது தியரியைப் படிக்கிறது போலத்தான். கூடவே ப்ராக்டிகலாக சிலதைச் செய்தாலே அந்த உயர் பாவனைகள் பாமர மக்களுக்கும் வரும் என்று தான் கதைகளாகச் சொல்லி பண்டிகைகளை உருவாக்கி அடித்தள மக்களையும் அதில் பங்கு பெற வைத்தார்கள். அதை நாம் மறந்து விடக்கூடாது.

சிவபெருமான் என்ற பெரும் பரஞ்சோதி நெருப்பில் இருந்து வரிசையாக ஆறு நெருப்புப் பொறிகள் சரவணப் பொய்கை தாமரைகளில் வந்தது போல் நம் வீட்டு அகல் விளக்குகளிலும் கார்த்திகைத் தீபத் திருநாளில் வந்து தங்கட்டும். அறியாமை இருட்டு விலகி மெய்ஞான ஒளி நம் வீடுகளிலும் ஒளிரட்டும். இந்த உணர்வோடு கார்த்திகை தீபங்களை ஏற்றினால் நம் வாழ்வில் ஏற்றம் நிச்சயம்!!!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர், சென்னை–90.
செல்: 9943702054

உ

திருச்சிற்றம்பலம் ஸ்ரீ சௌந்தரநாயகி உடனாய ஸ்ரீ நடனபுரீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் (24.01.2024)

மயிலாடுதுறை வட்டம், திருச்சிற்றம்பலம், **ஸ்ரீ சௌந்தரநாயகி உடனாய ஸ்ரீ நடனபுரீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்** நிகழும் சோபகிருது ஆண்டு தை மாதம் 10ம் தேதி, 24.01.2024 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் சிறப்பாக நடைபெற இருப்பதால் பக்தகோடிகள் அனைவரும் கலந்து கொண்டு எம்பெருமானின் பரிபூரண அனுக்கிரஹத்தை பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நமது கார்குல உறவுகளும், இவ்வூரில் இருந்து புலம்பெயர்ந்து சென்றவர்களும், அவர்களை சார்ந்த நண்பர்களும் திருப்பணி வேலைகளுக்கும், கும்பாபிஷேகத்திற்கும் நிதியுதவி வழங்க வேண்டுகிறோம்.

S.சௌந்தர்ராஜன் & R.பழனியப்பன்
Indian Overseas Bank, மணல்மேடு கிளை
A/C.No.022901000069265
IFSC Code : IOBA0000229
MICR : 611020011

இப்படிக்கு
கார்குல சொந்தங்கள்
திருச்சிற்றம்பலம்
9443501424
7904708742

திருவிளையாடற்புராணம்

சிவகாமியின் செல்வன்

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்

48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம்

நாரையின் வாழ்க்கை: பாண்டிய நாட்டின் தென்திசையில் ஓர் அழகிய தடாகம் ஒன்று இருந்தது. அங்கு செங்கால் நாரை ஒன்று வாழ்ந்து வந்தது.

ஒரு சமயம் மழை இல்லை. வறட்சியானது. அந்த நாரை இரையைத் தேடி முனிவர்கள் வாழும் காடு ஒன்றைச் சென்றடைந்தது. அங்கு சதுரமாகக் கட்டப்பட்ட சந்தியாமடம் என்னும் பெயர் கொண்ட தடாகம் இருந்தது. அதனைச் சுற்றி சண்பகம், பாதிரி, வேங்கை, வஞ்சி, குரா, மரா, முருக்கு, மிருது என பல மரங்கள் இருந்தன. அச்சோ தீர்த்தம் அல்லது அதோ தீர்த்தம் எனப் பெயர் பெற்ற அதன் கரையில் அந்த நாரை இரை விரும்பி வந்து தங்கியது.

நாரையின் விரதம்: அங்கு வாழ்ந்த முனிவர்கள் நாளும் அதிகாலையில் அங்கு மூழ்கிக் குளிப்பர். அப்பொழுது அவர்கள் தோள்புறத்தில் படர்ந்து கிடக்கும் சடைமுடியில் மீன்கள் தொற்றிக்கொண்டு புரளுவதைக் கண்டது நாரை. தவ முனிவர்களின் திருமேனியைத் தீண்டும் பேறு பெற்ற இம்மீன்களை நாம் உண்பது தவறு, பாவம் என்று எண்ணியது நாரை. இந்த ஞானத்தால் அது மீனை உண்ணவில்லை. நீராடிய பின் முனிவர்கள் மதுரைப் புராண நூலை ஓதிடுவர். மதுரைத் தலத்தின் சிறப்பினையும், சொக்கநாதப்பெருமானின் அருள்திறத்தையும், அங்குள்ள பொற்றாமரைக் குளத்தின் மகிமையையும் பற்றி உரையாடுவர். இதனைத் தொடர்ந்து கேட்டு வந்த நாரைக்கு மதுரை செல்ல வேண்டும் என்ற விருப்பம் உண்டானது.

உடனே மதுரை சென்றது. பொற்றாமரையில் நீராடியது. சோமசுந்தரரை வணங்கியது. திருக்கோயிலை வலம் வந்தது. இவ்வாறு பதினைந்து நாட்கள் வழிபாடு செய்தது நாரை. இறைவன் நாரையைத் தமது அருட்கண்ணால் நோக்கினான். நாரையும் பெருமானை மனத்துள் வைத்துத் தியானம் செய்தது.

இறைவன் நாரைக்கு அருள்பாலித்தல்: பதினாறாம் நாள் பொற்றாமரைக் குளத்தில் நீராடிய நாரை அங்குத் துள்ளித் திரிந்த மீன்களைப் பிடித்து உண்ண எண்ணியது. ஆனால் இறையருளால் ஞானம் பெற்ற நாரை "இப்புண்ணிய தீர்த்தத்தில் வாழும் மீன்களைப் புசிக்கும் ஆசை என்னுள் உண்டாயிற்றே! இவ்வாறானால் என் பிறவித் துன்பம் எங்ஙனம் எப்போது ஒழியும்?" என்றெண்ணி துயருற்றது. மீன்களை உண்ணாமல் சிவனையே சிந்தித்துக் கொண்டிருந்தது. "நற்கதி அருள்க!" என்று வேண்டிக் கொண்டது.

அப்பொழுது சோமசுந்தரப் பெருமான் நாரை முன் எழுந்தருளினான். "எமக்கு இனிய நாரையே! உனக்கு வேண்டும் வரம் யாது? சொல். அருள்வோம்!" என்றான்.

ஐயனே! இப்பிறவி எனக்கு நீங்க வேண்டும். மெய்யன்பர்கள் வாழும் சிவலோகத்தில் என்னைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். பொற்றாமரைத் தீர்த்தத்தில் உள்ள மீன்களைப் புசித்தால் என்றும் நீங்காத பாவம் எங்களுக்குச் சேரும். எனவே இத்தீர்த்தத்தில் எக்காலத்திலும் மீன்களே இல்லாமல் இருக்கும்படி இன்னொரு வரம் தந்தருளவேண்டும் பெருமானே!" என்று வேண்டியது. வரமருளிய பெருமான் மறைந்தார். இவ்விரு வரங்களையும் பெற்ற நாரை சிவலோகம் சென்றடைந்தது. நான்கு புயங்களும், மூன்று கண்களும் பொருந்திய சிவரூபம் பெற்ற நாரை நந்தி கணங்களுள் ஒன்றாய்த் தங்கியது.

நீதி: அன்று முதல் இன்று வரை பொற்றாமரைத் தீர்த்தத்தில் மீன்களும் ஏனைய உயிரினங்களும் இல்லாது போயின. தன் இனம் தீர்த்தவாழ் மீன்களை உண்டு நீங்காப் பாவம் பெறவேண்டாம் என்று எண்ணி வரம் பெற்ற நாரையின் இனப்பற்று ஈண்டு எண்ணத்தக்கது.

குழந்தை

பூவாயி சிரிக்கும்
உன்னைப் பார்த்து
பூரித்து நிற்கும்
பூலோகம்
ஆனால் நீ யாரை
நினைத்துச் சிரிக்கிறாய்!
பூக்கள் தோற்க்கும்
உன் அழகு
நீ நடக்கும் போது
பூமி சிரிக்கும்
உன் மலரடிப் பார்த்து
நீ தவறி வீழ்ந்தால்
உன்னை தாங்கி பிடிக்க
துடிக்கும் பூமி
நீ பேரழகு
பூக்கள் வாடிப் போகும்
உன் அழகைப் பார்த்து
நாங்கள் இல்லையே
இப்படி என்று
சொல்லி மாளாது
உன் பேரழகு
சொக்க தங்கமே
உன் குரல் கேட்டு
மயங்கும் குயில்கள்
உன் நடையைக்
கண்டு நாணிப் போகும்
அன்னப் பறவைகள்
சிங்கார செல்லமே
நீடுழி வாழ்வாய்.

- C. சந்திரா

வள்ளலார் வரலாற்றுக் குறிப்புகள்.

வள்ளலாரின் தாயார் சின்னம்மையாருக்கு ஆசி வழங்குதல்.

ஒரு நாள் உச்சிப்பொழுதில் சிவயோகியார் ஒருவர் திருநீறு அணிந்து அக்கமணிபூண்டு பசியினால் உடல் களைத்தவராய்ச் சின்னம்மையாரிடம் வந்து உணவு வேண்டினார். அடியார்களுக்கு உணவு வழங்குதல் பெரும் பாக்கியம் எனப்போற்றும் அவ்வம்மையார் சிவயோகியாரை அன்புடன் அழைத்து ஆசனத்தில் எழுந்தருளச் செய்து அமுது படைத்தார்.

உண்டு பசி நீங்கி இளைப்பாறிய சிவயோகியார் அம்மையாருக்குத் திருநீறு கொடுத்து 'உலகத்து உயிர்களின் துன்பத்தை நீக்கும் உத்தமன் ஒருவன் உமக்கு மகனாய்ப் பிறப்பான்' என வாழ்த்திச் சென்றார்.

சமூக சரித்திரம் –1

துப்பார் செஞ்சடையாய் – அருட் – சோதிச் சுகக் கடலே
செப்பா மேனிலைக்கே – சிறி – யோனைச் செலுத்திய வா
எப்பாலும் புகழும் – பொது இன்ப நடம் புரியும்
அப்பா தந்தனையே – அரு – ளாரமு தந்தனையே
திருவருட்பா ஆறாம் திருமுறை

இராமலிங்கர் அவதாரம்

5–10–1823 (சுபானு புரட்டாசி–21 ஞாயிற்றுக்கிழமை) சாதி, சமயம், மதம், இனம், மொழி, நாடு, உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவர், படிக்காதவர் எனப் பல்வகைப் பேதங்களில் சிக்கி அறியாமை எனும் காரிருளில் மூழ்கிக் கிடந்த மக்களின் உள்ளத்தில் நல்அறிவுஎன்னும்ஞானஜோதியைஏற்றிவைக்கத்தக்க ஓர் ஆண் மகவை, சுபானு வருடம் புரட்டாசி மாதம் 21–ம் தேதி (5–10–1823) ஞாயிற்றுக்கிழமை மாலை 5–30 மணி அளவில் சின்னம்மையார் பெற்றெடுத்தார்.

சமூக சரித்திரம்–2.

அகத்தே கறுத்துப் புறத் வெளுத்து இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந் திடுதற் கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளை பெற்றேனே.

– திருவருப்பா ஆறாம் திருமுறை.

சிதம்பர இரகசியம் –1824–ம் ஆண்டு

இளஞாயிறு போன்று பேரொளியுடன் விளங்கிய, குழந்தையாகிய இராமலிங்கம் பிறந்த ஐந்தாவது மாதத்தில் தந்தையார் இராமையா, அவர்கள் குடும்பத்துடன் சிதம்பரம் சென்று நடராஜரைத் தரிசித்தார்.

அப்பொழுது அவர் கையில் இருந்த குழந்தையோ, திரை தூக்கத் தரிசனம் செய்யும் போது கண் இமை கொட்டாது பார்த்துக் கலகலவென சிரித்தது. இந்த இளஞ்சிரிப்பைக் கண்டு மனமகிழ்ந்த அப்பைய தீட்சிதர் உடனே அக்குழந்தையை உற்று நோக்கி 'இப்பிள்ளை நும் பிள்ளையன்று நடராஜரின் பிள்ளை' எனச் சிறப்பித்து அவர்களின் குடும்பத்தைத் தம் வீட்டிற்கு அழைத்து விருந்து உபசரித்து அனுப்பினார்.

சமூக சரித்திரம்–3.

தாய்முதலோ ரொடு சிறிய பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரை தூக்கத் தரிசித்தபோது
வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியஎன்
மெய்உறவாம் பொருளே.

– திருவருட்பா விளக்கமாலை

ஓதாது உணர்தல்

வள்ளலாரின் அண்ணன் தன் ஆசிரியரான காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி அவர்களிடம் தன் தம்பியைக் கல்வி கற்க அனுப்பினார். வள்ளலாருக்கு உலகியல் கல்விபயிலகருத்தூன்றவில்லை.கந்தகோட்டம்சென்று இறைவனை வழிபட்டுத் துதித்தகையே விருப்பமாகக் கொண்டார். இதனை உணர்ந்த மகாவித்வான் இக்குமாரன் கல்லாதுணரவும், சொல்லாதுணரவும் வல்லவரென்று உணர்ந்து அவருக்குக் கற்பிப்பதைக் கைவிட்டார். இறைவன் வள்ளலாரைப் பள்ளியில் பயிற்றாது தானே கல்வி பயிற்றினான். இவ்வாறு பெருமான் ஓதாதே அனைத்துக் கலைகளையும் உணர்ந்தார்.

ஓதாதுணர்ந்திட ஒளிஅளித் தெனக்கே
ஆதாரம் ஆகிய அருட்பெருஞ்சோதி.

அகவல் (திருவருட்பா)

முனைப்பள்ளி பயிற்றாது என் தனைக்கல்வி பயிற்றி
முழுதுணர்வித்து உடல் பழுதெலாம்
தவிர்த்தே
எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெருஞ்சோதி
என்னப்ப னேபள்ளி எழுந்தருளாயே.

– திருவருட்பா.

மேற்கண்டவைகள் எல்லாம் காரணப்பட்டு ச.மு. கந்தசாமிப் பிள்ளை எழுதிய வள்ளலார் வரலாற்றுக் குறிப்புகளில் உள்ளன.

சித்த மருத்துவர். G. வெங்கடேசன்.
செல் : 9994644248

‘தெரிந்ததும் – தெரியாததும்

‘தெரிந்தது எனில் – மகிழ்ச்சி கொள்வோம்;

தெரியாதது எனில் – தெரிந்துகொள்வோம்)

தொகுப்பு. திருச்சி *S.B.* ஆனந்தன்

1. ஐ. நா. சபையில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ் வாசகம் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற கணியன் பூங்குன்றனாரின் பாடல் வரிகள்.

2.ரயில் நிலையங்களில் ‘எக்ஸ்ரே பேக்கேஜ் ஸ்கேனர்’ மூலம் பொருட்களை சோதனை செய்து பணம், போதை பொருட்கள், ஆயுதங்கள், வெடிகுண்டு, துப்பாக்கி ஆகியவற்றை பிலிம் நெகடிவ் போல இந்த மிஷின் காட்டும்.

3.இந்தியாவில் 1989–ம் ஆண்டு ராஜிவ்காந்தி பிரதம மந்திரியாக இருந்த போது ஓட்டு போடுவதற்கான வயது வரம்பு 21–ல் இருந்து 18 ஆக குறைக்கும் 61–வது அரசியலமைப்புச்சட்ட திருத்தம் கொண்டுவரப்பெற்றது.

4.உயரமான கட்டடங்களில் மின்சக்தியால் இயங்கும் ‘லிப்ட்’ முதன் முதலில் 1880–ம் ஆண்டு ஜெர்மனியில் அமைக்கப்பெற்றது.

5.தமிழ்மொழியில் பூ, ல, ள ஆகிய மூன்று எழுத்துக்களும் இடம் பெறும் ஒருவார்த்தை – தொழிலாளி.

6.ஆங்கிலத்தில் *a, b, c, d, e, f* ஆகிய ஆறு எழுத்துக்களும் இடம் பெறும் ஒரு வார்த்தை :– *feed back.*

7.ராமாயணத்தில் இடம் பெறும் கிஷ்கிந்தை இப்போது கர்நாடகத்தில் உள்ள ஹம்பிக்கு அருகே உள்ளது.மகாராஷ்டிராவில்உள்ளநாசிக் – சூர்ப்பனகை மூக்கறுபட்ட இடம் தமிழ் நாட்டில் உள்ள ராமேஸ்வரம், ராமர் இலங்கைக்கு செல்ல பாலம் எழுப்பத் தொடங்கிய இடம்.

8)ஐ.நா சபையின் தலைமையகம் நியூயார்க்கில் உள்ள மன்ஹாட்டனில் உள்ளது. உலக சுகாதார அமைப்பு சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் உள்ளது.

சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்தில் உள்ள ஹேக் நகரில் உள்ளது.

9)இத்தாலி நாட்டைச் சேர்ந்த லியர்னாடோ டாவின்சி தனது இடக்கையால் மூன்று ஆண்டுகளாக வரைந்தது தான் உலகப்புகழ் பெற்ற மோனலிசா ஓவியம்.

மோனலிசாவின் உண்மைப் பெயர் – லாகியோ கோண்டா.

படத்தின் சிறப்பு – புருவங்கள் கிடையாது.

10. பீனிக்ஸ் என்பது கற்பனைப் பறவை.

சாம்பலிலிருந்து உயிர்த்தெழுவதாக சித்தரிக்கப்பட்டது.

ஹம்மிங் பறவை மிகமிகச் சிறிய பறவை.

இப் பறவையால் வானில் அசையாமல் நிற்க முடியும் வகையில் ஆற்றல் கொண்டது.

அன்பு மகனுக்கு அப்பா எழுதுவது.

வசதியாகத்தான் இருக்கிறது மகனே.... நீ கொண்டு வந்து சேர்த்த முதியோர் இல்லம்.

பொறுப்பாய் என்னை ஒப்படைத்துவிட்டு சலனமின்றி நீ வெளியேறியபோது, முன்பு நானும் இதுபோல் உன்னை வகுப்பறையில் விட்டு விட்டு என் முதுகுக்கு பின்னால் நீ கதற கதறக் கண்ணீரை மறைத்தபடி புறப்பட்ட காட்சி ஞாபகத்தில் வருகிறது!

முதல் தரமிக்க இந்த இல்லத்தை தேடித் திரிந்து நீ தேர்ந்தெடுத்ததை அறிக்கையில் கூட அன்று நான் பொருத்தமான பள்ளி எதுவென்றே ஓடி அலைந்ததை ஒப்பீடு செய்கிறேன்.

இது வரையில் ஒருமுறையேனும் என் முகம் பார்க்க நீ வராமல் போனாலும் என் பராமரிப்பிற்கான மாதத்தொகையை மறக்காமல் அனுப்பி வைப்பதற்காக மனம் மகிழ்ச்சியடைகிறது.

நீ விடுதியில் தங்கி படித்த காலத்தில் உன்னை பார்க்க வேண்டும் என்ற ஆவல். இருந்தாலும் உன் படிப்பை நினைத்து உன்னை சந்திக்க மறுத்ததன் எதிர்வினையே இதுவென்று இப்பொழுது அறிகிறேன்.

உன் இளம் வயதில் நீ சிறுக சிறுக சேமித்த அனுபவத்தை என் முதுமைப் பருவத்தில் மொத்தமாக எனக்காக செலவு செய்கிறாய். ஆயினும்.... உனக்கும் எனக்கும் சிறு வேறுபாடு.

நான் கற்று கொடுத்தேன் உனக்கு ....

வாழ்க்கை இதுதானென்று...! நீ கற்று கொடுக்கிறாய் எனக்கு...

உறவுகள் இதுதானென்று....!

அன்புடன் அப்பா.

- Lion. L. ராமசெல்வம் பிள்ளை,

விசலூர்.

9750806991

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

நங்கநல்லூர்

சங்க செயற்குழு கூட்டம் ஆதம்பாக்கத்தை சேர்ந்த செயற்குழு உறுப்பினர் திரு. கு. கோவிந்தராசு அவர்களது இல்லத்தில் 15–10–2023 அன்று நடைபெற்றது. மகளிரணி செயலாளர் திருமதி. வனஜா சரவணனின் இறைவணக்கத்துடன் கூட்டம் இனிதே துவங்கியது. தலைவர் திரு. க. சரவணன் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். செயலர் திரு. கோ. தியாகராஜன் அவர்கள் சென்ற மாத அறிக்கையினை வாசித்த பின் கடந்த ஒரு மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை விவரித்தார். பொருளாளர் திரு. வை. செல்வகுமார் அவர்கள் தற்போதைய நிதி நிலவரம் பற்றி எடுத்துரைத்தார். அண்மையில் மறைந்த அண்ணாநகர் சங்க தலைவர் திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களது மனைவி திருமதி. அமராவதி அம்மாள் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. சங்கத்தின் 36–வது ஆண்டு விழாவை 07–01–2024 அன்று பழவந்தாங்கல் & நங்கநல்லூர் வியாபாரிகள் சங்க திருமண மண்டபத்தில் நடத்திட முடிவு செய்யப்பட்டது. வழக்கம் போல் விளையாட்டு போட்டிகள், பரிசுகள், உணவு மற்றும் விருந்தினர் உபசரிப்பு என்று அனைத்தையும் பற்றி விவாதிக்கப்பட்டது. அதற்கான செலவினங்கள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. மகளிரணியினரின் ஆலோசனைகளும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆண்டு விழா அழைப்பிதழ் மற்றும் 2024–ம் வருடத்திற்கான காலண்டர் அச்சிடுவது பற்றியும் கருத்துக்கள் வைக்கப்பட்டது. புதிய உறுப்பினர்கள் சேர்க்கையில் அதிக கவனம் எடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. போதுமான நிதி வசூல் செய்திட உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டது. அண்மையில் துணைச்செயலர் திரு. வெ. கண்ணன் அவர்களுக்கு 'உலகத்தமிழ் தொழில் இமயம்' என்ற மாத இதழ் நிறுவனத்தால் *BUSINESS ICON 2023* என்ற விருது வழங்கப்பட்டது. அதனை பாராட்டி துணைச்செயலர் திரு. கண்ணன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். திரு. கண்ணன் அவர்களின் புதல்வன் க. பாலாஜிக்கு மத்திய அரசு பணி கிடைத்தமைக்கு பாராட்டி கௌரவிக்கப்பட்டது. அண்மையில் நடைபெற்ற சுற்றுலாவில் சிறப்பாக செயல்பட்ட துணைத்தலைவர் திரு. கோ. சுவாமிநாதன் அவர்களும் கௌரவிக்கப்பட்டார். செயற்குழு உறுப்பினர் திரு. கிருஷ்ணகுமார் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தின் முடிவில் செயற்குழு உறுப்பினர் திரு. கு. கோவிந்தராசு அவர்களின் சார்பில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. திரு. கோவிந்தராசு மற்றும் அவரது துணைவியார் திருமதி. லஷ்மி அவர்களும் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றதுடன் அனைவருக்கும் அன்புடன் உணவு பரிமாறினர். அவர்களது புதல்விகள் செல்வி. காருண்யாஸ்ரீ மற்றும் சௌமியா ஸ்ரீ ஆகிய இருவரும் இசை மற்றும் நாட்டியத்தில் அதிக நாட்டம் கொண்டவர்களாகவும் பயிற்சி பெற்றவர்களாகவும் இருப்பதாக தெரிவித்தனர். இருவரும் இணைந்து மிக அழகாக பாடல் ஒன்றை பாடி அனைவரையும் இன்பத்தில் ஆழ்த்தினர். திரு. கோவிந்தராசு அவர்களும் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

– வை. செல்வகுமார்,
பொருளாளர்.
Cell : 9790896391

அண்ணா நகர் :

சங்கத்தின் 16–ம் ஆண்டு நிறைவு விழா 2–10–2023, அன்று மதியம் மூன்று மணிக்கு சிறுவர் விளையாட்டு போட்டியுடன் அண்ணாநகர் டி.கே. மகாலில் துவங்கியது. விளையாட்டு போட்டிகளை மகளிரணி பொறுப்பாளர்கள் அகிலா சுகுமார், மாலதி ஞானகுமார், லெஷ்மி பிரபாகரன் ஆகியோருடன் ஞானகுமார், அறிவொளியும் இணைந்து குறைவான நேரத்தில் திறம்பட சிறப்பாக நடத்தி முடித்தார்கள்.

திருமதி.லலிதா விவேகானந்தன், மணிமேகலை பாலகுமார், திருமதி. சாந்தி பாலசுப்பிரமணியன்,

திருமதி. ஜெயலெக்ஷ்மி தியாகராஜன், திருமதி. ஜெயந்தி ராஜேந்திரன் குத்துவிளக்கு ஏற்றியதும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது.

தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று தலைமையுரை ஆற்றினார்கள். மறைந்த திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அடுத்து டாக்டர் ஆ. முருகானந்தம் அவர்கள் சங்க ஆலோசகர் டாக்டர் கு. விவேகானந்தன் அவர்கள் முன்னிலையில் மறைந்த திரு. வி. சோமசுந்தரம் அவர்களின் திருவுருவ படத்தை திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

செயலாளர் அவர்கள் ஆண்டறிக்கை வாசித்ததும், பொருளாளர் ஜி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சங்கத்தின் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்க, உறுப்பினர்கள் கைதட்டி ஆமோதித்து நிதிநிலை அறிக்கை பொதுக்குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அண்ணாநகர் அமுதசுரபி அறக்கட்டளை தலைவர் திரு. டி. தியாகராஜன் அறக்கட்டளையின் செயல்பாடுகளை எடுத்துரைத்து பேசியதும், திரு. பால அறிவொளி கல்விக்குழு அறிக்கை வாசிக்க பொதுக்குழு நிறைவு பெற்றது.

அடுத்து சிறப்பு விருந்தினர்களான திரு. கே.கே.ஆர் சுரேஷ், திரு. சபா சிவக்குமார், டாக்டர் ஆ. முருகானந்தம் அவர்கள், திரு. மனிதநேயம் முத்துக்குமாரசுவாமி ஆகியோர் மேடைக்கு அழைக்கப்பட்டு அமரவைக்கப்பட்டார்கள்.

விநாயகர் அகவலை அழகாக சத்யாவின் மகள் செல்வி. பிரணீத்தா பாடியது சிறப்பாக இருந்தது. அவளின் தம்பி மிதுலன் மழலை குரலில் ஔவையாரின் விநாயகர் பாடல், மற்றும் குரு ஸ்லோகம் பாடியதும், செல்வி. எஸ். சிவசங்கரி மற்றும் செல்வன் எஸ். சிவகார்த்திகேயன் இருவரும் சேர்ந்து சிவபுராணத்தை பார்க்காமல் பாடியதும், செல்வி. வேதிகா கந்தசஷ்டி கவசம் சொல்லியதும் எல்லோரையும் பிரமிக்க வைத்ததாக இருந்தது. திருமதி. ஏ. ஞானசக்தி அவர்கள் கோளறு பதிகம் பாடியதும், திருமதி. சுனந்தா அவர்கள் கணீர் குரலில் தேவாரம் பாடியதும் நன்றாக இருந்தது. விளையாட்டு போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு சிறப்பு விருந்தினர்களால் பரிசு வழங்கப்பட்டது. திரு. கோவிந்தராஜன் – அனுஷா அவர்களின் மகள் செல்வி. ஷியாமளாதேவி பத்தாம் வகுப்பில் 500க்கு 477 மதிப்பெண் பெற்றதற்காக வாழ்த்தி சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.

சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. ஆர்.எஸ். அவர்களின் மகன் எஸ். பாலப்பிரகாஷ் அவர்கள் சாப்ட்வேர் துறையை பற்றியும், அடுத்து சிஎம்டிஏ வில் தலைமை பிளானராக பணிபுரியும் திரு. ஆர். சிவகுமார் அவர்கள், மனை, வீடு வாங்கும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் குறித்தும், ஓய்வுபெற்ற காவல் உதவி ஆய்வாளரான திரு. எஸ். சிவசங்கர் அவர்கள் உறுப்பினர்களுக்கு பயன்படும்படியாக காவல் துறை சம்பந்தப்பட்ட விஷயங்களையும் பேசினார்கள்.

சிறப்பு விருந்தினர்கள் மனிதநேயம் முத்துக்குமாரசுவாமி அவர்களும், அடுத்து மாநில கூட்டமைப்பு தலைவர் கே.கே.ஆர். சுரேஷ் அவர்கள் பேசினார்கள். மாநில தலைவர் அவர்களுக்கு திரு. கோபாலகிருஷ்ணன் அவர்கள் சால்வை அணிவித்து சங்கத்தின் சார்பில் நினைவு கேடயத்தை வழங்கி கௌரவித்தார்கள்.

டாக்டர் ஆ. முருகானந்தம் அவர்கள் மருத்துவ ஆய்வுத்துறையில் இரத்த மாதிரிகளை கண்டறியவும், இதய நோய், சர்க்கரை நோய் முதலான நோய்களை கண்டறியவும் 42 பொருட்களை அவர்களது நிறுவனமான அபிஜினிக்ஸ் கம்பெனியில் தயார் செய்வதாகவும், இந்த கம்பெனி நமது இராதா இன்ஜினியரிங் கம்பெனியின் துணை நிறுவனம் எனவும் பேசினார்கள். தற்போது டெங்கு, சிக்குன்குனியா, டைபாய்டு நோய்களை கண்டறியவுள்ள பொருட்களை தயாரிக்க அரசு அனுமதி பெற்றுள்ளதாகவும், இந்த நோய் உள்ளவர்களின் இரத்த மாதிரிகள் நேரடியாக கிடைத்தால் இன்னும் சிறப்பாக நோய் கண்டறியும் பொருட்களை தயார் செய்ய உதவியாக இருக்கும் எனவும் கேட்டுக்கொண்டார்கள்.

16–ம் ஆண்டு நிறைவு விழா மலரை திரு. மனிதநேயம் முத்துக்குமாரசுவாமி அவர்கள் வெளியிட திரு. சூரியமூர்த்தி அவர்களின் மகளும் மருமகனுமான சித்ரா – செல்வராஜும், திரு. பாலகுமார் அவர்களும் பெற்றுக்கொண்டார்கள்.

திரு. விவேகானந்தன் அவர்கள் Lion சபா. சிவகுமார் அவர்களைப் பாராட்டும் வகையில், 'அரிமா' அமைப்பு குறித்தும், நலிந்தோர்க்கு உதவும் அறப்பணிகள் பற்றியும் அந்த வகையில் சிவகுமாரின் பங்களிப்பு குறித்தும் பாராட்டி அறிமுகம் செய்தார்கள்.

நிறைவாக சென்னை சங்கத்தின் தலைவரும், லயன்ஸ் கிளப் முன்னாள் கவர்னருமான திரு. சபா சிவக்குமார் அவர்கள், லயன்ஸ் கிளப் நடத்தும் மருத்துவ சேவைகள் பற்றியும், அவைகள் எந்தெந்த இடத்தில் செயல்படுகிறது என்பது பற்றியும் உறுப்பினர்களுக்கு பயன்படும் விதமாக பேசினார்கள். சிறப்பு விருந்தினர்

சபா சிவகுமார் அவர்களுக்கு திரு. விவேகானந்தன் அவர்கள் சால்வை அணிவித்து நினைவு கேடயத்தை வழங்கி சிறப்பித்தார்கள்.

ஒப்புரவு வெளியீட்டாளரும் மாநில கூட்டமைப்பின் அமைப்பு செயலாளருமான திரு. கைலை. சண்முகம் அவர்களுக்கும், மாநில துணைத்தலைவர் திரு. கோ. தியாகராஜன் அவர்களுக்கும், ஒப்புரவு ஆசிரியர் திரு. மேலையூர் அன்பழகன் அவர்களுக்கும், சென்னை சங்கம், நங்கநல்லூர் சங்கம், போரூர் சங்கம், ஒய்எம்கேஏ, கேபிஎப் சங்கத்திலிருந்து வந்திருந்த பொறுப்பாளர்களுக்கும், ஒப்புரவு முத்தையன் அவர்களுக்கும், மயூர் பிரிண்டர்ஸ் திரு. செல்வகுமார் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் சால்வை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது. நிறைவாக இணைச்செயலர் திரு. இராஜசேகர் அவர்கள் நன்றியுரை சொல்ல, தேசிய கீதம் பாடியதும், இரவு உணவுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. நன்றி!

சங்க கூட்டம் 22–10–2023 அன்று கொரட்டூரில் நடைபெற்றது. முதலில் தலைவர் கோபாலகிருஷ்ணன் அவர்களின் மனைவி திருமதி. அமராவதி அம்மாள் அவர்களின் மறைவிற்கும், சென்னை சங்கத்தின் மேனாள் தலைவர் பேரா திரு. K. தர்மலிங்கம் அவர்கள் மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைவர் ஆண்டு விழா வரவு செலவு விபரங்களை எடுத்து சொன்னதை செயற்குழு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு கை தட்டி ஒப்புதல் அளித்தார்கள்.

ஆண்டு விழா பணிகளை சிறப்பாக செய்த தலைவர் அவர்களுக்கும், அறக்கட்டளை தலைவர் அவர்களுக்கும், துணைத்தலைவர் இராஜேந்திரன் அவர்களுக்கும் இளங்கோ வாசுதேவன் அவர்களுக்கும், வேளச்சேரி பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், பாலகுமார் அவர்களுக்கும், இராஜசேகர் அவர்களுக்கும், அரும்பாக்கம் வெங்கடேசன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

திரு. சி.எஸ். நாராயணசாமி அவர்கள் வீட்டு கொலுவிற்கு எல்லோரையும் அழைத்து சிறப்பித்து இரவு உணவும் வழங்கியதற்கு வாழ்த்தும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

– என். ஆனந்தகணபதி, செயலர்.

9094682811

குரோம்பேட்டை

குரோம்பேட்டை கார்காத்தார் சங்க மங்கல சந்திப்பு வெகு விமர்சையாக 01.10.23 அன்று நடைபெற்றது.

நம் வரன்கள் அனைவரும் நல்ல முறையில் விரைவில் திருமணமாகி நலமுடன் வாழ வேண்டி திருமணஞ்சேரி அருள்மிகு கோகிலாம்பாள் சமேத அருள்மிகு கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பிரசாதங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

முத்தாய்ப்பாக திருக்கயிலை பரம்பரை தருமை ஆதீனம் 27வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சார ஸ்வாமிகள் ஆசியுடன் நடைபெற்ற மங்கல சந்திப்பில் சுமார் 300க்கும் மேற்பட்ட கார்குல சொந்தங்கள் உற்சாகமாக கலந்துகொண்டு அன்றைய தினமே 3 திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

சங்க தலைவர் திரு. மனோகர் தலைமையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கார்காத்தார் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் திரு. KKR. சுரேஷ், சென்னை கார்காத்தார் சங்க தலைவர் திரு. சபா. சிவகுமார், சங்க முன்னாள் தலைவர்கள் திரு. ஜகந்நாதன் பிள்ளை, திரு. திருஞானசம்பந்தம், திரு. சதாசிவம் மற்றும் சென்னை சங்க செயலாளர் திரு. கைலை. ஷண்முகம், Dr. திரு. வே. பாலகிருஷ்ணன் ஆகியோருடன் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இளைஞர் அணி நிர்வாகியாக திரு. சந்தோஷ் விஜயனை சங்கத்தின் சார்பாக துணைத்தலைவர் திரு. தீபன் நியமித்தார்.

மகளிர் அணி நிர்வாகிகளாக திருமதி. ராணி அகோரமும், துணைதலைவியாக திருமதி. கோமதி மனோகரும், செயலாளராக திருமதி. சுபாஷினி விஜயனும், பொருளாளராக திருமதி. தனலட்சுமி தியாகராஜனும் சங்கத்தின் சார்பாக திருமதி. வனஜா செல்வகணதியால் நியமிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சிக்கு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து இருந்த செயலாளரும், மங்கல சந்திப்பு அமைப்பாளருமான திரு. தியாகராஜனுக்கு நினைவு பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது.

பா. தியாகராஜன்,

செயலாளர்.

போரூர்

போரூர் கார்காத்தார் சங்கத்தின் 8–ம் ஆண்டு விழா (24.09.2023) அன்று R.K.C. திருமண மஹாலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 2 மணியளவில் குழச்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மற்றும் 10, +2 மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. சங்கத்தின் பொது குழுவில் தலைவர், செயலாளர், பொருளாளர் உரை நிகழ்வுகள் மற்றும் ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின் போரூர் பகுதியிலுள்ள மருத்துவர்கள் (நரம்பியல், மகப்பேறு, இதயவியல், பிஸியோதெரபி, சர்க்கரைநோய், பல் மருத்துவம், நெஞ்சக மருத்துவம், தோல் மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், மயக்கவியல் மற்றும் பொது மருத்துவம்) என அனைவருடைய கலந்துரையாடல், நமது சமூக உறவுகளுக்கு பயனுள்ளதாக அமைந்தது. அனைத்துமருத்துவர்களும் சங்கத்தின் சார்பில் கௌரவிக்கப்பட்டனர். விழாவில் கலந்து கொண்ட சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் சிறப்பு பரிசு வழங்கப்பட்டது மற்றும் சிறப்பு விருந்தினர்கள் உரை மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்தது. விருத்தாசலம் Lion PMJF V. ரெத்தினசபாபதி, ஒன்றிய கார்காத்தார் சங்க தலைவர் அவர்கள் உரை மிகச்சிறப்பாக அமைந்தது மற்றும் சென்னை கார்காத்தார் சங்க தலைவர் சபா. சிவக்குமார், மாநில சங்க தலைவர் Dr. K.K.R.K. சுரேஷ், பொது செயலாளர் பாலசுப்ரமணியன், அமைப்புச் செயலாளர் கைலை சண்முகம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நமது செயற்குழு உறுப்பினர் அனைவரையும் நமது சங்கம் மூலம் கௌரவிக்கப்பட்டனர். அகவை 60, 80 முடிந்தவர்களுக்கு சங்கத்தின் மூலம் கௌரவிக்கப்பட்டனர். பியானோ, பரதநாட்டிய நிகழ்வுகள் சிறப்பாக அமைந்தது. நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. வந்திருந்து சிறப்பித்த கிளை சங்க நிர்வாகிகள், கார்குல சொந்தங்கள் அனைவருக்கும் போரூர் கார்காத்தார் சங்கம் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறது. குலுக்கல் பரிசு நிகழ்த்தப்பட்டு 30 நபர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. இரவு 8 மணியளவில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

S. சந்திரமோகன்
செயலாளர்

பெருங்களத்தூர் :

சங்க செயற்குழு கூட்டம் 15–10–2023 சிவாலி ஹாலில் சங்க துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்க செயலாளர் திரு. G. இராஜகோபாலன் அவரக்ளின் வரவேற்புடன் அனைவரும் இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாட இனிதே துவங்கியது.

சென்ற கூட்டம் வண்டலூரில் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்த கன்னியாகுடி திரு. G. முத்துகுமாரசாமி அவர்களுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது. இன்றைய கூட்டத்தில் திரு. G. கலியபெருமாள் (இளையபெருமாநல்லூர்) புதிய உறுப்பினராக இணைந்தார்கள். ஆண்டு சந்தா நிலுவை வசூல் குறித்தும் விவாதிக்கப்பட்டு, ஆண்டு சந்தா நிலுவையை பகுதிவாழ் உறுப்பினர்களிடம் வசூலிக்க வலியுறுத்தப்பட்டது.

2024–ஆம் ஆண்டிற்கான காலண்டர் அச்சடிப்பது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன் அவர்கள் தலைமையில் சங்க நிர்வாகிகள் இறுதி முடிவெடுக்க அதிகாரம் அளிக்கப்பட்டது. பொருளாளர் உடல் நலம் இன்றி இருப்பதால் செயலாளர், நிதிநிலை / இருப்பு அறிக்கையை வாசிக்க, பதிவு செய்யப்பட்டது. விளையாட்டு போட்டிகள், 5–வது ஆண்டு விழா ஆகியவற்றை சிறப்பாக நடத்திட செயற்குழு உறுப்பினர்களை நிதி திரட்ட கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு விளையாட்டு போட்டிகள் மற்றும் இதர போட்டிகள் 24–12–2023 / 25–12–2023 அன்று நடத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது. 5–ம் ஆண்டு விழாவினை சிறப்பாக நடத்துவது பற்றி விரிவாக விவாதித்து 7–01–2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்த தீர்மானிக்கப்பட்டது.

30–09–2023 அன்று தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் 32 ஆண்டுகள் பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற திரு. B. பாபு அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக பாராட்டி பொன்னாடை அளித்து கௌரவிக்கப்பட்டார்கள்.

சங்கத்தின் இணைச்செயலாளர் சிதம்பரம் திரு. V. சேகர் அவர்கள் நன்றி நவில தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

- G. இராஜகோபாலன்,
செயலாளர்.

புதுச்சேரி

புதுச்சேரி, அண்ணா நகர், 2வது குறுக்கு தெரு எண்.26-A-ல்தமிழ்நாடுகார்காத்தார்சங்ககூட்டமைப்பு துணைத்தலைவர் திரு. M.A.J. ராஜேந்திரன் அவர்கள் இல்லத்தில் அன்னாரின் தலைமையில் 1.10.23 அன்று சங்க கூட்டம் நடைபெற்றது.

புதுச்சேரி சங்கத்தின் தலைவர் திரு. J. ராஜன்பாபு அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த சொந்தங்களை வரவேற்றார்கள். 30.09.2023 அன்று பெண்ணாகடம் நமது மாநில பொதுக்கூட்டத்தில் புதுச்சேரி திரு. M.A.J. ராஜேந்திரன் அவர்களை மாநில துணைத் தலைவராக தேர்வு செய்து பொதுக்குழுவில் ஒப்புதல் தந்தமைக்கு புதுச்சேரி கார்காத்தார் சங்கம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

மாநில சங்கத்தால் புதிதாக துவங்கப்பட்ட அறக்கட்டளைக்கு புதுச்சேரி கார்காத்தார் சங்கம் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

திருமதி சௌமியா குமார் அவர்கள் அடுத்த மாத கூட்டத்திற்கு ஆண்கள், பெண்கள் இருவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

திரு. S. சிவசண்முகம், திரு. G. பத்மநாதன், திரு. G. ஞானசேகரன், திரு. S. ராமலிங்கம், திரு. P.S. தமிழ்செல்வன், திரு. T. பாலகிருஷ்ணன், திரு. R. பாலமுருகன், திருமதி. பிரேமா ராஜேந்திரன் ஆகியோர் சங்கத்தின் வளர்ச்சி, ஒற்றுமை பற்றியும் மாதக் கூட்டத்தை ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஒவ்வொரு சொந்தங்களின் இல்லத்தில் நடத்துவது என்றும், நோக்கம் நேரிடையான அறிமுகம் ஒருவருக்கு ஒருவர் முடிந்த உதவிகளை செய்து கொள்வது என்றும், மாதக் கூட்டம் நடத்தும் சொந்தங்கள் அதிகபடியான விருந்தோம்பலுக்கு செலவு செய்யாமல் அதிகபட்சம் தேனீர் மட்டும் கொடுத்தால் போதும் என்றும் தெரிவித்தார்கள்.

அடுத்த மாதக் கூட்டத்தை 5.11.23 ஞாயிற்றுக்கிழமை திரு. P.S. தமிழ்செல்வன் அவர்கள், சொக்கநாதன்பேட்டை ராமலிங்கா நகர், 3வது கிராஸ், எண். 15–ல் உள்ள அவர்கள் இல்லத்தில் (தமிழ் மலர் இல்லம்) நடத்த முன்வந்தார்கள். கூட்டம் அதனை ஏற்றுக்கொண்டது. திரு. K. ராஜேந்திரன் மற்றும் திருமதி பிரேமா ராஜேந்திரன் அவர்கள் வந்திருந்த சொந்தங்களுக்கு பிஸ்கட், சமோசா, தேநீர் கொடுத்து உபசரித்தமைக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

– J. ராஜன்பாபு தலைவர் 9600968628

கடலூர் :

சங்க கூட்டம் 08–10–2023 அன்று தலைவர் தலைமையில் தொடங்கியது. செயலாளர் வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில் புதிய சேமிப்புத் திட்டம் தொடங்கப்பட்டு அக்டோபர் 2023 மாதத்திற்குரிய பயனாளி தேர்வு செய்யப்பட்டார். அவ்வாறே மகளிர் சேமிப்புத் திட்டங்களின் இருபயனாளிகளும் தேர்வு செய்யப்பட்டார்.

தலைவர் பேசும் போது சேமிப்புத் திட்டங்களை தொடர்வதற்கான அவசியம் பற்றித் தெரிவித்தார். மேலும் எதிர்வரும் 17–12–2023 அன்று பிற்பகலில் நடைபெற உள்ள கடலூர் மண்டல ஒப்புரவு சிறப்பிதழ் வெளியிடுவது குறித்து விவாதித்து, மேற்படி ஒப்புரவு சிறப்பு வெளியீட்டிற்கு விளம்பரங்கள், கதை, கட்டுரை, கவிதைகளை சங்க உறுப்பினர்கள் ஒப்புரவு அலுவலகத்திற்கு 05–11–2023 க்குள் நேரடியாக அனுப்பிட அன்புடன் கேட்டுக்கொள்ளப்பட்டனர். கடலூர் மாவட்டம், ந–––டு நாட்டின் ஒரு பகுதி என்பதால் அதன் சிற்ப்புகள் ''கார்காத்தார் ஒப்புரவு'' சிறப்பு வெளியீட்டில் பங்கு பெற்றிடச் செய்திடும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

''கார்காத்தார் ஒப்புரவு'' இதழிற்கான சந்தாவினை ஒவ்வொரு குடும்பத்தினரும் செலுத்தி பெற்றிட சிறப்பு முகாம்நடத்திசந்தாதாரர் எண்ணிக்கை அதிகரித்திட கேட்டுக்கொள்ளப்பட்டது. 17–12–2023 அன்று முற்பகலில் சிதம்பரம் *V.M.* வாண்டையார் திருமண மண்டபத்தில் நடைபெறும் சிதம்பரம் பகுதி மங்கல சந்திப்பிற்கும், அன்றே பிற்பகலில் 2.30 மணியளவில் நடைபெற உள்ள ''கார்காத்தார் ஒப்புரவு'' சிறப்பிதழ் மாவட்டத்தில் மாநில பொறுப்பாளர், ஒப்புரவு நிர்வாகிகள், கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். எனவே நமது சங்க உறுப்பினர்கள், மகளிரணி, ஆடவர் அணி ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் பெரும் அளவில் கலந்து கொள்ளவும், ஒத்துழைப்பு நல்கிடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மகளிர் அணியினர் தேநீர், சிற்றுண்டி வழங்கினர். திரு. சிவகுருநாதன் மண்டல செயலாளர் கலந்து கொண்டு விழா சிறக்க நமது சங்கத்தின் பங்களிப்பினையும், அனைத்து (மண்டலத்திலுள்ள) சங்கங்களும் பெரும் அளவில் கலந்து கொள்ளவும், ஒத்துழைப்பு நல்கியும், சிதம்பரம் நகர சங்கத்தின் பொறுப்பாளர்களுடன் இணைந்து செயல்பட்டு விழா சிறப்புற தங்களின் பங்கினையும், ஆலோசனைகளையும் நல்கிடக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சங்க உறுப்பினர் ஆனந்து நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

– தலைவர்.

திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) :

28–09–2023 அன்று விருத்தாசலம் கார்காத்த வேளாளர் கூட்டமைப்பும், பூதாமூர் கார்குல நலச்சங்கமும் இணைந்து 2023 – 2024 – ஆம் கல்வி ஆண்டில் 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் நமது சமுதாய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவும் 2022 – 2023–ஆம் கல்வியாண்டில் 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் Distinction பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் Neet தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனைப் படைத்த PG / UG படிக்கும் நமது சமுதாய பிள்ளைகளைப் பாராட்டி கௌரவிக்கும் விழாவாக கார்காத்த வேளாளர் கூட்டமைப்பு, விருத்தாசலம் கிளைத் தலைவர் திரு. இரா. பன்னீர்செல்வம் பிள்ளை அவர்கள் தலைமையிலும், திரு. K.A. நடனசபாபதி பிள்ளை, திரு. வைத்தியநாதம் பிள்ளை, திரு. ஜெயராமன் பிள்ளை இவர்களின் முன்னிலையிலும் கூட்டம் சீரும் சிறப்பாக நடைபெற்றது.

இறைவணக்கத்துடன் திரு. சி. செல்வமணி பிள்ளை வரவேற்புரை ஆற்றவும், தலைமையுரை தலைவர் திரு. இரா. பன்னீர்செல்வம் பிள்ளை அவர்கள் உரையாற்றவும் விழா இனிதே தொடங்கியது. விழா நிகழ்ச்சிகளை திரு. S. இராதாகிருஷ்ணன் பிள்ளை தொகுத்து வழங்கினார்கள்.

ஆண்டறிக்கையை செயலாளர் திரு. J. சந்திரசேகரன் பிள்ளை அவர்கள் வாசிக்கவும், நிதி நிலை அறிக்கையை பொருளாளர் திரு. K. சுப்ரமணியன் பிள்ளை அவர்கள் வாசிக்கவும் அவற்றினை வந்திருந்த உறுப்பினர்களின் கரவொலி மூலம் நிறைவேற்றப்பட்டன.

சிறப்பு விருந்தினர்கள் மாநில கார்காத்தார் சங்கம் கூட்டமைப்பு துணைத்தலைவர் திரு. தி. திருநாவுக்கரசு பிள்ளை அவர்களும், மண்டலச் செயலாளர்கள் திரு. Er. S. பாலசுப்ரமணியன் பிள்ளை அவர்களும், திரு. A.V. வேல்முருகன் பிள்ளை அவர்களும் மற்றும் பல நம் சமுதாய சான்றோர்களும், ஆன்றோர்களும் கார்குல மக்களின் ஒற்றுமை குறித்தும், கார்குல மக்களின் உயர்ந்த பண்பு, கலாச்சாரம், வேலை வாய்ப்பு குறித்து விரிவாக விளக்கினார்கள். சிறப்பு விருந்தினர்களும் நம் குல சான்றோர்களும், ஆன்றோர்களும் அறுபத்தெட்டு (68) மாணவர்களுக்கு ரூபாய் 88500/= (ரூபாய் எண்பத்தெட்டு ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) கல்வி உதவித்தொகையாக வழங்கியும், பத்து (10) நம் குல பிள்ளைகளுக்கு கேடயங்களையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களுக்கு சௌடாம்பிகை மற்றும் மம்மூஸ் நிறுவனங்கள் இனிப்பு, காரம், காபி வழங்கி சிறப்பு செய்தார்கள்.

கல்வி உதவித்தொகையினை மாநில அளவில் கொடுத்து வருகிற கார்குல கர்ணன் திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கும், இக்கூட்டத்தில் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையினை அளித்து உதவிய அத்துனை நல் உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் கௌரவத் தலைவர் திரு. R. இளங்கோவன் பிள்ளை அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- J. சந்திரசேகரன்,
செயலாளர்

விக்கிரமங்கலம் மகளிர் அணி

8–10–23–ல் இறைவணக்கத்துடன் பரிமளா பாலசுப்பிரமணியன் இல்லத்தில் இரா. இளஞ்சியம் ஆச்சி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இரா. பானுமதி வரவேற்றார். 25 உறுப்பினர்கள் வருகை தந்தனர்.

பரிசு பெற்றவர்கள் முதல் பரிசு வை. ரேவதி, 2–ம் பரிசு அ. மணிமேகலை, 3–ம் பரிசு அ. ராஜாத்தி. செ. சிவகாமி ஆச்சி, ச. லலிதா ஆச்சி தேனீர் உபசரித்து உதவினர். முன்னிலை: மு. ஜெயலட்சுமி, வி. கலா, து. தெய்வானை.

தீர்மானம் : ஐஸ்வர்யம் மகளிர் சுயஉதவி குழு என்று பெயர் சூட்டப்பட்டது. வங்கி பணம் தேவைப்படும் நபர்களுக்கு குறைந்த வட்டியில் உதவுதல் என்று முடிவு எடுக்கப்பட்டது.

திருச்சி சங்க பொன்விழாவுக்கு தகுந்த தகவல் யாரும் தெரிவிக்கவில்லை. இனி வரும் காலங்களில் விக்கிரமங்கலம் மகளிரணிக்கு தகவல் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

தகவல் : தலைவர் இளஞ்சியம் 6381166565, செயலாளர் : பானுமதி 9943508998

7–ம் நூற்றாண்டிலே மந்திர ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டு என்று தமிழும் சைவமும் மலர வித்திட்ட திருஞானசம்பந்தர் பற்றி உரை "தெய்வமொழி தமிழே" என்று விளக்கப்பட்டது. இனிதே சி. கனிமொழி நன்றியுரையுடன் முடிவுற்றது.

ரா. சத்தியமூர்த்தி,
செயலாளர்.

குமராட்சி ஒன்றியம் :

15–10–23 அன்று ஒன்றிய செயற்குழு கூட்டம் சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. A.G. சிவராமன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைவர் தனது வரவேற்புரையில் கட்டிடத் திறப்பு விழாவிற்கு அயராது உழைத்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார். 2024–ம் ஆண்டு நாட்காட்டி அடக்கவிலைக்கே தருவித்து தருவது என்று முடிவெடுக்கப்பட்டது. கட்டிட வேலை பாக்கி இருப்பதை தொடர்ந்து நிதி வசூலிப்பது எனவும் புகைப்படம் வைப்பது மற்றும் கல்வெட்டில் பெயர் சேர்ப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. ஒன்றிய அரங்கத்தில் உள்ள நூலகத்திற்கு முன்னாள் தலைவர் " மேலவன்னியூர் திரு. G. வெங்கடேசன் பிள்ளை நினைவு நூலகம் " என பெயரிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அரங்கத்தில் முதல் நிலையாக பகல் நேர நிகழ்வுகளுக்கு கேட்போருக்கு கொடுத்து உதவுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. 17–12–23–ல் நமது சிதம்பரம் பகுதியில் நடைப்பெற உள்ள ஒப்புரவு எழுச்சி விழா மற்றும் மங்கள சந்திப்பில் பெருவாரியாக கலந்து கொண்டு சிறப்பிப்பது என முடிவெடுக்கப்பட்டது.

ஒப்புரவுக்கு அதிக அளவில் சந்தா சேர்ப்பது என்றும் விளம்பரங்கள் பெற்றுத்தருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பொருளாளர் திருமதி. R. திலகம் நன்றி கூறி கூட்டம் நிறைவுற்றது.

24–9–23 அன்று எங்கள் சங்கத்தின் கட்டிடத் திறப்பு விழாவினை ஒட்டி வெளியிடப்பட்ட முப்பெரு விழாவில் வெளியான மலரில் பாரம்பரியமான நெய்வாசல் சங்கத்தினை குமராட்சி ஒன்றியத்தில் இணைக்கப்பட்ட சங்கம் என்பது விடுப்பட்டுள்ளது. குமராட்சி ஒன்றியத்தில் நெய்வாசல் சங்கம் திறம்பட செயல் புரியும் கிளை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

S. ராமச்சந்திரன், செயலாளர். 9486455841

சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 7–10–23 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. கல். சுகந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது. உறுப்பினர்கள் ஆண்டு சந்தாவை உயர்த்துவது என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி ஆண்டு சந்தா Rs. 200/- லிருந்து Rs. 300/- ஆக தீர்மானிக்கப்பட்டது. 2024 ஆண்டிற்க்கான நாட்காட்டி பற்றி விவாதிக்கப்பட்டு, அச்சகத்தில் கொடுக்கப்பட்டது.

சீர்காழி சட்டநாதன் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட ஐம்பொன் சிலை மற்றும் செப்பேடுகளை கோயிலிலேயே வைத்து பராமரிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த கடிதத்திற்கு 10–10–2023 அன்று நேரில் வந்து விளக்கமளிக்குமாறு தபால் வந்தது. அதன்படி 10–10–2023 மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரிடம் நேரில் சென்று கோயிலிலேயே பராமரிக்க வேண்டும் என்று விளக்கமும், கடிதமும் கொடுக்கப்பட்டது.

சங்கத்தின் மூத்த உறுப்பினர், C.M. Trust-ன் முன்னாள் தலைவருமான திரு. M.A. சீனுவாசன் பிள்ளை (தலைமை ஆசிரியர் ஓய்வு, சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளி) அவர்கள் கல்வி உதவி தொகையாக சுள. 10,000/– வழங்கியுள்ளார்கள், தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தருவதாக கூறியுள்ளார்கள், சீர்காழி சங்கத்தின் சார்பாக அவர்களுக்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்.

– மு. சுகுந்தவனநாதன்,,
தலைவர்.

மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 27–09–23 அன்று மணிக்கிராமம் சிவன் கோவிலில் சங்க தலைவர் திரு. ஆ. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. தலைவர் சிவபுராணம் வாசிக்க செயலர் திரு. G. அன்பழகன் அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. T. கபிலன் வரவு செலவுகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது.

சங்க உறுப்பினர்களின் குடும்பம் செப்டம்பர் 4, 5, 6 தேதிகளில் தலைவர் தலைமையில் இராமேஸ்வரம், திருச்செந்தூர், மதுரை, பிள்ளையார்பட்டி, குன்றத்தூர், அழகர்மலை ஆகிய ஊர்களுக்கு இன்ப சுற்றுலா சென்று வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. பொருளர் இயற்கை விவசாயத்தை எடுத்துரைத்து எல்லோரும் பின்பற்றும்படி கேட்டுக்கொண்டார். திரு. முரளி நன்றி கூற நாட்டு பண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன், செயலர்.

செம்பொன்னார் கோவில் :

சங்க கூட்டம் 06–10–2023 அன்று மீனாட்சி நகரில் வசித்து வருபவரும், செம்பொன் ஒன்றிய சங்க ஒருங்கிணைப்பாளரும் திருவிடைகழி கிராமத்தை பூர்வீகமாக கொண்ட திரு. ச. வரதராஜன் பிள்ளை அவர்கள் சங்கத் தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் அவரது தலைமையில் கூட்டத்தை ஏற்று போற்றி நடத்தினார்கள். இறைவணக்கம் செல்வன் S. பிரியதர்ஷன் பாடிடவும், வரவேற்புரை திரு. ச. வரதராஜன் பிள்ளை ஆற்றிடவும், சென்ற மாத கூட்ட அறிக்கை மு.ம. செயலாளர் திரு.

கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், வரவு – செலவு அறிக்கை பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது.

தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை அவர்களது தலைமை உரையில் மாநில சங்கம் பெண்ணாடத்தில் நடத்திய பொதுக்குழு கூட்டத்தில் ஒன்றிய அளவில் கலந்து கொண்டது பற்றியும் மேலும் மெய்கண்டார் திருக்கோவிலுக்கு அறக்கட்டளை அமைத்து அதற்கு மாதந்தோறும் சந்தா வசூல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பேசியதற்கு ஆதரவு தெரிவித்தும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றியும் தெளிவாக பேசினார்கள். முன்னாள் மாநில துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் அவர்கள் தமது உரையில் கூட்டம் நடத்திய திரு. ச. வரதராஜன் பிள்ளை பற்றி திருவிடைகழியில் அவர்களது குடும்பம் சிறப்புடன் வாழ்ந்தது பற்றியும், அவர்களது சகோதரர்கள் ஒன்றிய சங்கத்தை திறம்பட செயல்படுத்தியது பற்றியும் அவர்களது மகன்கள் மூலம் செம்பொன் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி அவர்களது மேல் படிப்புக்கு அவர்களது குடும்பத்தார்கள் உதவியது பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் திரு. ச. வரதராஜன் பிள்ளை – கமலா தம்பதியினருக்கு சங்கம் சார்பாக சால்வை அணிவிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு குலுக்கல் முறையில் ஆண்களுக்கான பரிசு திரு. ச. ஆனந்தன் அவர்களுக்கும், பெண்களுக்கான பரிசு திருமதி. லலிதா w/o ரமேஷ் அவர்களுக்கும் கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக வழங்கப்பட்டது. குமரன் வடக்கு வீதியில் வசிக்கும் சங்க உறுப்பினர் திரு. ந. ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு சென்னையில் நடைபெற்ற மூட்டு அறுவை சிகிச்சையிலிருந்து பூரணகுணமடைய கூட்டு பிரார்த்தனை செய்விக்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக மாலை சூப்பும், இரவு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. சங்க உறுப்பினர் நக்கீரன் தெருவில் வசித்து வந்த துணைவட்டார வளர்ச்சி அலுவலர் பணிநிறைவு பெற்ற திரு. சோ. ராமகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் இறைவனடி சேர்ந்தமைக்கும், விவேகானந்தர் வீதியில் வசித்து வரும் சங்க மூத்த உறுப்பினர் திரு. ச. சீத்தாராம பிள்ளை அவர்களது துணைவியார் திருமதி. சீ. பிராணாம்பிகை அம்மாள் இறைவனடி சேர்ந்தமைக்கும் சங்கம் சார்பாக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் நன்றி கூறிட இரவு 9.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன், செயலாளர்.

பரசலூர்

01–10–2023 அன்று சங்க கூட்டம் V. சிவக்குமார் தலைமையில் T. சேகர் பிள்ளை இல்லத்தில் சக்தி இறைவணக்கம் பாட, திரு. G. சேகர் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

சென்ற மாத அறிக்கையை திரு. ஏ. சிவக்குமார் பிள்ளையும், நிதிய அறிக்கையை திரு. S.M. விஜய் பிள்ளை வாசிக்க, நிதிய பதிவேடுகள் அனைத்தும் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை கூறினார்கள்.

செயலர் வீ. கண்ணன், மற்றும் தலைவர் மு. கோவிந்தராசன் பிள்ளை தலைமையில் 12 பேர் கொண்ட குழு ஒன்று அயோத்தி, அலகாபாத், வாரணாசி போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வந்தது, தருமபுரம், 27வது குருமகா சந்நிதானம் அவர்களிடம் பிரசாதம் கொடுத்து அருளாசி பெற்றனர்.

மாதா மாதம் WhatsApp மூலம் கூட்டம் நடத்தப்படும் இடத்தை தெரியப்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பில் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது.

குலுக்கலில் ஆண்களுக்கான பரிசை S. இரமேஷ், பெண்களுக்கான பரிசை S. வள்ளியும் பெற்றனர்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் திரு. T. சேகர் மற்றும் மலர்விழி சேகர் அவர்களுக்கு V. சிவக்குமார் மற்றும் இராஜம்மாள் சால்வை அணிவித்தனர்.

ராமு நகர் திரு. M. செந்தில், M. சாமிநாதனின் தாயார் திருமதி. M. சரோஜா அவர்கள் இயற்கை எய்தியதை முன்னிட்டு இறுதி சடங்கை சங்கத்தின் சார்பில் நல்ல முறையில் செய்யப்பட்டது. 16–ம் நாள் படத்திறப்புவிழாவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. கூட்டம் முடிவில் இயற்கை எய்திய திருமதி. சரோஜா மருதவாணன் அவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. S. செந்தில்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்,

செயலாளர்.

செல் : 9894960438

ஆக்கூர் :

சங்கக்கூட்டம், அக்டோபர் 8–ந் தேதி அன்று சிவன்கோவிலில் நடைபெற்றது. திரு. G. பிரகதீஸ்வரன் பிள்ளை முன்னிலையில் திரு. K. முத்துக்குமார் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு. S. சுரேஷ்மணி பிள்ளை அவர்கள் இறைவணக்கம் பாடினார்கள்.

நல்லாசிரியர், திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை வரவேற்புரையாற்றி கூட்ட நிகழ்வுகளைத் தொடங்கி வைத்தார்கள். செயலர் திரு. R. கோவிந்தராசு பிள்ளை சென்றக் கூட்ட அறிக்கையினை வாசித்தார்கள். பொருளர், திரு. ஆ. சுந்தரேசன் பிள்ளை நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பிக்க சங்கம் அதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

சங்கத் தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் ஆக்கூர் சிவன்கோவில் திருப்பணிகள் விரைவில் தொடங்கப்பட வேண்டும் எனவும் உபயமாக திருப்பணி செய்பவர்களிடம் தொகையாகப் பெற்று பொதுவில் செலவு செய்து உதவலாம் எனக் கூறினார்கள்.

கௌரவத்தலைவர் திரு. Dr. K. பாலக்கிருஷ்ணன் பிள்ளை அவர்கள், மகாளய பட்சம் என்பது பித்ரு உத்ஸவக்காலம், நீர்க்கடன் செய்ய விசேஷமான நாள். அன்று, நாம் முன்னோருக்கு கொடுக்கும் தர்ப்பணம் அவர்களை மகிழ்விக்கும் அதன் மூலம் நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவம் நீங்கி தலைமுறைக்கு நன்மை கிடைக்கும். என்று மறவாமல் முன்னோர்களை நினைத்து எள்ளும் தண்ணீரும் விட வேண்டும். முன்னோர் படங்களுக்கு பூக்கள் சாத்தி வணங்கி, காகத்திற்கு உணவளிக்க வேண்டும். அவர்களை நினைத்து நம்மால் முடிந்த தானங்களை செய்து முன்னோர்களை நினைத்து பூஜையறையில் வழிபாடு செய்ய வேண்டும்.

தானம் செய்ய இயலாதவர்கள் தெற்கு திசை நோக்கிநின்றுதலைக்குமேல்கைகுவித்துமுன்னோரை நினைத்து வணங்க வேண்டும் என்று கூறினார்கள். இதனை பின்பற்றி தத்தமது முன்னோர்களுக்கு, தர்ப்பணம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து திரு. G. கலியபெருமாள் பிள்ளை, நன்றியுரையாற்றினார்கள்.

பூர்வீகம் ஆக்கூர் – தஞ்சாவூரில் வசித்து வந்த திரு. S. திருச்செல்வம் அவர்கள் 26–9–2023 அன்று இறைவனடி சேர்ந்தமைக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து அன்னாரின் ஆன்மா சாந்தியடைய மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, கூட்டம் நிறைவுற்றது.

– G. செல்வக்குமார்.

செல் : 9942480320

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு : சங்க கூட்டம் 05–10–23 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது. சங்க உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசினார் பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்: (1) சென்ற 30–09–23 அன்று பெண்ணாகடத்தில் நடந்த மாநில பொதுக்குழு கூட்டத்தில் கார்காத்தார் மாநில சங்கத்திற்கு நிதி ஆதாரம் ஏற்படுத்துவது என எடுக்கப்பட்ட முடிவுக்கு இச்சங்கம் சார்பில் வரவேற்பும், நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

(2) கார்காத்தார் மாநில சங்க நிதிக்கு, சங்கத்தை சேர்ந்த ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும், அவர்கள் தம் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் தலா ரூ. 12/– வீதம் நிதி கொடுக்க ஒப்புதல் பெறப்பட்டது.

(3) மனித நேய அறக்கட்டளை மூலம் 2023 – 2024 கல்வியாண்டிற்கு நிதியுதவி பெற தகுதியுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பம் பெற்ப்பட்டு, பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டு, அனுப்பி வைக்கப்பட்டது.

பின்னர் நன்றி தெரிவிக்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிவுற்றது.

– பால. இலட்சுமணன்,

தலைவர்.

9443783743

80. இராதாநல்லூர்

80. இராதாநல்லூர் சங்க கூட்டம் 8–10–2023 அன்று செயலாளர் இரா. மு.அ. செல்வம் (எ) இராஜா முத்தையா அவர்கள் இல்லத்தில் தலைவர் தி. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க செயற்குழு உறுப்பினர் இரா. மு.அ. பாபு (எ) சண்முகநாதன் அவர்கள் வரவேற்க கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) 30–9–2023 அன்று பெண்ணாகடத்தில் நடைபெற்ற பொதுக்குழுவிற்கு நமது சங்க தலைவர் மற்றும் செயலர், மணிக்கிராமம், இலையமுது கூடம், சீர்காழி சங்கத்தினருடன் மாநில துணைத்தலைவர், மண்டல செயலாளர் ஆகியோர் இணைந்து குழுவாக கலந்து கொண்டு சிறப்பிக்கப்பட்டது. இனி வருங்காலங்களில் மாநில சங்கத்தினால் நடத்தப்படும் கூட்டங்களுக்கு மாநில துணைத்தலைவர், மண்டல செயலாளருடன், இராதாநல்லூர், இலையமுது கூடம், மணிக்கிராமம் மற்றும் சீர்காழி

சங்கத்தினருடன் கலந்து கொள்வது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 13–10–2023 அன்று பிறந்த நாள் காண இருக்கும் நமது சங்க செயற்குழு உறுப்பினர் இரா. வெங்கடேஸ்வரன் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவிப்பதென தீர்மானிக்கப்பட்டது. 2024–ஆம் ஆண்டிற்கான மாதாந்திர நாட்காட்டி அச்சிட்டு வழங்க தீர்மானிக்கப்பட்டது. சங்க செயலர் இரா. மு.அ. செல்வம் (எ) இராஜ. முத்தையா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– தி. முத்துக்குமரசாமி,
தலைவர்.
9443645646

மேலையூர் (பூம்புகார்)

சங்க கூட்டம் 01–10–23 அன்று செயலர் இல்லத்தில் தலைவர் மற்றும் செல்வன். நரேந்திரனின் இறைவணக்கத்துடன் துவங்கியது.

சங்க செயற்குழு உறுப்பினரின் துணைவியார் திருமதி. சாந்தி அவர்கள் மாநில அளவில் Dr. இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது பெற்றமைக்கு வாழ்த்து தெரிவித்து பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

பொருளர் ஜெயபாலன், அவர்களின் 50–ஆவது திருமண நாளுக்காக, உறுப்பினர் ஷீலா அவர்களுக்கு ரூ. 5000/– உதவித்தொகை அளித்தார். சங்க உறுப்பினர்கள் பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

நமது சங்க உறுப்பினர்கள் N. பாண்டியன் மற்றும் R. வெங்கடேசன் வீட்டுத் திருமண விழாக்களில் பங்கேற்று மணமக்களுக்குச் சந்தனமாலை அணிவித்து வாழ்த்துப்பா படித்து அளிக்கப்பட்டது. பாண்டியன் அவர்கள் திருமண அன்பளிப்பாக ரூ. 3000/–ம், வெங்கடேசன் அவர்கள் ரூ. 1000/–ம் சங்கத்திற்கு வழங்கினர். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

உறுப்பினர்களுக்குத் தேனீர் விருந்தளித்த பொன். அகோரம் மற்றும் M. பரணீதரனுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சங்க உறுப்பினர்களின் விருப்பத்திற்கிணங்க ஜனவரி மாதம் 7–ஆம் தேதியன்று ஆண்டு விழா நடத்துவதென ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் இணைச்செயலர் S. அகோரத்தினுடைய நன்றியுரைக்குப் பின் கூட்டம் நிறைவெய்தியது.

M. பரணீதரன்,
செயலர்.

விசலூர் :

அகத்தீசுவரர் திருக்கோயிலில் தலைவர் பொன். சொக்கலிங்கம் பிள்ளை தலைமையிலும் செயலர் L. ராமசெல்வம் முன்னிலையிலும் இறைவணக்கத்துடன் தொடங்கி செயலர் அறிக்கை வாசிக்க சங்க கூட்டம் அதனை ஏற்றுக்கொண்டது.

விநாயகர் கோயிலுக்கு புதிய மின் இணைப்பு வாங்குவதுசம்மந்தமாகவும்நெல்கொள்முதல்நிலையம் மூலம் வந்த தொகை சங்கரன்பந்தல் அஞ்சலகத்தில் பாலகிருஷ்ணன், கோ. மணிகண்டன் S. இவர்களது பெயரில் டெபாசிட் செய்யவும் கருத்துகள் எட்டப்பட்டு அவற்றை சங்கம் ஏற்று கொண்டது. 16 ஆண்டு கும்பாபிஷேக தின வரவு செலவு சொல்ல சங்கம் அதனை ஏற்றுக்கொண்டது.

மாதா மாதம் நடைபெறும் ருத்ரஹோமம் பௌர்ணமி தின கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு மாத சந்தா செலுத்தி சங்கத்திற்கு வலு சேர்த்திட வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- L. ராமசெல்வம்,
செல் : 9750806991

திருவாரூர் :

சங்கத்தின் மாதாந்திர கூட்டம் 15–10–2023 அன்று தருமையாதீன ராஜன் கட்டளை அரங்கில் நடைபெற்றது. கூட்டம் துணைத்தலைவர் கண்ணபிரான் பிள்ளை தலைமையிலும் திரு. சித்தார்த்தன் பிள்ளை முன்னிலையிலும் நடந்தேறியது.

பனங்காடி பொன்னுசாமி பிள்ளை அவர்கள் இறைவணக்கம் பாடி கூட்டத்தை தொடங்கி வைத்தார்கள். திருமருகல் பாலசுப்ரமணிய பிள்ளை சிறப்புரையாக சங்கம் நடத்தும் வழிமுறைகளை கூறினார்கள். செயலர் சோமசுந்தரம் அவர்கள் ஆன்மீக உரையாக திருவாரூர் மாணிக்கநாச்சியார் சரிதத்தை மிகவும் விரிவாக சிறப்புடன் கூறினார்கள். திருவாரூர் அறிவழகன் பிள்ளை சங்க சென்ற கூட்ட அறிக்கை நிதி நிலை அறிக்கை வாசித்து உறுப்பினர்கள் ஒப்புதல் பெற்ற துணைத்தலைவர் கண்ணபிரான் பிள்ளை கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் வரவேற்பு உரையில் பொன்னாடத்தில் நடந்த பொதுக்குழு நிகழ்வுகளை கூறினார்கள். மாநில சங்க ஆண்டு அறிக்கை, நிதி நிலை அறிக்கை ஆகியவற்றை அனைவருக்கும் வாசித்து கட்டினார்கள். மற்றும் 10–9–23 ஞாயிறன்று திருவாரூர் புலிவலத்தில் நடந்த இளைஞரணி செயலாளர் கமலக்கண்ணன்

திருமணத்தில் கலந்து கொண்ட நமது மாநிலத் தலைவருக்கும் மற்றும் கலந்து கொண்ட சங்க நிர்வாகிகள் உறுப்பினர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொண்டார்கள். திருமணத்திற்கு சங்கம் சார்பில் வாழ்த்து மடல் கொடுக்கப்பட்டதையும் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் தேநீர் சிற்றுண்டி திருமதி. விஜயா திருவாரூர் அவர்கள் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது. சங்கத்தின் அடுத்த கூட்டம் டிசம்பர் மாதம் நடத்தவும்,

இந்த ஜனவரி 2024–ல் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடவும்,

இந்த கூட்டத்திற்கு சிற்றுண்டி தேநீர் வழங்கிய திருமதி. விஜயா குடும்பத்தினருக்கு சங்கம் நன்றி தெரிவித்தும்,

பொதுக்குழுவில் கலந்து கொண்டு சிறப்பித்த கண்ணபிரான் பிள்ளை துணைத்தலைவர் அவர்களுக்கு சங்கம் நன்றி தெரிவித்து தீர்மானங்கள் இயற்றப்பட்டது.

திரு. கந்தசாமி பிள்ளை அவர்கள் நன்றி தெரிவித்து கூட்டத்தை இனிதுடன் முடித்து வைத்தார்கள்.

அ. சோமசுந்தரம்,
செயலாளர்.

கும்பகோணம் :

22–10–23 அன்று கொண்டாங்குடி பண்ணையார் திரு. மா. சந்திரமோகன் இல்ல வாளகத்தில் ஈடில்லா இரு பெரும் விழா (நந்தவனம் அமைத்தல், மற்றும் மாதாந்திர கூட்டம்) வாக நடத்தப்பட்டது.

அது சமயம் சங்கத்தின் சமூகப்பணிகளுக்கு வித்திட்ட இளைஞர்களின் எழுச்சி நாயகன் திரு. விஜய் வைத்தியநாதன் முயற்சியால் நந்தவனம் அமைத்து ஆலயங்களுக்கு பூக்கள் வழங்கும் விதமாக சங்க உறுப்பினர்கள் திருகரத்தால் பூ கன்றுகள் 50 நடப்பட்டது.

காலை 10.30 மணிக்கு சங்க தலைவர் திரு. தி. மா. வைத்தியநாதன் அவர்களின் தலைமையிலும், கும்பகோணம் மண்டல மாநில துணை தலைவர் திரு. S. விஜயகுமார் முன்னிலையிலும், து.தலைவர் மா. சந்திரமோகன் வரவேற்பில் மாதாந்திர கூட்டம் நடைபெற்றது.

இறைவணக்கம் திரு. ஆனந்தன் பாட கூட்டம் தொடங்கியது. செயலாளர் S. விஜயகுமார் அவர்கள் செயலாளர் அறிக்கையும் கல்வி சுழல் நிதி அறிக்கையும், A.S. பழனி அவர்கள் பொருளாளர் அறிக்கையும் அளித்தார்கள். புரவலர் நிதி அறிக்கை மு.சாமிநாதன் அவர்களும், பசிப்போர் புசிக்க குழு அறிக்கை சீ. குணசீலன் அவர்களும், அளித்தார்கள். அனைவரின் அறிக்கைகளும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் சங்கத்தின் சார்பில் தீபாவளி மற்றும் பொங்கல் விழா நடத்துவது சம்பந்தமாக சங்க தலைவர் திரு. தி. மா. வைத்தியநாதன் எடுத்துரைத்தார்கள்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு முதியோர் இல்லத்திற்கு அன்னதானம் மற்றும் ஆடை தானம் அளிப்பது மற்றும் விளக்கெரிய ஆலயங்களில் திருவிளக்கு ஏற்றவும் அபிஷேகத்திற்கு நல்லெண்ணெய் வழங்கி வருவது, நந்தவனத்தின் செயல்பாடுகள் பற்றியும் செயலாளர் திரு.S.விஜயகுமார் விவரித்தார்கள். கூட்ட முடிவில் சங்கத்தின் மகளிர் சார்பாக திருமதி. மைதிலி வைத்தியநாதன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூகநல சங்க மங்கள சந்திப்பு 2024 ஏப்ரல் முதல் வாரம் நடத்துவது எனவும் அதற்கான குழு அமைக்கவும்,

உண்ண உணவு உடுத்த உடை கருத்தில் கொண்டு நடத்தப்பட்டு வரும் தீபாவளி நிகழ்வு முதியோர் இல்லத்தில் நடத்துவது எனவும்,

2024 ஆண்டு பொங்கல் விழா தலைவர் T.M. வைத்யநாதன் அவர்கள் கண்ணாரகுடி கிராமத்தில் நடத்துவது எனவும்,

நந்தவன திட்டம் பூச்செடி நட்டு பராமரிப்பு செய்து கோவில்களுக்கு அளிப்பதற்கு இடத்தை பயன்படுத்திக்கொள்ள அனுமதி அளித்த கொண்டங்குடி திரு. மா. சந்திரமோகன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கும்பகோணம் சாமிநாத நகரில் வசிக்கும் திரு. ராதாபாய் கணவர் நமது சங்க மூத்த உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி 14–10–2023 அன்று இயற்கை அடைந்தமைக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- S. விஜயகுமார்.

தஞ்சை:

15–10–2023 அன்று சங்க கூட்டம் சங்கத் தலைவர் திரு. மு. தண்டாயுதபாணி அவர்கள் தலைமையில் ''கூட்டுறவு காலனி கற்பக விநாயகர் சொற்பொழிவு மண்டபத்தில்'' நடைபெற்றது. திரு. S. ரெத்தினவேல் சுப்பிரமணியன் வரவேற்புரை நல்கினார்கள். சங்க செயலாளர் திரு. S. மதியழகன்

கடந்த கூட்ட நடவடிக்கைகளை சுருக்கமாக கூறினார்கள். சிறப்பு அழைப்பாளர் திரு. S. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் "மனம் திறந்து பேசுவோம்" என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

நவராத்திரி வழிபாடு அதன் வரலாற்றுப் பின்னணி பூஜை முறை பற்றி விரிவாக கூறினார்கள். நமது சமூகத்திற்கே உரித்தான பாரம்பரியமான கோத்திரம், குலதெய்வவழிபாடு, திருவிளக்கீடு, திருமணம் போன்ற விழாக்களில் நாம் பின்பற்ற வேண்டிய முறைகளை, நாம், நமது இளைய சமுதாயத்திற்கு கொண்டு சேர்க்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது என்பதை வலியுறுத்தினார்கள் நமஸ்காரம் செய்தல் போன்றவற்றின் பெருமையையும் கூறினார்கள்.

மேலும் நல்ல நேரம் பார்ப்பதில் அடிப்படை விஷயங்களான ராகுகாலம், எமகண்டம், ஓரை நாழிகை பார்க்கும் முறை பற்றியும், நவ கோள்களில் தோஷங்களிலிருந்து விடுபட திருஞானசம்பந்தம் அருளிய "கோளறு பதிகம்" பாராயணம் செய்து நலம் பெறுவோம் என ஆலோசனை வழங்கினார்கள்.

திரு. R. சண்முகம், காமதேனு அறக்கட்டளைக்கு பொருளாளராக ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். திரு. S. ரெத்தினவேல் சுப்ரமணியன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். புதிய உறுப்பினர்கள் இருவர் அறிமுகம் செய்துக்கொண்டனர்.

காமதேனு அறக்கட்டளைக்கு நன்கொடையாக கீழ்க்கண்டவர்களால் வழங்கப்பட்டது.

திரு. S. திருஞானசம்பந்தம் ரூ. 5,000/–, திருமதி. T. துர்க்காசெல்வி, (S. திருஞானசம்பந்தம் துணைவியார்) ரூ. 5,000/–, திரு. S. ரெத்தினவேல் சுப்ரமணியன் ரூ. 5,000/–ம் மேற்படி மூவருக்கும் திரு. S. மோகன்குமார், நன்றியினை தெரிவித்தார்கள்.

அரசுப் பணியிலிருந்து ஓய்வுப்பெற்ற திரு. B. செந்தாமரை கண்ணன் (A.D.E. (Highways) அவர்களுக்கு சங்க மூத்த உறுப்பினர் திரு. S. வெங்கடேசன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்கள். திரு. B. விவேகானந்தன் ITI Training Officer அவர்களுக்கு சங்க மூத்த உறுப்பினர் திரு. R. ஞானசுந்தரம் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.

80 வயதை பூர்த்தி செய்தவர்கள் கூட்டத்திற்கு வர இயலாததால் அவர்களுக்கு, அவர்கள் வீட்டிற்கு சென்று பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்க முடிவு செய்யப்பட்டது. திரு. J. மோகன், UCO Bank அவர்களின் புதல்வி தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்வு செய்யப்பட்டார்கள். 252 வது இடம் பிடித்து அவர் வருவாய் துறையில் பணியில் சேர்ந்துள்ளார்கள். அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

1974 முதல் சங்கப் பொருளாளராக இருந்த மறைந்த திரு. S. வன்மீகலிங்கம் பற்றி (ஆடிட்டர்) சங்கப்பணிகளையும் அவர்களின் குணநலன்களையும் சங்க உறுப்பினர்கள் எடுததுக் கூறினார்கள். அதே போன்று திரு. திருச்செல்வம் டிராவல்ஸ் உரிமையாளர் 26=09–2023–ல் இயற்கை எய்தினார்கள். பின்னர் இருவருக்கும் ஆழ்ந்த அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருமதி. R. கலைச்செல்வி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

S. மதியழகன், செயலாளர்.

செல் : 944388633

மதுரை :

08–10–23 அன்று இச்சங்கத்தின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. திரு. K. இராஜேந்திரன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். தலைவர் திரு. மு. சிவசுப்பிரமணியம் அவர்கள் தமது உரையில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சங்கத்தின் பவழ விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்வது பற்றி விரிவாகப் பேசினார்.

பவழ விழா மலர் தயாரிக்கும் பொறுப்பினை மகளிர் அணித்தலைவி திருமதி. ப. குமாரிலட்சுமி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் கையேட்டினை சரி பார்த்து வெளியிடும் பொறுப்பினை திரு. K. இராஜேந்திரன் வசம் தரப்பட்டது.

மாநிலத்துணைத்தலைவர் பொறுப்பினை ஏற்றுள்ள திரு. S. உமையொருபாகம் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தினை முறையாக பதிவு செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு திரு. S. உமையொருபாகம் அவர்களிடம் வேண்டுகோள் விடப்பட்டது.

30–09–23 அன்று பெண்ணாடகத்தில் நடைபெற்ற மாநில பொதுக்குழு கூட்டத்திற்கு செயலாளர் திரு. C.M. சொக்கலிங்கம், பொருளாளர் திரு. S. முருகன், துணைத்தலைவர் திரு. ஞ. உமையொருபாகம் துணைச்செயலாளர் திரு. N. இராமலிங்கம் சென்று கலந்து கொண்டனர். அது பற்றிய விரிவான செய்தியினை செயலாளர் கூறினார்

செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- C.M. சொக்கலிங்கம், செயலாளர்

17ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 18-8-1944

மறைவு : 20-11-2006

திருமதி. **K. கஸ்தூரி அம்மாள்**
(ஆசிரியை ஓய்வு)
கொத்தவாசல்

19ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 20-1-1924

மறைவு : 20-11-2004

திருமதி. **கு. ஞானம் அம்மாள்**
குணமங்கலம்
தங்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினர்
கொத்தவாசல், காட்டுமன்னார்குடி (Tk), கடலூர் மாவட்டம்

போரூர் கார்காத்தார் சங்கம் 8ஆம் ஆண்டு விழா - 24.09.2023

கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா-புதுச்சேரி

புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் கார்குல சொந்தங்கள் சந்திப்பு மற்றும் கார்கார்த்தார் ஒப்புரவு எழுச்சிவிழா 13–08–2023 ஞாயிறு அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. மேற்படி விழாவினை சிறப்பிக்கின்ற வகையில் ரூபாய் 55,000/–க்கான காசோலையை புதுச்சேரி கார்காத்தார் சங்க கௌரவ தலைவர் கேப்டன் மு. பிரதாபன் முன்னிலையில் தலைவர் J. இராஜன் பாபு மற்றும் செயலாளர் S. வெங்கடேசன் ஆகியோர் சென்னை கார்காத்தார் சங்க செயலாளர் கைலை. சண்முகத்திடம் 16.09.2023 அன்று வழங்கினார்கள் என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

வருந்துகிறோம்

மலர்ந்தது
23.09.1969

உதிர்ந்தது
25.10.2023

திருமதி K. **சௌமியா** (எ) **சௌந்தரநாயகி**

கன்னியாநத்தம் தெய்வத்திருவாளர்கள் G. சீனுவாசன்பிள்ளை–சேது அம்மாள் அவர்களின் மருமகளும் இளையமதுக்கூடம் தெய்வத்திரு. R. சாமிநாதப்பிள்ளை–நலமுடன் தாரா அவர்களின் மகளும் புதுச்சேரி K.G.S. குமார் அவர்களின் மனைவியும் K. ஜெய்ஸ்ரீ–ன் தாயாருமான **K. சௌமியா** (எ) **சௌந்தரநாயகி** அவர்கள் 25.10.2023 புதன்கிழமை அதிகாலை 1.40 மணியளவில் சிவலோகபதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கண் விழிக்காமல் கனவாய் மறைந்தாய் நீ
என்றும் உடனிருப்பாய் எங்களுடன்
நிறைவடைந்த வாழ்க்கை கண்டாய்
நீங்கா துயிலில் சென்றாய்

என்றும் நினைவுகளுடன்
கணவர் **K.G.S. குமார்**
மகள் **K. ஜெய்ஸ்ரீ**
மருமகன் **B. நிர்மல்குமார்**

வருந்துகிறோம்

தோற்றம்
10.09.1926

மறைவு
13.10.2023

திருமதி. **R. சீதாலட்சுமி அம்மாள்**

மயிலாடுதுறை மாவட்டம், நினைவில் வாழும் S. ராமச்சந்திரன் அவர்களின் மனைவியும் எங்களின் தாயாருமான R. **சீதாலட்சுமி** அவர்கள் 13.10.2023 அன்று இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்களின் நினைவில் வாழும்

Dr. R. பரிமேலழகன் - காஞ்சனா

Dr. R. மருதவாணன் - Dr. சித்ரா

R. வாகீசன் - வித்யா

ராதா முத்தையன்

Dr. ருக்மணி வதனம்

பேரன்கள், பேத்திகள்

கொள்ளு பேரன்கள், கொள்ளு பேத்திகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22.5.1945

மறைவு
3.11.2022

தெய்வத்திருமதி. **M. வசந்தா**

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும் இருந்து
மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து
விட்டாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை

என்றும் நினைவில் வாழும்

கணவர் **S. மாணிக்கம்**
புலவனூர், மயிலாடுதுறை மாவட்டம்
99526 53813 / 80123 65908

மகள்கள்
R. உஷா
S. திலகவதி
B. ராஜேஸ்வரி

மருமகன்கள்
A. இராமலிங்கம், சென்னை
K. சரவணன், Canada
J. பாஸ்கர், சென்னை

பேத்தி **R. சுஷ்மிதா விஷாலினி,** B.Arch., Architect, Chennai
பேரன் **S. ஹரி,** B.E., C.S. Engineer, Canada

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
03.01.1944

மறைவு
23.09.2023

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், கார்குடி கிராமம்
சாத்துகுட காலம்சென்ற திரு. வைத்தியநாதன் பிள்ளை அவர்களின் மகனும்
எங்களது தந்தையுமான

திரு. **வை. சோமசுந்தரம்** பிள்ளை
அவர்கள்.

23.09.2023 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில்
சிவலோகபதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன்
தெரிவித்துக் கொள்கிறோம்.

-: மகள்கள் :-

திருமதி.**சத்யா ராஜகோபால்**
திருமதி.**சாய்தர்சனி சிவசங்கர்**

மற்றும்
பெயரன்கள் - பெயர்த்திகள்

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th November 2023

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**